''19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.300/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ப.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பா.து.ந.க.எண்.பி3/687/2007
ஆணையர் அவர்களின் 10.08.2007 நாளிட்ட குறிப்பு

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.643/2007 பொருள் எண்.20

**இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே சுரங்கப்பாதைகள், மேம்பாலங்கள் மற்றும் அடையாறு ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் – 7 பணிகள் அடங்கிய தொகுப்பு– ஒப்பம் நிராகரிக்கப்பட்டது – ஒரு பணி விடுத்து மீதமுள்ள 6 பணிகளை இரு தொகுப்புகளாக பிரித்து ஒப்பம் கோரப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி கோரல்**

சென்னை போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலை சந்திப்புகள் மற்றும் இரயில்வே சந்திக்கடவுகளின் குறுக்கே வாகன மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப்பாதைகள் அமைக்கும் பணிகள் கீழ்க்காணும் இடங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை 2006–2007 திருத்திய விலை விவரப்படி (ரூ.லட்சங்களில்) | பணியின் மதிப்பு (ரூ.லட்சங்களில்) | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 1 | வில்லிவாக்கம் இரயில்வே சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை | 1339.50 | 672.58 | அரசாணை எண்.83 நாள்.11.06.2007 |
| 2 | கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை | 494.50 | 337.83 | அரசாணை எண்.84 நாள்.11.06.2007 |
| 3 | ஜோன்ஸ் சாலை இரயில்வே சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை | 432.90 | 265.36 | அரசாணை எண்.81 நாள்.11.06.2007 |
| 4 | மணியக்காரச் சத்திரதெருவில் இரயில்வே சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை | 1055.60 | 651.56 | அரசாணை எண்.178, நாள்.01.07.98 |
| 5 | கத்திவாக்கம் காக்ரேன் பேசின் சாலை இரயில்வே சந்திக்கடவில் வாகன மேம்பாலம் அமைக்கும் பணி. | 1220.00 | 527.23 | அரசாணை எண்.80 நாள்.11.06.2007 |
| 6 | ரங்கராஜபுரம் இரயில்வே சந்திக்கடவில் வாகன மேம்பாலம் அமைக்கும் பணி. | 1574.80 | 1189.83 | அரசாணை எண்.82 நாள்.11.06.2007 |
| 7 | ஆலந்தூர் சாலையில் உயர்மட்டப்பாலம் அமைக்கும் பணி | 603.35 | 517.00 | அரசாணை எண்.128, நாள்.09.12.1999. |

மேற்குறிப்பிட்ட பணிகளை ஒரே தொகுப்பாக ஒப்பங்கள் கோர மன்ற தீர்மான எண்.103/2007ன்படி 25.04.2007 அன்று ஒப்புதல் பெறப்பட்டது.

7 பணிகளுக்கும் ஒரே தொகுப்பாக இரண்டு முறை ஒப்பங்கள் கோரப்பட்டன. இரண்டு முறை கோரப்பட்ட ஒப்பங்களிலும் அதிக ஒப்பந்ததாரர்கள் கலந்து கொள்ளவில்லை. இரண்டு ஒப்பந்ததாரர்கள் மட்டுமே கலந்து கொண்டனர்.

மேற்படி இரண்டாவது முறை கோரப்பட்ட மறு ஒப்ப நாளான 23.07.2007 அன்றும் இரண்டு ஒப்பந்ததாரர்கள் மட்டுமே பங்கேற்றனர். அன்றைய தினமே ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணங்கள் திறக்கப்பட்டது. தொழில்நுட்ப ஆவணங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டு 25.07.2007 ஒப்பக்குழுமத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்டது. பெறப்பட்ட இரண்டு ஒப்பங்களில் திருவாளர்கள். ஜி.எஸ்.ஆர். அன்ட் கோ அவர்களது ஒப்பம் குறைந்தபட்ச தொழில்நுட்ப தகுதி இல்லாத காரணத்தினால் நிராகரிக்கப்பட்டு தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். அபான் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவெட்

லிமிடெட் அவர்களது நிதி ஆவணத்தினை மட்டும் திறப்பதற்கு பரிந்துரை செய்தது. அதன்படி 26.07.2007 அன்று நிதி ஆவணம் திறக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ. 684372954.50 ஆனது 2006-2007ம் ஆண்டு திருத்திய அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட அலுவலக மதிப்பீட்டுத்தொகையான ரூ.416138359.06 உடன் ஒப்பீடு செய்யப்பட்டதில் (+) 64.46 % சதவீதம் கூடுதல் ஆகும்.

ஒப்பந்ததாரர் தனது 30.07.2007 நாளிட்ட கடிதம் மூலம் தான் அளித்துள்ள ஒப்பத்தொகையில் 5 % விலைக்குறைப்பு செய்தனர். விலைக்குறைப்பிற்கு பின் ஒப்ப சதவீதம் (+) 56.24ரூ ஆகும். ஒப்பீட்டு படிவங்கள் 30.07.2007 அன்று ஒப்பக்குழுமத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஒப்பக்குழுமம் மீண்டும் விலைக்குறைப்பு செய்ய பரிந்துரை செய்தது. இதன் பேரில் ஒப்பந்ததாரர் தனது 2.8.2007 நாளிட்ட கடிதம் மூலம் முதல் விலைக்குறைப்புடன் சேர்த்து மொத்தம் 7 சதவீதம் விலைக்குறைப்பு செய்ய சில நிபந்தனைகளுடன் சம்மதம் தெரிவித்தார். இதனுடன் ஒப்பீட்டு படிவங்கள் 3.8.2007 அன்று ஒப்பக்குழுமத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஒப்பக்குழுமம் மேற்கண்ட பணிகளுக்காக கோரப்பட்ட ஒப்பத்தினை ரத்து செய்து விட்டு அதிக அளவில் ஒப்பந்ததாரர்கள் ஒப்பத்தில் கலந்துகொள்ளுவதற்கு ஏதுவாக வடசென்னை பகுதியை சார்ந்த பணிகள் தனியாகவும் மற்றும் தென்சென்னை பகுதியை சார்ந்த பணிகள் தனியாகவும் பிரித்து பணிக்காலம் 21மாதங்கள் என நிர்ணயித்து தனித்தனித்தொகுப்பாக மறு ஒப்பம் கோர பரிந்துரை செய்தது.

இதனிடையே இரயில்வே துறை தனது 06.08.2007 நாளிட்ட கடிதம் மூலம் கொருக்குப்பேட்டை சந்திக்கடவில் சுரங்கப்பாதை அமையும் இடத்தில் சுரங்கப்பாதை alignment-I மாற்றியமைத்து அதற்கு மாநகராட்சியின் இசைவை கோரியுள்ளது. மேலும், சுரங்கப்பாதையின் பக்க சாலை (Service Road) அமைப்பதற்காக மாநகராட்சி இரயில்வே துறையிடம் கோரியிருந்த நிலத்தில் அவர்களே நான்காவது இருப்புப்பாதை அமைத்துள்ளதால் இரயில்வே துறையிடம் இருந்து அவர்கள் நிலத்தை பெற்றுக்கொள்ள இயலாத நிலையில் உள்ளது. எனவே இத்திட்டத்தினை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு கால அவகாசம் தேவைப்படுவதால், கொருக்குப்பேட்டை சந்திக்கடவில் சுரங்கப்பாதை அமையும் திட்டத்தினை தற்போது விடுத்து எஞ்சிய 6 திட்டங்களுக்கும் மறு ஒப்பம் கோரலாம் என உத்தேசிக்கப்பட்டள்ளது, எனவே ஒப்பக்குழுமத்தின் பரிந்துரையின் பேரில் பணிகளை கீழ்க்கண்ட விதமாக இரண்டு தொகுப்புகளாக பிரித்து மறு ஒப்பம் கோரவும் ஒப்பங்கள் கோரியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு ஆணை பெறவும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் 06.08.2007 அன்று பெறப்பட்டது.

**தொகுப்பு – 1**

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை 2006-2007 திருத்திய விலை விவரப்படி (ரூ.லட்சங்களில்) | பணியின் மதிப்பு (ரூ.லட்சங்களில்) | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 1 | வில்லிவாக்கம் இரயில்வே சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை | 1339.50 | 672.58 | அரசாணை எண்.83 நாள்.11.06.2007 |
| 2 | மணியக்காரச் சத்திர தெருவில் இரயில்வே சந்திக்கடவில் வாகனச் சுரங்கப்பாதை | 1055.60 | 651.56 | அரசாணை எண்.100, நாள்.18.07.2007 |
| 3 | கத்திவாக்கம் காக்ரேன் பேசின் சாலை இரயில்வே சந்திக்கடவில் வாகன மேம்பாலம் அமைக்கும் பணி. | 1220.00 | 527.23 | அரசாணை எண்.80 நாள்.11.06.2007 |
| | மொத்தம் | 3615.1 | 1851.37 | |
| | | **தொகுப்பு – 2** | | |
| 1 | ஜோன்ஸ் சாலை இரயில்வே சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை | 432.90 | 265.36 | அரசாணை எண்.81 நாள்.11.06.2007 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | ரங்கராஜபுரம் இரயில்வே சந்திக்கடவில் வாகன மேம்பாலம் அமைக்கும் பணி. | 1574.80 | 1189.83 | அரசாணை எண்.82 நாள்.11.06.2007 |
| 3 | ஆலந்தூர் சாலையில் உயர்மட்டப்பாலம் அமைக்கும் பணி | 603.35 | 517.00 | அரசாணை எண்.90, நாள்.25.06.2007. |
| | மொத்தம் | 2611.05 | 1972.19 | |

பணிக்காலம் 21 மாதங்களாக நிர்ணயித்து, TAMILNADU TRANSPERANCY TENDER ACT AND RULESன்படி பெரும் திட்டங்களுக்கு Chapter 4ல் வணகவியல் நிபந்தனை கூறு 4 பிரிவு ஏ மற்றும் கூறு 8ன்படி Mobilisation Advance மற்றும் விலையேற்றம் சரி செய்தல் (Price Escalation) அளிக்கலாம் என்ற விதிமுறைகளின்படி ஒப்ப ஆவணத்தில் ஒப்ப விலை ஏற்றம் சரிசெய்தல் (Price Escalation), மற்றும் 10 % Mobilisation Advance என்ற ஒப்ப கூறுகளுடன் சேர்த்து ஒப்ப ஆவணம் விற்பனைக்கான கடைசி நாள் 05.09.2007 அன்று பிற்பகல் 3.00 மணி வரை என்றும் ஒப்பங்கள் சமர்ப்பித்தற்கான கடைசி நாள் 07.09.2007 அன்று பிற்பகல் 3.00 மணி வரை என்றும் குறிப்பிட்டு மறு ஒப்பம் கோரப்பட்டது. எனவே மேற்கண்ட பணிகளில் கொருக்குப்பேட்டை சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை அமைக்கும் பணியினை தற்போது விடுத்து ஏனைய 6 பணிகளையும் இரண்டு தொகுப்புகளாக பிரித்து ஒப்பங்கள் கோரப்பட்டமைக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)யின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.293/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.234/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## 29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.644/2007 பொருள் எண்.21

### வடசென்னை இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே சுரங்கப்பாதைகள் மற்றும் மேம்பாலம் – வடசென்னை தொகுப்பு – ஒப்பம் பெறப்பட்டது மன்றத்தின் அனுமதி கோரல்

சென்னை போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலை சந்திப்புகள் மற்றும் இரயில்வே சந்திக்கடவுகளின் குறுக்கே வாகன மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப்பாதைகள் அமைக்கும் பணிகள் கீழ்க்காணும் இடங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை 2006–2007 திருத்திய விலை விவரப்படி (ரூ.லட்சங்களில்) | பணியின் மதிப்பு (ரூ.லட்சங்களில்) | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 1 | வில்லிவாக்கம் இரயில்வே சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை | 1339.50 | 672.58 | அரசாணை எண்.83 நாள்.11.06.2007 |
| 2 | கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை | 494.50 | 337.83 | அரசாணை எண்.84 நாள்.11.06.2007 |
| 3 | ஜோன்ஸ் சாலை இரயில்வே சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை | 432.90 | 265.36 | அரசாணை எண்.81 நாள்.11.06.2007 |
| 4 | மணியக்காரச் சத்திரதெருவில் இரயில்வே சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை | 1055.60 | 651.56 | அரசாணை எண்.178, நாள்.01.07.98 |
| 5 | கத்திவாக்கம் காக்ரேன் பேசின் சாலை இரயில்வே சந்திக்கடவில் வாகன மேம்பாலம் அமைக்கும் பணி. | 1220.00 | 527.23 | அரசாணை எண்.80 நாள்.11.06.2007 |
| 6 | ரங்கராஜபுரம் இரயில்வே சந்திக்கடவில் வாகன மேம்பாலம் அமைக்கும் பணி. | 1574.80 | 1189.83 | அரசாணை எண்.82 நாள்.11.06.2007 |
| 7 | ஆலந்தூர் சாலையில் உயர்மட்டப்பாலம் அமைக்கும் பணி | 603.35 | 517.00 | அரசாணை எண்.128, நாள்.09.12.1999. |

மேற்குறிப்பிட்ட பணிகளுக்கான ஒப்பங்கள் ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியாக ஆகஸ்டு 2006 முதல் டிசம்பர் 2006 வரை கோரப்பட்டன. அவற்றிற்கு பெறப்பட்ட ஒப்பங்கள் 2006–2007 அலுவலக மதிப்பீடுகளை விட 35 % முதல் 46% வரை கூடுதல் சதவீதத்தில் இருந்தன. இதில் ஒரு பணிக்கு 102% அதிகம் ஒப்பப்புள்ளி பெறப்பட்டது. மற்றொரு பணிக்கு ஒப்பப்புள்ளி பெறப்படவேயில்லை. வில்லிவாக்கம் இரயில்வே சந்திக்கடவில் வாகன சுரங்கப்பாதை அமைக்கும் பணிக்கு ஒப்பந்ததாரர் பேச்சு வார்த்தைக்குபின் அளித்திருந்த ஒப்பத்தொகை 2005–2006ம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியல்படி ஒப்பிடுகையில் +35.04 சதவீதம் கூடுதலாகும். மேலும், 2006–2007ம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியல்படி ஒப்பிடுகையில் + 22.50 சதவீதம் கூடுதலாகும். அரசின் ஒப்புதலுக்கு இவ்வொப்பம் சமர்ப்பிக்கப்பட்டபோது, அரசு இவ்வொப்பத்தின் சதவீதத்தை அரசு ஏற்கனவே அனுமதித்துள்ள பணிகளின் சதவீதத்தோடு ஒப்பிட்டு நியாயத்தன்மைக்கான சான்றிதழ் அளிக்கும்படி கூறியது. ஏற்கனவே முடிக்கப்பட்ட உறாரிங்டன் சாலை சுரங்கப்பாதை பணியுடன் இவ்வொப்பப்பணியின் சதவீதத்தை ஒப்பிட்டு அரசுக்கு இந்த நியாயதன்மைக்கான சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டது. அரசிடமிருந்து பதிலேதும் வராத காரணத்தினாலும் ஒப்பந்தத்தாரர் ஒப்பக் கால அவகாசத்தை நீட்டிக்க சம்மதிக்காததாலும், இவ்வொப்பம் நிராகரிக்கப்பட்டது. மேலும், மேற்கூறிய ஒப்பங்கள் அனைத்திலும் ஒப்பந்ததாரர்கள் குறைவாகவே பங்கேற்றனர். எனவே, இவ்வொப்பங்களில் தேசிய அளவிலான பெரிய நிறுவனங்கள் பங்கேற்பதற்கு ஏதுவாகவும் போட்டியில் குறைந்த ஒப்பப்புள்ளி அளிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுவதற்கும் அனைத்து பணிகளையும் ஒரே தொகுப்பாக ரூ.40.00 கோடிக்கு ஒப்பங்கள் கோர மன்ற தீர்மான எண்.103/2007ன்படி 25.04.2007 அன்று ஒப்புதல் பெறப்பட்டது.

7 பணிகளுக்கும் ஒரே தொகுப்பாக ஒப்பங்கள் கோரப்பட்டு முடிவு தேதியான 15.6.2007 அன்று இரண்டு ஒப்பங்கள் திருவாளர்கள் அபான் கன்ஸ்டரக்ஷன் கம்பெனி லிமிடெட் மற்றும் ஜி.எஸ்.ஆர். நிறுவனம் ஆகியவற்றிடம் இருந்து பெறப்பட்டன. இரண்டு தொழில் நுட்ப ஆவணங்களை மதிப்பாய்வு செய்ததில் திருவாளர்கள் அபான் கன்ஸ்டரக்ஷன் கம்பெனி லிமிடெட் மட்டுமே இப்பணிகளை மேற்கொள்வதற்கான தகுதியுடையவராக இருப்பதாக கண்டறியப்பட்டது. எனவே, இவர்களது நிதி ஆவண ஒப்பம் 01.11.2007 அன்று திறக்கப்பட்டதில் இவர்கள் 2006–2007 திருத்திய அலுவலக மதிப்பீட்டை விட (+) 41.40% அதிகம் ஒப்ப விலைகள் அளித்திருந்தனர்.

பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரர் தான் அளித்துள்ள ஒப்ப விலைகள் 4.9 % குறைத்து அளித்துள்ளார். இது 2006–2007 திருத்திய அலுவலக மதிப்பீட்டை விட (+) 39.99 % அதிகம். இக்காலகட்டத்தில் தற்போதைய அலுவலக விலைகளான 2007–2008 விலைகள் முடிவாகவில்லை. எனவே, ஒப்பந்ததாரர் அளித்த விலைகளை தற்போதைய அலுவலக விலைகளுடன் ஒப்பிட இயலவில்லை. மேலும், இப்பணிகள் மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒரே ஒப்பமாக இவ்வொப்பம் அமைந்ததால் சரியான விலைகளை நிர்ணயிக்க இயலவில்லை. ஏனெனில், தகுதி வாய்ந்த கூடுதல் ஒப்பம் பெறப்படவில்லை. சந்தை விலைவிகிதத்தோடு ஒப்பப்புள்ளியின் விலை விகிதத்தினை ஒப்பீடு செய்வது அந்நேரத்தில் மாநகராட்சி வழக்கில் இல்லை. மேலும், வில்லிவாக்கம் சுரங்கப்பாதை ( LC 2 ) பணிக்கு 2006–2007 அலுவலக விலைப்பட்டியலைவிட (+)22.50 சதவீதம் மட்டுமே அளித்திருந்த ஒப்பத்திற்கு அரசிடமிருந்து அனுமதி பெற முடியவில்லை. மேற்கூறிய கருத்துக்கள் ஒப்ப குழும கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதில், ஒப்பக்குழுமம் திருவாளர்கள் அபான் கன்ஸ்டரக்ஷ்ன்ஸ் கம்பெனி லிமிடெட் அளித்துள்ள விலைகள் அதிகமாக உள்ளது என்று முடிவு செய்து இவ்வொப்பத்தை நிராகரித்து மறு ஒப்பம் கோருவதற்கு பரிந்துரை செய்தது.

மறு ஒப்பம் கோரப்பட்டதில் ஒப்ப நாளான 23.7.2007 அன்று அதே இரண்டு ஒப்பந்ததாரர்கள் மட்டுமே ஒப்பத்தில் பங்கேற்றனர். இதிலும் திருவாளர்கள் அபான் கன்ஸ்டரக்ஷன் கம்பெனி லிமிடெட் மட்டுமே இப்பணிகளை மேற்கொள்வதற்கான தகுதியுடையவராக இருப்பதாக கண்டறியப்பட்டது. இம்முறை இவ்வொப்பந்ததாரர் 2006–2007 திருத்திய அலுவலக மதிப்பீட்டை விட (+) 64.46% அதிக ஒப்ப விலைகள் அளித்தனர். பேச்சுவார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் தங்களது ஒப்ப விலைகளை 2006–2007 திருத்திய அலுவலக மதிப்பீட்டை விட (+) 56.24% அதிகம் அளித்தனர். இம்முறையும் தகுதி வாய்ந்த ஒரே ஒப்பமாக இவ்வொப்பம் அமைந்ததால் சரியான விலைகளை நிர்ணயிக்க இயலவில்லை. ஏனெனில், தகுதி வாய்ந்த கூடுதல் ஒப்பம் ஏதும் பெறப்படவில்லை. மேலும், அவர்கள் முந்தைய ஒப்பத்தில் வழங்கிய (+) 39.99% விட மிக அதிகமாக இருந்த காரணத்தினால் ஒப்பக்குழுமம் இவ்வொப்பத்தையும் நிராகரித்தது.

மேற்கண்ட 7 பணிகளையும் ஒரே தொகுப்பாக ஒப்பம் கோரப்பட்டும் அதிக அளவில் ஒப்பந்ததாரர்கள் பங்கேற்கவில்லை. எனவே, இப்பணிகளை இரண்டு பகுதிகளாக பிரித்து வடசென்னை பணிகளை ஒரு தொகுப்பாகவும், தென்சென்னை பணிகளை ஒரு தொகுப்பாகவும் ஒப்பங்கள் கோர முடிவுசெய்யப்பட்டது. இரயில்வே துறை ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட கொருக்குப்பேட்டை சுரங்கப்பாதை வடிவமைப்பினை மாற்றியதால், மாற்று திட்டம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டு இப்பணி ஒத்திவைக்கப்பட்டது. எனவே, ரூ.18.52 கோடி பணி மதிப்பீட்டில் வடசென்னையில் 3 பணிகளுக்கும், ரூ. 19.72 கோடியில் பணி மதிப்பீட்டில் தென்சென்னையில் 3 பணிகளுக்கும் 26.10.2007 அன்று ஒப்பங்கள் கோரப்பட்டன.

## வடசென்னை தொகுப்பு

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை 2006–2007 திருத்திய விலை விவரப்படி (ரூ.லட்சங்களில்) | பணியின் மதிப்பு (ரூ.லட்சங்களில்) | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 1 | வில்லிவாக்கம் இரயில்வே சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை | 1339.50 | 672.58 | அரசாணை எண்.83 நாள்.11.06.2007 |
| 2 | மணியக்காரச் சத்திரதெருவில் இரயில்வே சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை | 1055.60 | 651.56 | அரசாணை எண்.100, நாள்.18.07.2007 |
| 3 | கத்திவாக்கம் காக்ரேன் பேசின் சாலை இரயில்வே சந்திக்கடவில் வாகன மேம்பாலம் அமைக்கும் பணி. | 1220.00 | 527.23 | அரசாணை எண்.80 நாள்.11.06.2007 |
| | மொத்தம் | 3615.1 | 1851.37 | |

ஒப்ப நாளான 26.10.2007 அன்று இரண்டு ஒப்பந்ததாரர்கள் முறையே திருவாளர்கள். கேமன் இந்தியா லிட், மற்றும் திருவாளர்கள். சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மார்கெட்டிங் லிட்., (SPML) ஆகியோரிடமிருந்து ஒப்பங்கள் பெறப்பட்டன. 26.10.2007 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவண ஒப்பங்கள் திறக்கப்பட்டன. தொழில்நுட்ப ஆவணங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டதில் இரு ஒப்பந்ததாரர்களும் பணி மேற்கொள்ள வேண்டிய தகுதி பெற்றிருந்தனர். மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணங்கள் 01.11.2007 அன்று திறக்கப்பட்டன. இரண்டு ஒப்பந்ததாரர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகைகளின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது:

பா.து.ந.க.எண்.பி3/1371/2007

| வ. எண் | ஒப்பந்தத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2006 – 2007 (திருத்திய) விலையின்படி விழக்காடு |
|---|---|---|---|---|
| 1. | திருவாளர்கள் சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மார்கெட்டிங் லிமிடெட் | ரூ.185136390.17 | ரூ.309180643.00 | (+) 67.00% |
| 2. | திருவாளர்கள் கேமன் இந்தியா லிமிடெட் | ரூ.185136390.17 | ரூ.375412230.00 | (+) 102.78% |

குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மார்கெட்டிங் லிட்., (SPML) அளித்துள்ள ஒப்பத்தொகையான **ரூ. 309180643/–** ஆனது 2006–2007ம் ஆண்டு திருத்திய அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட அலுவலக மதிப்பீட்டுத்தொகையான **ரூ.185136390.17** உடன் ஒப்பீடு செய்யப்பட்டதில் **(+)67.00%** சதவீதம் கூடுதல் ஆகும். 01.11.2007 அன்று குறைந்த ஒப்பந்ததாரரிடன் விலைக்குறைப்பு கோரப்பட்டது.

ஒப்பந்ததாரர் தனது 12.11.2007 நாளிட்ட கடிதம் மூலம் தான் அளித்துள்ள ஒப்பத்தொகையில் 4.9% விலைக்குறைப்பு செய்தனர். விலைக்குறைப்பிற்கு பின் பெறப்பட்ட ஒப்ப தொகையானது 2006–2007ம் ஆண்டு திருத்திய அலுவலக விலைப்பட்டியலின்படி ஒப்பீடு செய்ததில் ஒப்ப சதவீதம் (+) 58.82 % ஆகும். இதன் ஒப்பத்தொகை **ரூ. 294030791.49** ஆகும்.

மேற்குறிப்பிட்ட ஒப்பீட்டு படிவங்கள் 20.11.2007 அன்று நடைபெற்ற ஒப்பக்குழுமத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. ஒப்பக்குழுமம் மீண்டும் விலைக்குறைப்பு செய்ய பரிந்துரை செய்தது. இதன் அடிப்படையில் மேலும் விலை குறைக்க ஒப்பந்ததாரர் கோரப்பட்டார். ஒப்பந்ததாரர் தனது 21.11.2007 நாளிட்ட கடிதம் மூலம் மேலும் விலை குறைக்க இயலாது என்று தெரிவித்தார். விலை குறைக்க மேலும் கோரியதில், ஒப்பந்ததாரர் தனது 04.12.2007 நாளிட்ட கடிதம் மூலம் முதல் விலைக்குறைப்பிற்கு பின் உள்ள ஒப்பத்தொகையில் மேலும் 0.15% சதவீதம் விலைக்குறைப்பு செய்வதாக தெரிவித்துள்ளார். இரண்டாவது விலைக்குறைப்புக்கு பின்னர் பெறப்பட்ட ஒப்ப தொகையானது 2006–2007ம் ஆண்டு திருத்திய அலுவலக விலைப்பட்டியலின்படி ஒப்பீடு செய்ததில் ஒப்ப சதவீதம் (+) 58.58% ஆகும். இதன் ஒப்பத்தொகை **ரூ.293589745.31** ஆகும். இத்தொகையானது 2007–2008ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி ஒப்பீடு செய்ததில் ஒப்ப சதவீதம் **(+) 47.77%** ஆகும். மேலும் அக்டோபர்–2007 அன்றைய சந்தை விலை நிலவரப்படி ஒப்பீடு செய்ததில் ஒப்ப சதவீதம் **(+) 16.58**% ஆகும். இந்த சந்தை விலை சதவீதமானது முந்தைய ஒப்பந்தங்களை அன்றைய சந்தை விலை நிலவரத்துடன் ஒப்பிட்டு பார்க்கையில் குறைவாகவே காணப்படுகிறது. அதாவது 15.06.2007 அன்று பெறப்பட்ட ஒப்பத்தை அன்றைய சந்தை விலையுடன் ஒப்பிட்டதில் அவ்வொப்பம் (+)18.52% கூடுதலாக இருந்தது. 23.07.2007 அன்று பெறப்பட்ட ஒப்பத்தை அன்றைய சந்தை விலையுடன் ஒப்பிட்டதில் அவ்வொப்பம் (+)22.95 % கூடுதலாக இருந்தது.

மேலும், சென்னை மாநகராட்சி, பேருந்து சாலைகள் துறையில் அக்டோபர்–2007ல் கான்கிரீட் சாலை பணிக்கான ஒப்பம் 2007–2008அலுவலக விலைகளை விட (+)46% கூடுதலாகவும், ஆகஸ்டு–2007 அன்றைய சந்தை விலைகளைவிட(+)18% கூடுதலாகவும் வழங்கப்பட்டது. தேசிய நெடுஞ்சாலைத்துறை மற்றும் மாநில நெடுஞ்சாலைத்துறை போன்ற பொறியியல் துறைகளிலும் பாலப்பணிகள் கூடுதல் சதவீதத்திற்கு அளிக்கப்படுகின்றன. குடிசைப்பகுதி மாற்று வாரிய கட்டட வேலைகளுக்கான பணிகளுக்கும் அதிக சதவீதத்தில் ஒப்பங்கள் அளிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

பாலங்கள் துறையில் MORTH நிர்ணயித்துள்ளபடி மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன. MORTH நிர்ணயித்துள்ளபடி **25%** இதர செலவுகளுக்காகவும் (Over Head Charges), **10%** ஒப்பந்ததாரரின் லாபத்திற்காகவும் மற்றும் **1%** நீர் பயன்பாட்டிற்காகவும் சேர்க்கப்பட வேண்டும். ஆனால் பாலங்கள் துறையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்படும் போது பொது பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை துறையினரின் வழிமுறைகளை பின்பற்றுவதால் மேற்குறிப்பிட்ட செலவுகள் சேர்க்கப்படவில்லை.

தற்போதுள்ள ஒப்பத்தை அதிக சதவீதம் என்று கருதி நிராகரித்து, மறு ஒப்பம் கோரப்பட்டால் மீண்டும் தகுதியுள்ள ஒப்பந்ததாரர்கள் ஒப்பத்தில் பங்கேற்பது நிச்சயமானதொன்றில்லை, அப்படியே பங்கேற்றாலும், தற்போது குறிப்பிட்டுள்ள விலைகளைவிட குறைவான விலைகளை அளிப்பது என்பது தற்போதுள்ள ஏற்றமிகு சந்தை விலை நிலவரத்தில் சாத்தியமான ஒன்றாக தெரியவில்லை. தற்போது கோரிய ஒப்பத்தில் பங்கேற்றவர்களே மேலும் மேலும் ஒப்ப நீட்டிப்பை கோரியதால் ஒப்ப நாள் 2 மாதங்கள் நீட்டிக்கப்பட வேண்டியதாயிற்று.

மேற்கண்ட பணிகள் யாவும் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். மேலும், மேற்கண்ட பணிகள் நடைபெறவுள்ள இரயில்வே சந்திக்கடவுகளில் இரயில்வே துறையினர் தங்கள் பகுதியில் உள்ள பணிகளுக்கான ஒப்பங்களை முடிவு செய்து, பணிகளை துவக்கும் நிலையில் உள்ளனர். மேற்கண்ட பணிகளை துவக்கி குறித்த காலத்திற்குள் முடிக்க சென்னை மாநகராட்சியும் தயார் நிலையில் இருத்தல் வேண்டும். மேற்கண்ட பணிகளில் சிரமமான பணிகளான நில ஆர்ஜிதம், ஆக்கிரமிப்புகள் அகற்றுதல், இரயில்வே துறையுடன் கூட்டு நடவடிக்கை மற்றும் சேவைத்துறையினரின் குழாய்கள் மற்றும் கம்பி வடங்கள் மாற்றி அமைக்கும் பணிகள் ஆகியவை உயர் தொழில்நுட்ப ரீதியாக அமைக்கப்படும் பாலப்பணிகள் மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்படுத்தலாம். இதன் காரணமாக ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்ப சதவீதமானது சந்தைவிலைகளைவிட கூடுதலாக இருப்பது சரியானதாகவும் மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் கருதப்படுகிறது.

<u>பா.து.ந.க.எண்.பி3/1371/2007</u>

மேற்கூறிய கருத்துக்கள் அனைத்தையும் ஒப்ப குழுமம் விவரமாக விவாதித்ததில் பரிந்துரைத்த தேர்வுரிமைகள் கீழ்க்கண்டவாறு.

1. இப்பணிக்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். சுபாஷ் பிராஜட்ஸ் மார்கெட்டிங் நிறுவனத்திற்கு விலை குறைப்பிற்கு பின் அவர்கள் அளித்த ஒப்பத்தொகையான **ரூ.293589745.31** க்கு பணியினை வழங்க அனுமதித்தல், இவ்வொப்பத்தொகையானது **2006–2007**ம் ஆண்டு திருத்திய அலுவலக மதிப்பீட்டினை விட **(+)58.58 %** கூடுதலாகவும் மற்றும் **2007–2008**ம் ஆண்டு அலுவலக விலை மதிப்பீட்டை விட **(+)47.477 %** கூடுதலாகவும் மற்றும் அக்டோபர்–2007 அன்றைய சந்தை விலைகளுடன் ஒப்பிடுகையில் **(+)16.58 %** கூடுதல் ஆகும்.

2. இவ்வொப்பத்தை நிராகரித்து மீண்டும் ஒப்பம் கோருதல். அவ்வாறு செய்தால் மீண்டும் தகுதியுள்ள ஒப்பந்ததாரர்கள் ஒப்பத்தில் பங்கேற்பது நிச்சயமானதொன்றில்லை, அப்படியே பங்கேற்றாலும், தற்போது குறிப்பிட்டுள்ள விலைகளைவிட குறைவான விலைகளை அளிப்பது என்பது தற்போதுள்ள ஏற்றமிகு சந்தை விலை நிலவரத்தில் சாத்தியமான ஒன்றாக தெரியவில்லை. எனினும் பேருந்து சாலைகள் துறையில் மெரினா கடற்கரையினை அழகுபடுத்தும் பணிக்கு முதலில் ஒப்பங்கள் கோரியதில் அதிக சதவீதம் பெறப்பட்டு அதனை நிராகரித்து, மறு ஒப்பம் கோரியதில் குறைந்த சதவீதத்தில் ஒப்பங்கள் பெறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

3. இப்பணிகள் அனைத்தையும் மீண்டும் ஒரே தொகுப்பாக மாற்றி ஒப்பங்கள் கோருவது. இம்முறை ஏற்கனவே பின்பற்றப்பட்டு எதிர்பார்த்த சாதகமான முடிவு பெறப்படவில்லை.

4. இப்பணிகள் அனைத்திற்கும் மீண்டும் தனித்தனியே ஒப்பங்கள் கோரி குறைந்த நிலை ஒப்பந்ததாரர்கள் அதிக அளிவில் பங்கேற்கும்படி வாய்ப்பளிப்பது. இம்முறையும் ஏற்கனவே பின்பற்றப்பட்டு ஒப்பந்ததாரர்களின் பங்கேற்பு மிகவும் குறைவாகவே இருந்தது. மேலும் சில பணிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் யாரும் பங்கேற்காமல் போகும் வாய்ப்பும் உள்ளது.

5. அனைத்து பணிகளுக்கு 2007–2008ம் ஆண்டின் அலுவலக விலைவீதப்படி திருத்திய மதிப்பீடுகளை தயாரித்து அதன்படி ஒப்பங்கள் கோருவது. இவ்வாறு செய்தால் ஒப்பந்ததாரரின் விலைவீதங்களை ஒப்பிடும்போது சற்றே குறைந்த சதவீதத்தில் வர வாய்ப்புள்ளது. எனினும் இந்தமுறையில் திருத்திய மதிப்பீடுகளுக்கு மன்ற அனுமதி மற்றும் அரசின் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பங்கள் கோரப்பட வேண்டும். இதனால் பணிகளை மேற்கொள்வதற்கு சற்றே காலதாமதம் ஏற்படும்.

மேற்குறிப்பிட்ட தேர்வுரிமைகளை பரிசீலித்து தக்க முடிவெடுத்து நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.301/2007 நாள்.19.12.2007ன்படி குறிப்பிட்ட தேர்வு உரிமைகளை விரிவாக பரிசீலித்த பின்னர் இப்பணிக்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர் சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மார்க்கெட்டிங் லிமிடெட் நிறுவனத்திற்கு அவர்கள் அளித்த ஒப்பத்தொகை ரூ.29,35,89,745.31 க்கு பணியினை வழங்க நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.235/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“மேற்குறிப்பிட்ட 5 தேர்வுரிமைகளை விரிவாக பரிசீலித்த பின்னர் இப்பணிக்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர். சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மார்க்கெட்டிங் லிமிடெட் நிறுவனத்திற்கு அவர்கள் அளித்த ஒப்பத்தொகையான ரூ.29,35,89,745.31க்கு பணியினை வழங்க நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) அளித்த பரிந்துரையை ஏற்று இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பா.து.ந.க.எண்.பி3/1372/2007

ஆணையர் அவர்களின் 17.12.2007 நாளிட்ட குறிப்பு

## 29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.645/2007 பொருள் எண்.22

### தென்சென்னை இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே ஒரு சுரங்கப்பாதை, ஒரு மேம்பாலம் மற்றும் ஒரு உயர்மட்ட பாலம் அமைக்கும் பணிகளுக்கு ஒப்பம் பெறப்பட்டது மன்றத்தின் அனுமதி கோரல்

சென்னை போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலை சந்திப்புகள் மற்றும் இரயில்வே சந்திக்கடவுகளின் குறுக்கே வாகன மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப்பாதைகள் அமைக்கும் பணிகள் கீழ்க்காணும் இடங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை 2006–2007 திருத்திய விலை விவரப்படி (ரூ.லட்சங்களில்) | பணியின் மதிப்பு (ரூ.லட்சங்களில்) | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 1 | வில்லிவாக்கம் இரயில்வே சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை | 1339.50 | 672.58 | அரசாணை எண்.83 நாள்.11.06.2007 |
| 2 | கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை | 494.50 | 337.83 | அரசாணை எண்.84 நாள்.11.06.2007 |
| 3 | ஜோன்ஸ் சாலை இரயில்வே சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை | 432.90 | 265.36 | அரசாணை எண்.81 நாள்.11.06.2007 |
| 4 | மணியக்காரச் சத்திரதெருவில் இரயில்வே சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை | 1055.60 | 651.56 | அரசாணை எண்.178, நாள்.01.07.98 |
| 5 | கத்திவாக்கம் காக்ரேன் பேசின் சாலை இரயில்வே சந்திக்கடவில் வாகன மேம்பாலம் அமைக்கும் பணி. | 1220.00 | 527.23 | அரசாணை எண்.80 நாள்.11.06.2007 |
| 6 | ரங்கராஜபுரம் இரயில்வே சந்திக்கடவில் வாகன மேம்பாலம் அமைக்கும் பணி. | 1574.80 | 1189.83 | அரசாணை எண்.82 நாள்.11.06.2007 |
| 7 | ஆலந்தூர் சாலையில் உயர்மட்டப்பாலம் அமைக்கும் பணி | 603.35 | 517.00 | அரசாணை எண்.128, நாள்.09.12.1999. |

மேற்குறிப்பிட்ட பணிகளுக்கான ஒப்பங்கள் ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியாக ஆகஸ்டு 2006 முதல் டிசம்பர் 2006 வரை கோரப்பட்டன. அவற்றிற்கு பெறப்பட்ட ஒப்பங்கள் 2006–2007 அலுவலக மதிப்பீடுகளை விட 35 % முதல் 46% வரை கூடுதல் சதவீதத்தில் இருந்தன. இதில் ஒரு பணிக்கு 102% அதிகம் ஒப்பப்புள்ளி பெறப்பட்டது. மற்றொரு பணிக்கு ஒப்பப்புள்ளி பெறப்படவேயில்லை. வில்லிவாக்கம் இரயில்வே சந்திக்கடவில் வாகன சுரங்கப்பாதை அமைக்கும் பணிக்கு ஒப்பந்ததாரர் பேச்சு வார்த்தைக்குபின் அளித்திருந்த ஒப்பத்தொகை 2005–2006ம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியல்படி ஒப்பிடுகையில் (+) 35.04 சதவீதம் கூடுதலாகும். மேலும், 2006–2007ம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியல்படி ஒப்பிடுகையில் (+) 22.50 சதவீதம் கூடுதலாகும். அரசின் ஒப்புதலுக்கு இவ்வொப்பம் சமர்ப்பிக்கப்பட்டபோது, அரசு இவ்வொப்பத்தின் சதவீதத்தை அரசு ஏற்கனவே அனுமதித்துள்ள பணிகளின் சதவீதத்தோடு ஒப்பிட்டு நியாயத்தன்மைக்கான சான்றிதழ் அளிக்கும்படி கூறியது. ஏற்கனவே முடிக்கப்பட்ட ஹாரிங்டன் சாலை சுரங்கப்பாதை பணியுடன் இவ்வொப்பப்பணியின் சதவீதத்தை ஒப்பிட்டு அரசுக்கு இந்த நியாயதன்மைக்கான சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டது. அரசிடமிருந்து பதிலேதும் வராத காரணத்தினாலும் ஒப்பந்தத்தாரர் ஒப்பக் கால அவகாசத்தை நீட்டிக்க சம்மதிக்காததாலும், இவ்வொப்பம் நிராகரிக்கப்பட்டது. மேலும், மேற்கூறிய ஒப்பங்கள் அனைத்திலும் ஒப்பந்ததாரர்கள் குறைவாகவே பங்கேற்றனர். எனவே, இவ்வொப்பங்களில் தேசிய அளவிலான பெரிய நிறுவனங்கள் பங்கேற்பதற்கு ஏதுவாகவும் போட்டியில் குறைந்த ஒப்பப்புள்ளி அளிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுவதற்கும் அனைத்து பணிகளையும் ஒரே தொகுப்பாக ரூ.40.00 கோடிக்கு ஒப்பங்கள் கோர மன்ற தீர்மான எண்.103/2007ன்படி 25.04.2007 அன்று ஒப்புதல் பெறப்பட்டது.

7 பணிகளுக்கும் ஒரே தொகுப்பாக ஒப்பங்கள் கோரப்பட்டு முடிவு தேதியான 15.6.2007 அன்று இரண்டு ஒப்பங்கள் திருவாளர்கள் அபான் கன்ஸ்டரக்ஷன் கம்பெனி லிமிடெட் மற்றும் ஜி.எஸ்.ஆர்.நிறுவனம் ஆகியவற்றிடம் இருந்து பெறப்பட்டன. இரண்டு தொழில் நுட்ப ஆவணங்களை மதிப்பாய்வு செய்ததில் திருவாளர்கள் அபான் கன்ஸ்டரக்ஷன் கம்பெனி லிமிடெட் மட்டுமே இப்பணிகளை

மேற்கொள்வதற்கான தகுதியுடையவராக இருப்பதாக கண்டறியப்பட்டது. எனவே, இவர்களது நிதி ஆவண ஒப்பம் 01.11.2007 அன்று திறக்கப்பட்டதில் இவர்கள் 2006–2007 திருத்திய அலுவலக மதிப்பீட்டை விட (+) 41.40% அதிகம் ஒப்ப விலைகள் அளித்திருந்தனர்.

பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரர் தான் அளித்துள்ள ஒப்ப விலைகள் 4.9 % குறைத்து அளித்துள்ளார். இது 2006–2007 திருத்திய அலுவலக மதிப்பீட்டை விட (+) 39.99 % அதிகம். இக்காலகட்டத்தில் தற்போதைய அலுவலக விலைகளான 2007–2008 விலைகள் முடிவாகவில்லை. எனவே, ஒப்பந்ததாரர் அளித்த விலைகளை தற்போதைய அலுவலக விலைகளுடன் ஒப்பிட இயலவில்லை. மேலும், இப்பணிகள் மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒரே ஒப்பமாக இவ்வொப்பம் அமைந்ததால் சரியான விலைகளை நிர்ணயிக்க இயலவில்லை. ஏனெனில், தகுதி வாய்ந்த கூடுதல் ஒப்பம் பெறப்படவில்லை. சந்தை விலைவிகிதத்தோடு ஒப்பப்புள்ளியின் விலை விகிதத்தினை ஒப்பீடு செய்வது அந்நேரத்தில் மாநகராட்சி வழக்கில் இல்லை. மேலும், வில்லிவாக்கம் சுரங்கப்பாதை ( LC 2 ) பணிக்கு 2006–2007 அலுவலக விலைப்பட்டியலைவிட (+) 22.50 சதவீதம் மட்டுமே அளித்திருந்த ஒப்பத்திற்கு அரசிடமிருந்து அனுமதி பெற முடியவில்லை. மேற்கூறிய கருத்துக்கள் ஒப்ப குழுமம் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதில், ஒப்பக்குழுமம் திருவாளர்கள் அபான் கன்ஸ்டரக்ஷன்ஸ் கம்பெனி லிமிடெட் அளித்துள்ள விலைகள் அதிகமாக உள்ளது என்று முடிவு செய்து இவ்வொப்பத்தை நிராகரித்து மறு ஒப்பம் கோருவதற்கு பரிந்துரை செய்தது.

மறு ஒப்பம் கோரப்பட்டதில் ஒப்ப நாளான 23.7.2007 அன்று அதே இரண்டு ஒப்பந்ததாரர்கள் மட்டுமே ஒப்பத்தில் பங்கேற்றனர். இதிலும் திருவாளர்கள் அபான் கன்ஸ்டரக்ஷன் கம்பெனி லிமிடெட் மட்டுமே இப்பணிகளை மேற்கொள்வதற்கான தகுதியுடையவராக இருப்பதாக கண்டறியப்பட்டது. இம்முறை இவ்வொப்பந்ததாரர் 2006–2007 திருத்திய அலுவலக மதிப்பீட்டை விட (+) 64.46% அதிக ஒப்ப விலைகள் அளித்தனர். பேச்சுவார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் தங்களது ஒப்ப விலைகளை 2006–2007 திருத்திய அலுவலக மதிப்பீட்டை விட (+) 56.24% அதிகம் அளித்தனர். இம்முறையும் தகுதி வாய்ந்த ஒரே ஒப்பமாக இவ்வொப்பம் அமைந்ததால் சரியான விலைகளை நிர்ணயிக்க இயலவில்லை. ஏனெனில், தகுதி வாய்ந்த கூடுதல் ஒப்பம் ஏதும் பெறப்படவில்லை. மேலும், அவர்கள் முந்தைய ஒப்பத்தில் வழங்கிய (+) 39.99% விட மிக அதிகமாக இருந்த காரணத்தினால் ஒப்பக்குழுமம் இவ்வொப்பத்தையும் நிராகரித்தது.

மேற்கண்ட 7 பணிகளையும் ஒரே தொகுப்பாக ஒப்பம் கோரப்பட்டும் அதிக அளவில் ஒப்பந்ததாரர்கள் பங்கேற்கவில்லை. எனவே, இப்பணிகளை இரண்டு பகுதிகளாக பிரித்து வடசென்னை பணிகளை ஒரு தொகுப்பாகவும், தென்சென்னை பணிகளை ஒரு தொகுப்பாகவும் ஒப்பங்கள் கோர முடிவுசெய்யப்பட்டது. இரயில்வே துறை ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட கொருக்குப்பேட்டை சுரங்கப்பாதை வடிவமைப்பினை மாற்றியதால், மாற்று திட்டம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டு இப்பணி ஒத்திவைக்கப்பட்டது. எனவே, ரூ.18.52 கோடி பணி மதிப்பீட்டில் வடசென்னையில் 3 பணிகளுக்கும், ரூ. 19.72 கோடியில் பணி மதிப்பீட்டில் தென்சென்னையில் 3 பணிகளுக்கும் 26.10.2007 அன்று ஒப்பங்கள் கோரப்பட்டன.

<u>தென்சென்னை தொகுப்பு</u>

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை 2006–2007 திருத்திய விலை விவரப்படி (ரூ.லட்சங்களில்) | பணியின் மதிப்பு (ரூ.லட்சங்களில்) | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 1 | ஜோன்ஸ் சாலை இரயில்வே சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை | 432.90 | 265.36 | அரசாணை எண்.81 நாள்.11.06.2007 |
| 2 | ரங்கராஜபுரம் இரயில்வே சந்திக்கடவில் வாகன மேம்பாலம் அமைக்கும் பணி | 1574.80 | 1189.83 | அரசாணை எண்.82 நாள்.11.06.2007 |
| 3 | ஆலந்தூர் சாலையில் உயர்மட்டப்பாலம் அமைக்கும் பணி | 603.35 | 517.00 | அரசாணை எண்.90 நாள்.25.06.2007 |
| | மொத்தம் | 2611.05 | 1972.19 | |

ஒப்ப நாளான 26.10.2007 அன்று இரண்டு ஒப்பந்ததாரர்கள் முறையே திருவாளர்கள். கேமன் இந்தியா லிட், மற்றும் திருவாளர்கள். சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மார்கெட்டிங் லிட்., (SPML) ஆகியோரிடமிருந்து ஒப்பங்கள் பெறப்பட்டன. 26.10.2007 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவண ஒப்பங்கள் திறக்கப்பட்டன. தொழில்நுட்ப ஆவணங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டதில் இரு ஒப்பந்ததாரர்களும் பணி மேற்கொள்ள வேண்டிய தகுதி பெற்றிருந்தனர். மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணங்கள் 01.11.2007 அன்று திறக்கப்பட்டன. இரண்டு ஒப்பந்ததாரர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகைகளின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது:

| வ. எண் | ஒப்பந்தத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2006 – 2007 (திருத்திய) விலையின்படி விழுக்காடு |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திருவாளர்கள் சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மார்கெட்டிங் லிமிடெட் | ரூ.197219153.14 | ரூ.332623612.00 | (+) 68.66% |
| 2. | திருவாளர்கள் கேமன் இந்தியா லிமிடெட் | ரூ.197219153.14 | ரூ.379421655.00 | (+) 92.39% |

குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மார்கெட்டிங் லிட்., (SPML) அளித்துள்ள ஒப்பத்தொகையான **ரூ.332623612/–** ஆனது 2006–2007ம் ஆண்டு திருத்திய அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட அலுவலக மதிப்பீட்டுத்தொகையான **ரூ.197219153.14** உடன் ஒப்பீடு செய்யப்பட்டதில் **(+) 68.66%** சதவீதம் கூடுதல் ஆகும். 01.11.2007 அன்று குறைந்த ஒப்பந்ததாரரிடன் விலைக்குறைப்பு கோரப்பட்டது.

ஒப்பந்ததாரர் தனது 12.11.2007 நாளிட்ட கடிதம் மூலம் தான் அளித்துள்ள ஒப்பத்தொகையில் **5.3%** விலைக்குறைப்பு செய்தனர். விலைக்குறைப்பிற்கு பின் பெறப்பட்ட ஒப்ப தொகையானது 2006–2007ம் ஆண்டு திருத்திய அலுவலக விலைப்பட்டியலின்படி ஒப்பீடு செய்ததில் ஒப்ப சதவீதம் (+) 59.72% ஆகும். இதன் ஒப்பத்தொகை **ரூ.314994560.57** ஆகும்.

மேற்குறிப்பிட்ட ஒப்பீட்டு படிவங்கள் 20.11.2007 அன்று நடைபெற்ற ஒப்பக்குழுமத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. ஒப்பக்குழுமம் மீண்டும் விலைக்குறைப்பு செய்ய பரிந்துரை செய்தது. இதன் அடிப்படையில் மேலும் விலை குறைக்க ஒப்பந்ததாரர் கோரப்பட்டார். ஒப்பந்ததாரர் தனது **21.11.2007** நாளிட்ட கடிதம் மூலம் மேலும் விலை குறைக்க இயலாது என்று தெரிவித்தார். விலை குறைக்க மேலும் கோரியதில், ஒப்பந்ததாரர் தனது 04.12.2007 நாளிட்ட கடிதம் மூலம் முதல் விலைக்குறைப்பிற்கு பின் உள்ள ஒப்பத்தொகையில் மேலும் **0.16%** சதவீதம் விலைக்குறைப்பு செய்வதாக தெரிவித்துள்ளார். இரண்டாவது விலைக்குறைப்புக்கு பின்னர் பெறப்பட்ட ஒப்ப தொகையானது 2006–2007ம் ஆண்டு திருத்திய அலுவலக விலைப்பட்டியலின்படி ஒப்பீடு செய்ததில் ஒப்ப சதவீதம் (+) 59.46% ஆகும். இதன் ஒப்பத்தொகை **ரூ.314490569.27** ஆகும். இத்தொகையானது 2007–2008ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி ஒப்பீடு செய்ததில் ஒப்ப சதவீதம் **(+) 47.11%** ஆகும். மேலும் அக்டோபர்–2007 அன்றைய சந்தை விலை நிலவரப்படி ஒப்பீடு செய்ததில் ஒப்ப சதவீதம் **(+) 16.97**% ஆகும். இந்த சந்தை விலை சதவீதமானது முந்தைய ஒப்பந்தங்களை அன்றைய சந்தை விலை நிலவரத்துடன் ஒப்பிட்டு பார்க்கையில் குறைவாகவே காணப்படுகிறது. அதாவது 15.06.2007 அன்று பெறப்பட்ட ஒப்பத்தை அன்றைய சந்தை விலையுடன் ஒப்பிட்டதில் அவ்வொப்பம் (+) 18.52% கூடுதலாக இருந்தது. 23.07.2007 அன்று பெறப்பட்ட ஒப்பத்தை அன்றைய சந்தை விலையுடன் ஒப்பிட்டதில் அவ்வொப்பம் (+) 22.95 % கூடுதலாக இருந்தது.

மேலும், சென்னை மாநகராட்சி, பேருந்து சாலைகள் துறையில் அக்டோபர்–2007ல் கான்கிரீட் சாலை பணிக்கான ஒப்பம் 2007–2008 அலுவலக விலைகளை விட (+) 46% கூடுதலாகவும், ஆகஸ்டு–2007 அன்றைய சந்தை விலைகளைவிட (+) 18% கூடுதலாகவும் வழங்கப்பட்டது. தேசிய நெடுஞ்சாலைத்துறை மற்றும் மாநில நெடுஞ்சாலைத்துறை போன்ற பொறியியல் துறைகளிலும் பாலப்பணிகள் கூடுதல் சதவீதத்திற்கு அளிக்கப்படுகின்றன. குடிசைப்பகுதி மாற்று வாரிய கட்டட வேலைகளுக்கான பணிகளுக்கும் அதிக சதவீதத்தில் ஒப்பங்கள் அளிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

பாலங்கள் துறையில் MORTH நிர்ணயித்துள்ளபடி மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன. MORTH நிர்ணயித்துள்ளபடி 25% இதர செலவுகளுக்காகவும் (Over Head Charges), 10% ஒப்பந்ததாரரின் லாபத்திற்காகவும் மற்றும் 1% நீர் பயன்பாட்டிற்காகவும் சேர்க்கப்பட வேண்டும். ஆனால் பாலங்கள் துறையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்படும் போது பொது பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை துறையினரின் வழிமுறைகளை பின்பற்றுவதால் மேற்குறிப்பிட்ட செலவுகள் சேர்க்கப்படவில்லை.

தற்போதுள்ள ஒப்பத்தை அதிக சதவீதம் என்று கருதி நிராகரித்து, மறு ஒப்பம் கோரப்பட்டால் மீண்டும் தகுதியுள்ள ஒப்பந்ததாரர்கள் ஒப்பத்தில் பங்கேற்பது நிச்சயமானதொன்றில்லை, அப்படியே பங்கேற்றாலும், தற்போது குறிப்பிட்டுள்ள விலைகளைவிட குறைவான விலைகளை அளிப்பது என்பது தற்போதுள்ள ஏற்றமிகு சந்தை விலை நிலவரத்தில் சாத்தியமான ஒன்றாக தெரியவில்லை. தற்போது கோரிய ஒப்பத்தில் பங்கேற்றவர்களே மேலும் மேலும் ஒப்ப நீட்டிப்பை கோரியதால் ஒப்ப நாள் 2 மாதங்கள் நீட்டிக்கப்பட வேண்டியதாயிற்று.

மேற்கண்ட பணிகள் யாவும் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். மேலும், மேற்கண்ட பணிகள் நடைபெறவுள்ள இரயில்வே சந்திக்கடவுகளில் இரயில்வே துறையினர் தங்கள் பகுதியில் உள்ள பணிகளுக்கான ஒப்பங்களை முடிவு செய்து, பணிகளை துவக்கும் நிலையில் உள்ளனர். மேற்கண்ட பணிகளை துவக்கி குறித்த காலத்திற்குள் முடிக்க சென்னை மாநகராட்சியும் தயார் நிலையில் இருத்தல் வேண்டும். மேற்கண்ட பணிகளில் சிரமமான பணிகளான நில ஆர்ஜிதம், ஆக்கிரமிப்புகள் அகற்றுதல், இரயில்வே துறையுடன் கூட்டு நடவடிக்கை மற்றும் சேவைத்துறையினரின் குழாய்கள் மற்றும் கம்பி வடங்கள் மாற்றி அமைக்கும் பணிகள் ஆகியவை உயர் தொழில்நுட்ப ரீதியாக அமைக்கப்படும் பாலப்பணிகள் மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்படுத்தலாம். இதன் காரணமாக ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்ப சதவீதமானது சந்தைவிலைகளைவிட கூடுதலாக இருப்பது சரியானதாகவும் மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் கருதப்படுகிறது.

மேற்கூறிய கருத்துக்கள் அனைத்தையும் ஒப்ப குழுமம் விவரமாக விவாதித்ததில் பரிந்துரைத்த தேர்வுரிமைகள் கீழ்க்கண்டவாறு :

பா.து.ந.க.எண்.பி3/1372/2007

1. இப்பணிக்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். சுபாஷ் பிராஜட்ஸ் மார்கெட்டிங் நிறுவனத்திற்கு விலை குறைப்பிற்கு பின் அவர்கள் அளித்த ஒப்பத்தொகையான **ரூ.314490569.27**க்கு பணியினை வழங்க அனுமதித்தல், இவ்வொப்பத்தொகையானது 2006–2007ம் ஆண்டு திருத்திய அலுவலக மதிப்பீட்டினை விட **(+) 59.46%** கூடுதலாகவும் மற்றும் 2007–2008ம் ஆண்டு அலுவலக விலை மதிப்பீட்டை விட **(+) 47.11%** கூடுதலாகவும் மற்றும் அக்டோபர்–2007 அன்றைய சந்தை விலைகளுடன் ஒப்பிடுகையில் **(+) 16.97 %** கூடுதல் ஆகும்.

2. இவ்வொப்பத்தை நிராகரித்து மீண்டும் ஒப்பம் கோருதல். அவ்வாறு செய்தால் மீண்டும் தகுதியுள்ள ஒப்பந்ததாரர்கள் ஒப்பத்தில் பங்கேற்பது நிச்சயமானதொன்றில்லை, அப்படியே பங்கேற்றாலும், தற்போது குறிப்பிட்டுள்ள விலைகளைவிட குறைவான விலைகளை அளிப்பது என்பது தற்போதுள்ள ஏற்றமிகு சந்தை விலை நிலவரத்தில் சாத்தியமான ஒன்றாக தெரியவில்லை. எனினும் பேருந்து சாலைகள் துறையில் மெரினா கடற்கரையினை அழகுபடுத்தும் பணிக்கு முதலில் ஒப்பங்கள் கோரியதில் அதிக சதவீதம் பெறப்பட்டு அதனை நிராகரித்து, மறு ஒப்பம் கோரியதில் குறைந்த சதவீதத்தில் ஒப்பங்கள் பெறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

3. இப்பணிகள் அனைத்தையும் மீண்டும் ஒரே தொகுப்பாக மாற்றி ஒப்பங்கள் கோருவது. இம்முறை ஏற்கனவே பின்பற்றப்பட்டு எதிர்பார்த்த சாதகமான முடிவு பெறப்படவில்லை.

4. இப்பணிகள் அனைத்திற்கும் மீண்டும் தனித்தனியே ஒப்பங்கள் கோரி குறைந்த நிலை ஒப்பந்ததாரர்கள் அதிக அளிவில் பங்கேற்கும்படி வாய்ப்பளிப்பது. இம்முறையும் ஏற்கனவே பின்பற்றப்பட்டு ஒப்பந்ததாரர்களின் பங்கேற்பு மிகவும் குறைவாகவே இருந்தது. மேலும் சில பணிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் யாரும் பங்கேற்காமல் போகும் வாய்ப்பும் உள்ளது.

5. அனைத்து பணிகளுக்கு 2007–2008ம் ஆண்டின் அலுவலக விலைவீதப்படி திருத்திய மதிப்பீடுகளை தயாரித்து அதன்படி ஒப்பங்கள் கோருவது. இவ்வாறு செய்தால் ஒப்பந்ததாரரின் விலைவீதங்களை ஒப்பிடும்போது சற்றே குறைந்த சதவீதத்தில் வர வாய்ப்புள்ளது. எனினும் இந்தமுறையில் திருத்திய மதிப்பீடுகளுக்கு மன்ற அனுமதி மற்றும் அரசின் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பங்கள் கோரப்பட வேண்டும். இதனால் பணிகளை மேற்கொள்வதற்கு சற்றே காலதாமதம் ஏற்படும்.

மேற்குறிப்பிட்ட தேர்வுரிமைகளை பரிசீலித்து தக்க முடிவெடுக்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.302/2007 நாள்.19.12.2007ன்படி குறிப்பிட்ட தேர்வு உரிமைகளை விரிவாக பரிசீலித்த பின்னர் இப்பணிக்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர் சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மார்க்கெட்டிங் லிமிடெட் நிறுவனத்திற்கு அவர்கள் அளித்த ஒப்பத்தொகை ரூ.31,44,90,569.27 க்கு பணியினை வழங்க நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.236/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“மேற்குறிப்பிட்ட 5 தேர்வுரிமைகளை விரிவாக பரிசீலித்த பின்னர் இப்பணிக்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர். சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மார்க்கெட்டிங் லிமிடெட் நிறுவனத்திற்கு அவர்கள் அளித்த ஒப்பத்தொகையான ரூ.31,44,90,569.27க்கு பணியினை வழங்க நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) அளித்த பரிந்துரையை ஏற்று இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பா.து.ந.க.எண்.பி3/722/2006**
**ஆணையர் அவர்களின் 17.12.2007 நாளிட்ட குறிப்பு**

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.646/2007 பொருள் எண்.23

**பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வழியாக மேம்பாலம் அமைப்பதற்கு பதிலாக அதே சந்திப்பில் செனடாப் சாலை முதல் டர்ன்புல்ஸ் சாலை வரை மேம்பாலம் அமைக்கும் பணி – ஏற்கனவே இச்சந்திப்பில் மேம்பாலம் அமைக்க அனுமதி வழங்கப்பட்ட ஒப்பந்ததாரரிடமே இப்பாலப்பணியை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் கோருதல்**

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த கீழ்க்கண்ட நான்கு சந்திப்புகளில் மேம்பாலங்கள் அமைக்க திட்டமிடப்பட்டது.

1. வடக்கு உஸ்மான் சாலை மற்றும் டாக்டர்.எம்.ஜி.ஆர்.சாலை (கோடம்பாக்கம் நெடுஞ்சாலை) சந்திப்பு , கோட்டம்–107, மண்டலம்–7 மற்றும் கோட்டம்–119, மண்டலம்–8.
2. உஸ்மான் சாலை மற்றும் துரைசாமி சாலை சந்திப்பு, கோட்டம்–126 மற்றும் கோட்டம்–127, மண்டலம்–8.
3. கோபதி நாராயணா சாலை மற்றும் திருமலை சாலை சந்திப்பு, கோட்டம்–108, மண்டலம்–7 மற்றும் கோட்டம்–126, மண்டலம்–8.
4. பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை (சேமியர்ஸ் சாலை) மற்றும் டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பு, கோட்டம்–116, மண்டலம்–8.

2006ம் ஆண்டில் DEPC (Turnkey) முறையில் ஒப்பங்கள் கோரப்பட்டு, திருவாளர்கள். கேமன் இந்தியா லிட்., மும்பை ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. மேற்கண்ட4 மேம்பாலப்பணிகளுக்குமான மொத்த பணி மதிப்பு ரூ.37.72 கோடி ஆகும். மொத்த ஒப்பத்தொகை ரூ.40.81 கோடி ஆகும். தற்போது 3 மேம்பாலப்பணிகள் நடைபெற்று வருகின்றன. நான்காவது மேம்பாலப்பணியான பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை – டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் மேம்பாலப் பணி தொடங்குமுன், இச்சந்திப்பின் அருகே அமைந்துள்ள பைகிராப்ட்ஸ் நகர் நலச்சங்கம், ஸ்ரீ பால வினாயகர் பக்தர்கள் சங்கம் மற்றும் டர்ன்புல்ஸ் சாலை அடுக்குமாடி சொந்தக்காரர்கள் நலச்சங்கம் ஆகியோர் பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வழியாக மேம்பாலம் அமைக்கப்பட்டால் உண்டாகும் பயனை விட முத்துராமலிங்கம் சாலையின் குறுக்கே செனடாப் சாலை முதல் டர்ன்புல்ஸ் சாலை வரை மேம்பாலம் அமைக்கப்பட்டால் பெருமளவு பயனளிக்கும் என்று தங்களது கடிதங்கள் மூலம் கருத்து தெரிவித்திருந்தனர்.

பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வழியாக மேம்பாலம் அமைக்கும் திட்டமானது சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக எடுக்கப்பட்ட வாகனப்போக்குவரத்து ஆய்வுகளின் அடிப்படையில் அமைந்த திட்டமாகும். 1998ம் ஆண்டில் எல் அண்ட் டி. ராம்போல் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் அளித்த வாகனப் போக்குவரத்து ஆய்வறிக்கையில், செனடாப் சாலை முதல் டர்ன்புல்ஸ் சாலை வரை பாலம் அமைக்கும் திட்டத்தையே முதல் பரிந்துரையாக அளித்துள்ளனர். எனினும், இத்திட்டத்தை செயல்படுத்த நிலம் கையகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும் என தெரிவித்தது. அச்சமயம் கலந்தறிதற்குரியவர்க்கு கொடுக்கப்பட்ட முக்கிய குறிப்பானது நிலம் கையகப்படுத்துதலை தவிர்க்க வேண்டுமென்பதால், கலந்தறிதற்குரியவர்கள் இரண்டாவது பரிந்துரையாக பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வழியாக மேம்பாலம் அமைக்கும் திட்டத்தை அளித்தது. எனினும், இச்சந்திப்பில் மேம்பாலம் கட்ட 2006ம் ஆண்டில் தான் முடிவு செய்யப்பட்டது. எனவே, நலச்சங்கங்களின் கோரிக்கைக்கு இணங்க அண்ணா பல்கலைக்கழகத்தின் போக்குவரத்து பொறியியல் துறை மற்றும் கூடுதல் ஆணையர், காவல் (போக்குவரத்து) ஆகியோரிடம் கருத்துரு கோரப்பட்டது.

அண்ணா பல்கலைக்கழகம் போக்குவரத்து ஆய்வுகள் மேற்கொண்டபின் ஆய்வறிக்கையினை சமர்ப்பித்தது. அவ்வறிக்கையில் மேற்கண்ட சாலை சந்திப்பில் வாகன போக்குவரத்து அதிகம் இருக்கும் நேரங்களில், செனடாப் சாலை மற்றும் கிழக்கு பசும்பொன் முத்துராமலிங்கம் சாலைகளை தவிர எல்லா சாலைகளிலும் வாகனப்போக்குவரத்து அதிகரிக்கிறது. தற்போது இச்சந்திப்பில் 8000–9000 PCUs வாகன போக்குவரத்து உள்ளது. மேலும் இரண்டு வருடங்களில் 10000 PCUs வரை வாகன போக்குவரத்து இருக்கும். கோட்டூர்புரம் சாலையில் மிக அதிகமாக வாகன போக்குவரத்து உள்ளது. இதனை அடுத்து நந்தனம் சாலையில் வாகன போக்குவரத்து அதிகமாக உள்ளது. தகவல் தொழில்நுட்ப சாலையில் சமீபத்திய ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள வாகன போக்குவரத்து வளர்ச்சி காரணமாக கோட்டூர்புரம் சாலை, நந்தனம் சாலை மற்றும் செனடாப் சாலையில் வாகன போக்குவரத்து மிக அதிகரித்துள்ளது.

செனடாப் சாலை வழியாகவே மிக அதிகமான வாகனங்கள் செல்கின்றன. இதனை தொடர்ந்து சேமியர்ஸ் சாலையிலும், கோட்டூர்புரம் சாலையிலும் வாகனங்கள் அதிகமாக செல்கின்றன. 1998ம் ஆண்டிலிருந்து 2007ம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் செனடாப் சாலையில் வாகன போக்குவரத்து பெருமளவு அதிகரித்துள்ளது. நந்தனத்தில் இருந்து கோட்டூர்புரம் நோக்கி திரும்பும் வாகனங்களும் அதே போல் கோட்டூர்புரத்தில் இருந்து சேமியர்ஸ் சாலை நோக்கி திரும்பும் வாகன எண்ணிக்கையை கொண்டு கோட்டூர்புரம் சாலை மிக அதிகமான வாகன போக்குவரத்தை கையாள்கிறது என்பது தெளிவாகும்.

பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வழியாக மேம்பாலம் அமைந்தாலும் அல்லது செனடாப் சாலை – டர்ன்புல்ஸ் சாலை வழியாக மேம்பாலம் அமைந்தாலும், நந்தனம் பக்கமிருந்து டர்ன்புல்ஸ் சாலை நோக்கி வலது பக்கம் திரும்பும் வாகன போக்குவரத்தும் மற்றும் டர்ன்புல்ஸ் சாலையிலிருந்து சேமியர்ஸ் சாலைக்கு திரும்பும் வாகன போக்குவரத்தும் பாலத்தின் அடியிலேயே வேண்டிய போக்குவரத்து சிக்னல் விளக்குகளுடன் அமைய வேண்டும். எனவே, மேம்பாலத்தை செனடாப் சாலையிலிருந்து மற்றும் டர்ன்புல்ஸ் சாலை வழியாக அமைப்பதே சரியானதாகும்.

மேற்கண்டவாறு செனடாப் சாலை மற்றும் டர்ன்புல்ஸ் சாலை வழியாக மேம்பாலம் அமைக்கும் பணியினை மேற்கொள்ளும் நிலையில் போக்குவரத்து சீராக செயல்படும் விதமாக அதற்கு தேவையான நிலம் கையகப்படுத்துவது அவசியம் ஆகும் என தெரிவித்துள்ளது. நிலம் கையகப்படுத்தப்படுவது சிரமமாக இருப்பினும் மேற்கண்ட செனடாப் சாலை மற்றும் டர்ன்புல்ஸ் சாலை வழியாக மேம்பாலம் அமைக்கப்படுவதே போக்குவரத்து நெரிசலை குறைக்க சரியான வழி என தெரிவித்துள்ளது.

மேலும், கூடுதல் ஆணையர், காவல் துறை(போக்குவரத்து) அவர்களும் அண்ணா பல்கலைக்கழகம் அளித்த ஆய்வறிக்கையில் கூறியிருப்பதை ஆமோதித்துள்ளார். தனது ஆய்வறிக்கையில் இச்சந்திப்பில் மேற்கொள்ளப்பட்ட வாகன போக்குவரத்து ஆய்வுகளின்படி பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வழியாக மேம்பாலம் அமைப்பதற்கு பதிலாக செனடாப் சாலை மற்றும் டர்ன்புல்ஸ் சாலை வழியாக மேம்பாலம் அமைப்பதே சரியானது என தெரிவித்துள்ளார்.

மேலும், கூடுதல் ஆணையர், காவல் துறை (போக்குவரத்து) அவர்கள் தனது அறிக்கையில் இந்த மாற்று திட்டத்தினால் பழைய மகாபலிபுரம் சாலையில் புதிதாக துவங்கப்படும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு செல்லும் வாகன எண்ணிக்கை உயரும் நிலையில் இம்மாற்று திட்டமானது பெருமளவு பயன்படக்கூடியதாக அமையும் என தெரிவித்துள்ளனர். மேலும், தகவல் தொழில்நுட்ப சாலையில் சமீப காலங்களில் அதிகரித்துள்ள வாகன போக்குவரத்தை சமாளிக்க செனடாப் சாலை – டர்ன்புல்ஸ் சாலை வழியாக மேம்பாலம் அமைப்பதே பயனுள்ளதாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

எனவே, தற்போதைய போக்குவரத்து ஆய்வுகளின்படியும் போக்குவரத்து நிபுணர்களின் கருத்துகளின்படியும் பசும்பொன் முத்துராமலிங்கம் – டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் செனடாப் சாலை மற்றும் டர்ன்புல்ஸ் சாலை வழியாக மேம்பாலம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. இம்மாற்று திட்டத்தினை நடைமுறைப்படுத்த மன்றத்தின் தீர்மானம் எண்.579/2007, நாள்.28.11.2007 மூலம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேலும், ஏற்கனவே உள்ள திட்டத்தின்படி மேம்பாலத்தின் அகலம் 8 மீ மற்றும் நீளம்–640 மீ ஆகும். இந்த 640 மீ நீளமானது பாலத்தின் மைய வீச்சளவிற்கு கிழக்கில் 20மீ நீளம் கொண்ட 8 வீச்சளவுகள் உள்ளடங்கியதாகும். இந்த 8 வீச்சளவுகளும் மைய வீச்சளவுக்கு சமமான உயரத்திலேயே அமைந்திருந்தது. சாய்வு பகுதி இதன் பிறகே ஆரம்பமாகிறது. இதன் காரணமாக பாலத்தின் நீளம் 160 மீ அதிகரித்திருந்தது. கலந்தறிதற்குரியவரால் வழங்கப்பட்ட இந்த வடிவமைப்பின்படி பாலத்தின் இருபுற சாலைகளிலும் வாகனங்கள் செல்ல ஏதுவாக இருக்கும். பாலத்தின் கீழே உள்ள பக்கச்சாலைகளின் குறுகிய அகலம் காரணமாக, கலந்தறிதற்குரியவர்கள் இவ்வாறு நீளத்தை அதிகரித்திருந்தனர். இப்பணியின் ஒப்பத்தொகை ரூ.9.79 கோடி ஆகும்.

அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் கூடுதல் ஆணையர், காவல் துறை (போக்குவரத்து) ஆகியோர்களால் பரிந்துரை செய்யப்பட்ட இப்பாலத்திட்டம் அதே சாலை சந்திப்பில் ஏற்கனவே உள்ள பால திட்டத்தை $90^0$ மட்டுமே திருப்பி செனடாப் சாலை முதல் டர்ன்புல்ஸ் சாலை வரை அமைப்பதாகும். பாலத்தின் நீளம் 480 மீ (640 மீ – 160 மீ) ஆக இருக்கும். இதன் காரணமாக பணியின் ஒப்பத்தொகை சுமார் ரூ.7.00 கோடிக்கு குறைந்துவிடும். ஆனால் இந்த மாற்று திட்டத்தினை செயல்படுத்த செனடாப் சாலையில் சுமார் 1090 ச.அ. நிலம் மற்றும் டர்ன்புல்ஸ் சாலையில் சுமார் 134 ச.அ. நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். அதற்கு தோராயமாக ரூ.5.00 கோடி செலவாகும்.

இதனை தொடர்ந்து, ஒப்பக்குழுமத்தின் பரிந்துரை பின்வருபவற்றிற்கு (1) பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை – டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் ஏற்கனவே திட்டமிட்ட பாலத்தின் ஒழுங்கை $90^0$ மட்டுமே திருப்பி செனடாப் சாலை – டர்ன்புல்ஸ் சாலை வழியாக பாலம் அமைக்கும் பணியினை ஏற்கனவே திட்டத்திலுள்ள பணியாக கருதுவதா அல்லது புது பணியாக கருதுவதா மற்றும் (2) இம்மாற்று திட்டத்தை செயல்படுத்த ஏற்கனவே உள்ள பணி ஆணை வழங்கப்பட்ட ஒப்பந்ததாரரை கொண்டே பணியை மேற்கொள்ள இயலுமா அல்லது புதிதாக ஒப்பங்கள் கோரப்பட வேண்டுமா என கோரப்பட்டது.

ஒப்பக்குழுமம் மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் விரிவான கலந்தாய்விற்கு பிறகு பாலத்தின் ஒழுங்கு (Alignment) மட்டுமே மாற்றப்படுவதால் ஒரு மாற்றத்துடன் ஏற்கனவே உள்ள அதே பணியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என கீழ்க்கண்ட காரணங்களுக்காக பரிந்துரை செய்தது.

பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வழியாக மேம்பாலம் அமைத்தாலும், செனடாப் சாலை வழியாக மேம்பாலம் அமைத்தாலும், இத்திட்டமானது பசும்பொன்முத்துராமலிங்கம்–டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் வாகனப் போக்குவரத்தை சீரமைப்பதற்கே. வருங்கால வாகனப் போக்குவரத்தை கருத்தில் கொண்டே சரியான மேம்பால ஒழுங்கை நிர்ணியிக்க வேண்டும். அண்ணா பல்கலைக்கழகம் சரியான மேம்பால ஒழுங்கு செனடாப் சாலை–டர்ன்புல்ஸ் சாலை வழியே மேம்பாலம் அமைப்பதாகும் என்று அறிக்கை அளித்துள்ளனர். இதனையே கூடுதல் ஆணையர் காவல் (போக்குவரத்து) துறை அவர்களும் உறுதிபடுத்தியுள்ளார். ஏற்கனவே திட்டமிட்ட அதே சந்திப்பில், மேம்பாலத்தின் ஒழுங்கை மட்டும் $90^0$ திருப்பி செயல்படுத்தும் பணியை புதிய பணியாக கருதாமல், ஒரு மாற்றத்துடன் ஏற்கனவே உள்ள அதே பணியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

மேலும், பால ஒழுங்கு எந்த வழியாக இருந்தாலும் தொழில்நுட்ப ரீதியான பாலத்தின் அளவுகளிலும், பாலம் கட்டுமான முறையிலும் மாற்றம் இல்லாததாலும், இப்பணி ஒரு மாற்றத்துடனான பழைய பணி என்பதாலும் ஒப்பக்குழுமம், புதிய ஒப்பங்கள் கோர வேண்டிய வாய்ப்பில்லை என்றும் ஏற்கனவே உள்ள பணி ஆணை வழங்கப்பப்பட்ட ஒப்பந்ததாரர் மூலமாக இப்பணியை புதிய ஒழுங்கில் அதாவது பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வழியில் அமைப்பதற்கு பதிலாக செனடாப் சாலையில் அமைக்க ஏற்கனவே செய்துகொண்ட ஒப்பந்த உடன்படிக்கையின்படி இப்பணிக்கு செலவாகும் தொகையினை பாலத்தின் மாற்று ஒழுங்குடனான இந்தப் பாலப்பணியை ஒப்பந்ததாரருக்கு வழங்க ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தில் சில மாற்றங்களுடனானது என கருதலாம் என்றும் பரிந்துரை செய்தது. மேலும் தற்போதைய அலுவலக விலைகளையும் தற்போதைய சந்தை நிலவர விலைகளையும் கருத்தில் கொண்டும், ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரருக்கு இப்பணியை பழைய விலைகளின்படியே மேற்கொள்ள அனுமதிப்பது சென்னை மாநகராட்சிக்கு அனுகூலம் ஆகும் என ஒப்பக்குழுமம் விவாதித்தது.

மேலும், ஒப்பக்குழுமம் இந்த பால ஒழுங்கு மாற்றத்திற்கு அரசின் நிர்வாக அனுமதி பெறவும், இந்த ஒழுங்கு மாற்றத்தினால் நிலங்களை கையகப்படுத்த வேண்டும் என்றும் இதற்கு ரூ.5.00 கோடி செலவாகும் என்றும் அரசுக்கு தெரிவிக்கவும் இப்பணியின் திருத்திய மதிப்பீட்டிற்கு அரசின் நிர்வாக அனுமதி பெறவும் பரிந்துரை செய்தது.

எனவே,

1. பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை – டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் பால ஒழுங்கு மாற்றமாக செனடாப் சாலை – டர்ன்புல்ஸ் சாலை வழியே மேம்பாலம் அமைக்கும் பணிக்கு அரசின் நிர்வாக அனுமதி வேண்டி அரசுக்கு கடிதம் எழுத அனுமதியும்,
2. மேற்கண்ட செனடாப் சாலை முதல் டர்ன்புல்ஸ் சாலை வழியிலான மேம்பாலம் அமைக்கும் பணியினை ஏற்கனவே பணி ஆணை வழங்கப்பட்ட ஒப்பந்ததாரரான திருவாளர்கள். கேமன் இந்தியா லிட்., அவர்களுக்கு அவர்கள் முன்னரே அளித்த விலை விகிதத்தின்படியே வழங்க அனுமதியும்,
3. இந்த பால ஒழுங்கு மாற்றம் காரணமாக நிலங்களை கையகப்படுத்த வேண்டியுள்ளது என்றும் இதற்கு ரூ.5.00 கோடி செலவாகும் என்றும் அரசுக்கு தெரிவித்து அனுமதி வேண்டி கடிதம் எழுத அனுமதியும்,
4. இந்த பால ஒழுங்கு மாற்றம் காரணமாக இப்பணியின் திருத்திய மதிப்பீட்டிற்கு அரசின் நிர்வாக அனுமதி பெறவும்,
5. மேற்கூறியவற்றிற்கு அரசின் அனுமதியை ஏதிர்நோக்கி பணியை மேற்கொள்ள அனுமதியும், வேண்டி

1 முதல் 5 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.303/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.237/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ப.து.ந.க.எண்.4152 ( 2 ) / 2007**
**ஆணையர் அவர்களின் 17.12.2007 நாளிட்ட குறிப்பு**

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.647/2007 பொருள் எண்.24

**ஒளிவு மறைவில்லா ஒப்பந்தபுள்ளிச் சட்டம் 1998 – சட்ட விதி 7(1) மற்றும் (2) ஒப்பம் ஏற்கும் அதிகாரி / குழு நியமித்தல் – குறித்து.**

உள்ளாட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை, செயலாளர் அவர்களின் கடிதம் எம்.எஸ்.எண்.155, நாள் – 15.11.2007–ல், தமிழ்நாடு ஒளிவுமறைவில்லா ஒப்பங்கள் சட்டம் 1998 நடைமுறைக்கு வந்தபின், ஒப்பங்கள் சம்மந்தமான, சென்னை மாநகராட்சி சட்டம் உட்பட எல்லா சட்டங்களும் செயல் இழந்துவிட்டபடியால், சென்னை மாநகராட்சியில் ஒப்பங்கள் ஏற்கும் ஆணைக்குழு நியமிக்கப்படுவது கட்டாயமாகிறது என்றும், சென்னை மாநகராட்சியில் ஒப்பங்கள் ஏற்கும் ஆணைக்குழு உடனடியாக நியமிக்கப்படவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியின் ஒப்பங்களை ஏற்பதற்கு அதிகாரியையோ அல்லது குழுவையோ நியமிக்குமாறு ஒளிவு மறைவில்லா ஒப்பந்த புள்ளிச் சட்டம் 1998 –ன் சட்ட விதி 7/2–ன் படி நியமிக்ககோரி அறிவுறுத்தப்பட்டுள்ளது. உள்ளாட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை, செயலாளர் அவர்களின் கடிதம் எம்.எஸ்.எண்.155, நாள் – 15.11.2007–ன் தமிழாக்கம் மன்றத்தின் பார்வைக்கு தனியான குறிப்பு ப.து.ந.க.எண்.4152/2007–ன் படி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது ).

இது குறித்து, 11.12.2007 அன்று நடைபெற்ற சென்னை மாநகராட்சியின் ஒப்பந்த பரிசீலனைக் குழு கூட்டத்தில் கீழ் கண்ட விவரங்கள் விவாதிக்கப்பட்டது.

பொதுவாக அரசின் கீழ் இயங்கும் பொதுப் பணி துறையிலும் மற்றும் நெடுஞ்சாலை துறையிலும் நிர்வாகம் திறம்பட செயல்பட தொழில் நுட்ப அனுமதி மற்றும் ஒப்பந்த புள்ளிகளை ஏற்கும் அனுமதிக்கான வரம்புகள் காலத்திற்கு ஏற்ப திருத்தியும் மற்றும் உயர்த்தியும் வெளியீடு செய்யப்பட்டு வருகிறது. இது போன்று பொதுப் பணித் துறையிலும் நெடுஞ்சாலை துறையிலும் தொழில் நுட்ப அனுமதி மற்றும் ஒப்பந்த புள்ளிகளை ஏற்கும் அனுமதிக்கான வரம்புகள் அரசு ஆணை எண் எம்.எஸ்.140 தேதி 23.3.2000 மற்றும் அரசு ஆணை எண் எம்.எஸ்.80 தேதி 28.03.2007 கீழ் கண்டவாறு வெளியிடப்பட்டுள்ளன.

| வரிசை எண். | பதவி / அதிகார அமைப்பு | அதிகார வரம்புகள் | | | |
|---|---|---|---|---|---|
| | | பொது பணித் துறை (அரசு ஆணை எண் எம்.எஸ்.140 தேதி 23.3.2000) | | நெடுஞ்சாலை துறை ( அரசு ஆணை எண் எம்.எஸ்.80 தேதி 28.03.2007) | |
| | | தொழில்நுட்ப அனுமதி | ஒப்ப ஏற்பு அனுமதி | தொழில் நுட்ப அனுமதி | ஒப்ப ஏற்பு அனுமதி |
| 1 | செயற்பொறியாளர்/ கோட்டப் பொறியாளர் | ரூ.30.00 லட்சம் | ரூ.10.00 லட்சம் | ரூ.50.00 லட்சம் | ரூ.15.00 லட்சம் வரை (அதிக பட்சம் 3 % கூடுதல்) |
| 2 | கண்காணிப்புப் பொறியாளர் | ரூ. 1 கோடி | ரூ.30.00 லட்சம் | ரூ. 2.00 கோடி | ரூ.15.00 லட்சம் வரை (அதிக பட்சம் 6 % கூடுதல்)<br>ரூ.1.00 கோடி வரை (அதிக பட்சம் 3 % கூடுதல்) |
| 3 | தலைமைப் பொறியாளர் | முழு அதிகாரம் | ரூ.1.00 கோடி | முழு அதிகாரம் | ரூ.1.00 கோடி வரை (அதிக பட்சம் 6 % கூடுதல்)<br>ரூ.2.00 கோடி வரை (அதிக பட்சம் 3 % கூடுதல்) |
| 4 | பொறியாளர்கள் குழு | | | | ரூ.50.00 லட்சம் வரை (6% மேல்) |
| 5 | ஒப்பக்குழு ஆணையம் | | | | 3% மேல் கூடுதல் அல்லது 6% மேல் கூடுதல் இனம் 3 மற்றும் 4 ல் குறிப்பிடப்படாதது |
| | | | | | ரூ.2.00 கோடிக்கும் மேல் (எல்லையற்ற ஒப்ப கூடுதல் ) |

<u>ப.து.ந.க.எண்.4152 ( 2 ) / 2007</u>

தற்போது சென்னை மாநகராட்சியில் மதிப்பீடுகளுக்கான அனுமதி மற்றும் ஒப்பங்களுக்கான ஒப்புதல் அளிக்கும் பல்வேறு ஆணையத்தின் அதிகார வரம்புகள் தமிழ்நாடு அரசிதழ் எண்.301 நாள் 30.10.2003 ல் வெளியிடப்பட்டு, மன்ற தீர்மான எண்.639/2003 நாள் 27.11.2003 மூலம் பதிவு செய்யப்பட்டு, கீழ் கண்டவாறு நடைமுறையில் உள்ளது.

| மதிப்பீடு மற்றும் ஒப்பந்த ஒப்புதலுக்கான அதிகார வரம்புகள் | மதிப்பீடு மற்றும் ஒப்ப மதிப்பு வரம்பு |
|---|---|
| வார்டு குழுக்கள் | ரூ.1,00,000/– மிகாமல் |
| ஆணையாளர் | ரூ.1,00,001 முதல் ரூ.35,00,000/– வரை |
| நிலைக்குழுக்கள்<br>(வரிவிதிப்பு மற்றும் நிதி தவிர) | ரூ.35,00,001 முதல் ரூ.40,00,000/– வரை |
| நிலைக்குழு<br>(வரிவிதிப்பு மற்றும் நிதி தவிர) | ரூ.40,00,001 முதல் ரூ.45,00,000/– வரை |
| மன்றம் | ரூ.45,00,001 முதல் ரூ.50,00,000/– வரை |
| அரசு | ரூ.50,00,000க்கு மேல் |

தற்பொழுது சென்னை மாநகராட்சியில் அதிக எண்ணிக்கையில் திட்ட பணிகள் மற்றும் பெரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதால், மாநகராட்சி நிர்வாகத்தை மேலும் திறம்பட செய்வதற்கும், ஒப்பங்களை முடிவு செய்வதில் காலதாமதத்தை தவிர்ப்பதற்கும் சென்னை மாநகராட்சி பொறியாளர்களுக்கு ஒப்பங்களை முடிவு செய்யும் அதிகாரம் வழங்கலாம் என கருதப்படுகிறது.

இப்பொருள் குறித்து, 11.12.2007 அன்று நடைபெற்ற ஒப்ப பரிசீலனை குழுவில் மேற்கண்ட விவரங்கள் விரிவாக விவாதிக்கப்பட்டது. இந்த குழு சென்னை மாநகராட்சி பொறியாளர்களுக்கு ஒப்பங்களை முடிவு செய்யும் அதிகாரம் கீழ்க்கண்டவாறு வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளது.

| வரிசை எண். | பதவி / அதிகார அமைப்பு | ஒப்பம் ஏற்பதற்கான அதிகார வரம்பு | |
|---|---|---|---|
| | | அரசு ஆணை எண்.301/2003, நாள் – 30.10.2003– ன்படி | <u>ஆணையாளர் அவர்களின் ஆணை நாள் – 17.12.2007 ன்படி (வரிசை எண்.1 முதல் 6 வரை)</u> |
| 1 | செயற்பொறியாளர் (மண்டலம்/துறை)<br>கோட்ட மின் பொறியாளர் | ––– | ரூ.10 லட்சம் வரை (அதிக பட்சம் 3% கூடுதல்) |
| 2 | மண்டல அலுவலர் | ––– | ரூ.10 லட்சம் வரை (அதிக பட்சம் 6% கூடுதல்)<br><br>ரூ.15 லட்சம் வரை (அதிக பட்சம் 3% கூடுதல்) |
| 3 | கண்காணிப்பு பொறியாளர் /<br>நகர பொறியாளர் | ––– | ரூ.15 லட்சம் வரை (அதிக பட்சம் 6% கூடுதல்)<br><br>ரூ.25 லட்சம் வரை (அதிக பட்சம் 3% கூடுதல்) |
| 4 | தலைமை பொறியாளர் (பொது) தலைமை பொறியாளர் (கட்டிடம் மற்றும் பாலங்கள்) | ––– | ரூ.25 லட்சம் வரை (அதிக பட்சம் 6% கூடுதல்)<br><br>ரூ.30 லட்சம் வரை (அதிக பட்சம் 3% கூடுதல்) |
| 5 | <u>ஒப்பங்கள் ஏற்கும் குழுமம்</u><br>உறுப்பினர்கள் :<br>தலைமை பொறியாளர் (பொது), தலைமை பொறியாளர் (கட்டிடம் மற்றும் பாலங்கள்),<br>நிதி ஆலோசகர்,<br>ஆணையாளர் அவர்களால் அவ்வப்போது நியமிக்கப்படும் இரண்டு கண்காணிப்பு பொறியாளர்கள் | ––– | ரூ.35 லட்சம் வரை<br>(எல்லையற்ற ஒப்ப கூடுதல் ) |

<u>ப.து.ந.க.எண்.4152 ( 2 ) / 2007</u>

மேற்கண்ட ஒப்பம் ஏற்பதற்கான அதிகார வரம்பு விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கு நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.304/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பதிவு செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது"

"20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.238/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ப.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>பொ.து.ந.க.எண்.பி3/23587/2007</u>
<u>ஆணையரின் 12.12.2007 நாளிட்ட குறிப்பு</u>

<u>29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண்.648/2007 பொருள் எண்.25

<u>அரசாணை அமலாக்கம்</u>

அரசாணை எண் 327, நிதி(ஒய்வூதியம்)துறை, நாள்.30.08.2001–ல், அரசு பணியாளர்களின் பெற்றோர் மற்றும் கைம்பெண் / விவாகரத்து பெற்ற மகள்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையில் 5வது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி, மத்திய அரசு பணியாளரின் பெற்றோர் மற்றும் கைம்பெண் / விவாகரத்து பெற்ற மகள் ஆகியோருக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்க இந்திய அரசு ஆணையிட்டுள்ளதாக தெரிவித்து, அவ்வாணையை கவனமாக பரிசீலித்து தமிழ்நாடு அரசு பணியாளர்களுக்கு அவ்வாணையை நடைமுறைப்படுத்த அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

அரசு பணியாளர்களுக்கு அனுமதிக்கும் பயன்கள் அனைத்தும் சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கும் அனுமதிக்கப்படுகிறது. எனவே, சென்னை மாநகராட்சியில் பணியாளர்களின் பெற்றோர்களும், மகன் / மகள் / கைம்பெண் / விவாகரத்து பெற்ற மகள் ஆகியோருக்கு அரசாணையில் குறிப்பிட்ட விதிகளுக்குட்பட்டு, அரசு ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளான 30.08.2001 முதல் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுடையவர் ஆவர்.

மேற்படி ஆணையினை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

> "20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.204/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.க.கு.ந.க.எண்.அ8/7271,7841/2007
ஆணையாளரின் 26/11/2007 நாளிட்ட குறிப்பு

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.649/2007 பொருள் எண்.26

அரசாணை அமலாக்கத்திற்கு பின்னேற்பு ஆணை வேண்டி

அரசாணை எண்.413, நிதி (ச.கு.) துறை, நாள்: 31/07/2004ல் 01/01/1996 முதல் 31/03/2004 வரை ஒய்வு பெற்ற அலுவலர்களுக்கான 60 சதவீத ஊதிய குழு நிலுவை தொகைக்கு 31/03/2003 வரையிலான வட்டி தொகை கணக்கிடப்பட்டு, அதனை வட்டியில்லா கணக்குத் தலைப்புக்கு மாற்றம் செய்து, அத்தொகையினை, 3 சமபங்குகளாக தபால்நிலைய வைப்புநிதி பத்திரங்களாகவோ அல்லது தேசிய சிறுசேமிப்பு பத்திரங்களாகவோ, அவ்வலுவலரின் விருப்பத்தினை பெற்று, முதல் தவணை தொகையினை 2004–2005லும் 2வது தவணையினை 2005–2006லும் மூன்றாவது தவணையினை 2006–2007லும் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசாணை எண்.414, நிதி (ச.கு.) துறை, நாள்: 31/07/2004ல் 01/04/2004ற்கு பிறகு ஓய்வு பெறும் அலுவலர்களுக்கான 60 சதவீத ஊதிய குழு நிலுவை தொகைக்கு 31/03/2003 வரையிலான வட்டி கணக்கிடப்பட்டு மொத்த தொகையினை வட்டியில்லா கணக்கு தலைப்புக்கு மாற்றம் செய்து, அத்தொகையினை 3 சம தவணைகளாக பிரித்து, அலுவலர் ஓய்வு பெறும் ஆண்டில் முதல் தவணையும், அடுத்தடுத்து வரும் இரண்டு ஆண்டுகளில் இரண்டு தவணையும் தபால் நிலைய சேமிப்பு பத்திரங்களாகவோ, அல்லது தேசிய சேமிப்பு பத்திரங்களாகவோ அவ்வலுவலரின் விருப்பத்தினை பெற்று வழங்க உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்ற ஊழியர் சங்கம் மற்றும் அரசு கல்லூரி ஆசிரியர் மன்றம் அரசாணை 413, 414 நிதி (ச.கு.) துறை நாள் 31/07/2004யினை செல்லுபடி அற்றதென விலக்க செய்யவும், 12 சதவீத பொது வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி தொகையினை, ஊதிய குழு தொகை வழங்கும் நாள்வரை கணக்கிட்டு வழங்க நீதிப்பேராணை விண்ணப்பம் எண்.28349, 28350 மற்றும் 29180 வருடம் 2004 மூலம் மனுச் செய்தனர்.

அரசாணை எண்.490, நிதி (ச.கு.) துறை நாள்: 31/07/2006ல் அரசாணை 413, 414, நிதித் (ச.கு.) துறை ஆகியவற்றிற்கு பதிலாக 01.01.1996 முதல் 31.03.1998 வரையிலான 60 சதவீத ஊதிய குழு நிலுவைத்தொகையினை 31.03.2003 வரை வட்டியுடன் சேர்த்து 01.08.2006 அன்றைய தேதியில் பணியில் உள்ள அலுவலர்களுக்கும் மற்றும் அதன்பின்னர் ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கும் 3 சம தவணைகளில் 2006–2007 நிதியாண்டு முதல் தொடர்ந்து பணமாக வழங்கவும், இதற்கு முன்னர் ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கும் மீதம் உள்ள தவணை தொகையினை பணமாக வழங்கவும் உத்தரவிட்டுள்ளது.

சென்ன்ன உயர்நீதி மன்றம் தனது 12.04.2007 நாளிட்ட தீர்ப்பில் ஊதிய குழு நிலுவை தொகையினை மறுபடியும் வட்டியுடன் கூடிய கணக்கில் வரவு வைக்கவும் மற்றும் அதற்கான வட்டி, பொது வருங்கால வைப்பு நிதிக்கான நடப்பில் உள்ள வட்டி விகிதப்படி கணக்கிட்டு வழங்கவும் உத்தரவிட்டுள்ளது.

அரசு இந்த உயர்நீதிமன்ற 12.04.2007 நாளிட்ட நீதிப்பேரணை எண்.28349,28350 மற்றும் 29180 மீதான ஆணையினை எதிர்த்து, சிறப்பு விடுமுறைநாள் நீதிமன்றத்தில் மனு செய்தது. இந்திய உச்சநீதிமன்றம் தனது 06.08.2007 நாளிட்ட சிறப்பு விடுமுறைநாள் மனு எண்.12748 மற்றும் 12750ல், அரசின் சிறப்பு விடுப்ப்பு மனுவினை(Special Leave Petition) நிராகரித்து ஆணையிட்டது.

உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில், அரசு கவனத்துடன் பரிசீலித்து, ஓய்வு பெற்ற ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி கணக்கு மாநில கணக்காயர் அவர்களால் ஏற்கனவே முடிக்க பெற்றது என்றும், தற்போது பணிபுரியும் ஊழியர்களின் நிலுவை தொகை ஏற்கனவே வட்டியில்லா கணக்கினகீழ் வரவு வைக்கப்பட்டு 2 தவணைகள் வழங்கப்பட்டுவிட்டதாலும் உயர்நீதிமன்றம் தெரிவித்ததுபோல் ஊதிய குழு நிலுவை தொகையினை மீண்டும் வட்டியுடன் சேர்த்து வழங்குவது நடைமுறை சாத்தியமில்லை. எனவே, உயர்நீதிமன்ற உட்கருத்து 60 சதவீத ஊதிய குழு நிலுவை தொகைக்கான வட்டி, வருங்கால வைப்பு நிதிக்கான நடப்பிலுள்ள வட்டி விகிதப்படி வழங்கப்பட வேண்டும் என்பதேயன்றி 31.03.2003 வரை மட்டும் நிறுத்தப்படகூடாது என்பதேயாகும்.

எனவே, அரசு உயர்நீதிமன்ற உத்தரவினை நடைமுறைப்படுத்த முடிவு செய்தது. அதன்படி, இதற்குமுன் பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண்.413 மற்றும் 414 நிதி துறையில் பகுதி மாற்றம் செய்து, 60 சதவீத ஊதிய குழு நிலுவை தொகைக்கு தற்போது நடப்பில் உள்ள பொது வருங்கால வைப்பு நிதி வட்டி விகிதப்படி நிலுவை தொகைக்கு 8 சதவீத வட்டியினை 31.03.2003ற்கு பிறகு முதல் நிலுவை தொகை வழங்கும் நாள் வரையில் கணக்கிட்டும் வழங்க அரசாணைஎண்.484, நிதி(ச.கு)துறை நாள்:08/10/2007;ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து துறைத் தலைவர்களை 31.03.2003ற்கு பின் உள்ள 60 சதவீத ஊதிய குழு நிலுவை தொகையினை வட்டியுடன் கணக்கிட்டு ஓய்வு பெற்ற/பணியிலிருக்கும் ஊழியர்களுக்கும் உடனடியாக வழங்கவும், 31.03.2008ற்கு பின் 60 சதவீத ஊதிய குழு நிலுவை தொகைக்கான வட்டி வழங்கப்பட கூடாது எனவும் சம்பள வழங்கும் அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கும்படியும் கூறப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட ஆணை அரசு உதவி பெறும் பள்ளிகள், கல்லூரிகளில் பணிபுரியுமி அனைத்து ஆசிரியர் மற்றும் ஆசிரியல்லாத ஊழியர்களுக்கும், உள்ளாட்சி துறை பணியாளர்கள், மாநகராட்சி மற்றும் நகராட்சி பணியாளர்களுக்கும் பொருந்தும் . உள்ளாட்சி மன்றங்களில் வழங்கப்படும் வட்டி தொகைக்கான நிதி அதனதன் உள்ளாட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, அரசாணைஎண்.484, நிதி(ச.கு)துறை நாள்:08/10/2007ல் கூறப்பட்டுள்ள அட்டவணைப்படி சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கும்/ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கும் 60 சதவீத ஊதிய குழு நிலுவைத் தொகைக்கான வட்டி கணக்கிட்டு வழங்கப்பட வேண்டும்.

எனவே, அரசாணை எண்.428 நாள்:08/09/2007 மற்றும் அரசாணை எண்.484, நாள் :08/10/2007 நிதி(ச.கு) துறை ஆகியவற்றை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு் நிலைக்குழு (வவிமநி) மூலமாக மாமன்றத்தின் பின்னேற்பு ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது.

“20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.202/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.க.கு.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.650/2007 பொருள் எண்.27

அரசாணை அமுலாக்கம்

அரசாணை எண். (2D) 28, தகவல் தொழில் நுட்ப துறை, நாள் 27.11.2007ன்படி திருவாளர்கள். ரெயில் டெல் கார்ப்ரேசன் ஆப் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கு கண்ணாடி இழை வடங்கள் பதிப்பதற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

அரசாணை எண்:7 தகவல் தொழில்நுட்பத்துறை, நாள்:12.02.2001 மற்றும் அரசாணை எண்.29 தகவல் தொழில் நுட்பத்துறை நாள் 04.11.2003 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டு இந்நிறுவனம் கண்ணாடி இழை வடங்கள் பதிப்பதற்கு பொது வழித்தட உரிமையை உபயோகிக்க அறிவுறுத்தப்படுகிறது. இது சம்மந்தமாக அவ்வப்போது கூறப்படும் திருத்தங்களும் இந்நிறுவனத்திற்கு பொருந்தும். நகர்புற பகுதிகளில் முடிந்தவரை சாலை வெட்டில்லா தொழில்நுட்ப (Trenchless Technology) முறையை பயன்படுத்தி வடங்கள் (Cable) அமைக்க வேண்டும். வருடாந்திர தட வாடகையாக (Annual Track Rent) ஒரு கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.9,400/– (ரூபாய் ஒன்பதாயிரத்து நானூறு மட்டும்) வீதம் சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும். வருடாந்திர தட வாடகை பற்றிய கொள்கை முடிவில் ஏதேனும் இனிமேல் மாறுதல் இருந்தால் இது மனுதாரருக்கு பொருந்தும். இந்நிறுவனத்தால் கேபிள் அமைக்கும் பணி முடிந்தபின் சாலை வெட்டுக்களை சரி செய்யும் பணி (Restoration of Road Cut) சென்னை மாநகராட்சியால் குறிப்பிட்டுள்ள தொழில் நுட்ப தரப்படி (Specification) சென்னை மாநகராட்சிக்கு திருப்தி அளிக்கும் வகையில் அந்நிறுவனம் செய்து முடிக்க வேண்டும். மேலும் அரசாணையில் குறிப்பிட்டுள்ள எல்லா நிபந்தனைகளும் கடைப்பிடிக்கப்படும் என்று பிணை வைப்பு காப்பு உறுதிப்பத்திரம் (Indemnity Bond) ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் இந்நிறுவனம் கொடுக்க வேண்டும். மேலும் இந்நிறுவனம் சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியருக்கு தாங்கள் எல்காட் நிறுவனத்தால் பராமரிக்கப்படும் மாநிலம் சார்ந்த நெட்வொர்க்குக்கு 2mbps அகல கட்டினை கட்டணம் ஏதுமின்றி அமைத்துத்தர உறுதி மொழி அளிக்க வேண்டும். மேற்படி நிபந்தனைகளின்படி திருவாளர்கள். ரெயில் டெல் கார்ப்ரேசன் ஆப் இந்தியா லிமிடெட் அவர்களுக்கு சென்னை நகரில் கண்ணாடி இழை வடங்களை பதிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கான அரசாணை எண்..(2D) 28, தகவல் தொழில் நுட்ப துறை நாள் 27.11.2007–ஐ அமுல்படுத்துவது பற்றி மன்றத்தின் பார்வைக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்கு (வ.வி. (ம) நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.296/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது”

“20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.215/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பே.சா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பே.சா.து.ந.க.எண்.பி4/3138(இ) /2007
ஆணையர் அவர்களது 17.12.2007 நாளிட்ட குறிப்பு

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.651/2007 பொருள் எண்.28

**அரசாணை அமுலாக்கம்**

அரசாணை எண். (2D) 26, தகவல் தொழில் நுட்ப துறை, நாள் 27.11.2007ன்படி திருவாளர்கள். யூ டெலிகாம் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு கண்ணாடி இழை வடங்கள் பதிப்பதற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

அரசாணை எண்:7 தகவல் தொழில்நுட்பத்துறை, நாள்:12.02.2001 மற்றும் அரசாணை எண்.29 தகவல் தொழில் நுட்பத்துறை நாள் 04.11.2003 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டு இந்நிறுவனம் கண்ணாடி இழை வடங்கள் பதிப்பதற்கு பொது வழித்தட உரிமையை உபயோகிக்க அறிவுறுத்தப்படுகிறது. இது சம்மந்தமாக அவ்வப்போது கூறப்படும் திருத்தங்களும் இந்நிறுவனத்திற்கு பொருந்தும். நகர்புற பகுதிகளில் முடிந்தவரை சாலை வெட்டில்லா தொழில்நுட்ப (Trenchless Technology) முறையை பயன்படுத்தி வடங்கள் (Cable) அமைக்க வேண்டும். வருடாந்திர தட வாடகையாக (Annual Track Rent) ஒரு கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.9,400/– (ரூபாய் ஒன்பதாயிரத்து நானூறு மட்டும்) வீதம் சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும். வருடாந்திர தட வாடகை பற்றிய கொள்கை முடிவில் ஏதேனும் இனிமேல் மாறுதல் இருந்தால் இது மனுதாரருக்கு பொருந்தும். இந்நிறுவனத்தால் கேபிள் அமைக்கும் பணி முடிந்தபின் சாலை வெட்டுக்களை சரி செய்யும் பணி (Restoration of Road Cut) சென்னை மாநகராட்சியால் குறிப்பிட்டுள்ள தொழில் நுட்ப தரப்படி (Specification) சென்னை மாநகராட்சிக்கு திருப்தி அளிக்கும் வகையில் அந்நிறுவனம் செய்து முடிக்க வேண்டும். மேலும் அரசாணையில் குறிப்பிட்டுள்ள எல்லா நிபந்தனைகளும் கடைப்பிடிக்கப்படும் என்று பிணை வைப்பு காப்பு உறுதிப்பத்திரம் (Indemnity Bond) ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் இந்நிறுவனம் கொடுக்க வேண்டும். மேலும் இந்நிறுவனம் சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியருக்கு தாங்கள் எல்காட் நிறுவனத்தால் பராமரிக்கப்படும் மாநிலம் சார்ந்த நெட்வொர்க்குக்கு 2mbps அகல கட்டினை கட்டணம் ஏதுமின்றி அமைத்துத்தர உறுதி மொழி அளிக்க வேண்டும். மேற்படி நிபந்தனைகளின்படி திருவாளர்கள். யூ டெலிகாம் இந்தியா பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு சென்னை நகரில் கண்ணாடி இழை வடங்களை பதிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கான அரசாணை எண்..(2D) 26, தகவல் தொழில் நுட்ப துறை நாள் 27.11.2007–ஐ அமுல்படுத்துவது பற்றி மன்றத்தின் பார்வைக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்கு (வ.வி. (ம) நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.297/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது”

“20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.216/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பே.சா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பே.சா.து.ந.க.எண்.பி4/3138(ஆ) /2007
ஆணையர் அவர்களது 17.12.2007 நாளிட்ட குறிப்பு

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.652/2007 பொருள் எண்.29

**அரசாணை அமுலாக்கம்**

அரசாணை எண். (2D) 29, தகவல் தொழில் நுட்ப துறை, நாள் 27.11.2007ன்படி திருவாளர்கள். துலிப் ஐடி சர்விசஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு கண்ணாடி இழை வடங்கள் பதிப்பதற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

அரசாணை எண்:7 தகவல் தொழில்நுட்பத்துறை, நாள்:12.02.2001 மற்றும் அரசாணை எண்.29 தகவல் தொழில் நுட்பத்துறை நாள் 04.11.2003 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டு இந்நிறுவனம் கண்ணாடி இழை வடங்கள் பதிப்பதற்கு பொது வழித்தட உரிமையை உபயோகிக்க அறிவுறுத்தப்படுகிறது. இது சம்மந்தமாக அவ்வப்போது கூறப்படும் திருத்தங்களும் இந்நிறுவனத்திற்கு பொருந்தும். நகர்புற பகுதிகளில் முடிந்தவரை சாலை வெட்டில்லா தொழில்நுட்ப (Trenchless Technology) முறையை பயன்படுத்தி வடங்கள் (Cable) அமைக்க வேண்டும். வருடாந்திர தட வாடகையாக (Annual Track Rent) ஒரு கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.9,400/– (ரூபாய் ஒன்பதாயிரத்து நானூறு மட்டும்) வீதம் சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும். வருடாந்திர தட வாடகை பற்றிய கொள்கை முடிவில் ஏதேனும் இனிமேல் மாறுதல் இருந்தால் இது மனுதாரருக்கு பொருந்தும். இந்நிறுவனத்தால் கேபிள் அமைக்கும் பணி முடிந்தபின் சாலை வெட்டுக்களை சரி செய்யும் பணி (Restoration of Road Cut) சென்னை மாநகராட்சியால் குறிப்பிட்டுள்ள தொழில் நுட்ப தரப்படி (Specification) சென்னை மாநகராட்சிக்கு திருப்தி அளிக்கும் வகையில் அந்நிறுவனம் செய்து முடிக்க வேண்டும். மேலும் அரசாணையில் குறிப்பிட்டுள்ள எல்லா நிபந்தனைகளும் கடைப்பிடிக்கப்படும் என்று பிணை வைப்பு காப்பு உறுதிப்பத்திரம் (Indemnity Bond) ஒவ்வொரு விண்ணபத்திற்கும் இந்நிறுவனம் கொடுக்க வேண்டும். மேலும் இந்நிறுவனம் சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியருக்கு தாங்கள் எல்காட் நிறுவனத்தால் பராமரிக்கப்படும் மாநிலம் சார்ந்த நெட்வொர்க்குக்கு 2mbps அகல கட்டினை கட்டணம் ஏதுமின்றி அமைத்துத்தர உறுதி மொழி அளிக்க வேண்டும். மேற்படி நிபந்தனைகளின்படி திருவாளர்கள். துலிப் ஐடி சர்விசஸ் லிமிடெட் அவர்களுக்கு சென்னை நகரில் கண்ணாடி இழை வடங்களை பதிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கான அரசாணை எண்..(2D) 29, தகவல் தொழில் நுட்ப துறை நாள் 27.11.2007–ஐ அமுல்படுத்துவது பற்றி மன்றத்தின் பார்வைக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்கு (வ.வி. (ம) நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.298/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது”

“20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.217/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பே.சா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மி.து.ந.க.எண்.உ.பொ./பி1/1795/07**
**ஆணையர் அவர்களின் 13.12.2007 நாளிட்ட குறிப்பு**

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.653/2007 பொருள் எண்.30

**சென்னை மாநகராட்சி, மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கு செல் தொலைபேசி வழங்கியது, மாதாந்திர கட்டணம் செலுத்துவது, முன் பணம் பெறுவது சம்பந்தமாக.**

மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் ஆகியோர்க்கு இதுவரை 770 பேருக்கு மின்துறையால் C.U.G திட்டமுறையில் செல் தொலைபேசி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினம் ரூ.1,14,730/– + வரி ( 770 x 149 = 1,14,730 + வரி ) பொதுத்துறை மூலம் செலுத்தப்பட்டு வருகிறது. தற்போதைய C.U.G முறையில் மாதம் ஒன்றுக்கு அதிகபட்சமாக 100 நிமிடம் மட்டுமே C.U.G அல்லாத உறுப்பினர்களுடன் பேச முடியும். C.U.G அல்லாத உறுப்பினர்களுடன் பேச வழங்கப்பட்டுள்ள 100 நிமிடம் மாநகராட்சி உயர் அதிகாரிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கு போதுமானதல்ல. எனவே, வணக்கத்திற்குரிய மேயர், துணை மேயர் ஆணையர், இணை ஆணையர்கள், துணை ஆணையர் ஆகியோருக்கு C.U.G அல்லாத உறுப்பினர்களுடன் பேச அவர்களுக்கு உச்ச வரம்பில்லாமல் அவர்கள் பேசும் அளவிற்கு கட்டணம் செலுத்தவும் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கு C.U.G அல்லாத உறுப்பினர்களுடன் பேச ரூ.500/– என்ற அளவில் நிர்ணயிக்க திட்டமிடப்பட்டது. இது சம்பந்தமாக ஆணையர் ஒப்புதல் ஏற்கனவே பெறப்பட்டுள்ளது.

B.S.N.L நிறுவனத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயிப்பது சம்பந்தமாக ஒரு கடிதம் அனுப்பப்பட்டு, மேலும் அதற்கான SIM Card குறித்த ஏற்பாடுகளை குறிப்பிட்ட அதிகாரிகள் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கு அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

SIM Card குறித்த செயல்களில் ஏற்படும் காலதாமதம் காரணமாக உச்சவரம்பை வணக்கத்திற்குரிய மேயர், வார்டு உறுப்பினர்கள் மற்றும் உயர் அதிகாரிகளால் பயன்படுத்த முடியாமல், 100 நிமிடத்திற்கு மேல் C.U.G அல்லாத உறுப்பினர்களுடன் பேச முடியவில்லை. இந்த சூழ்நிலையின் காரணமாக, தற்காலிக ஏற்பாடாக நிர்ணயிக்கப்பட்ட உச்ச வரம்பு தொகையினை மாமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்த வசதியாக தொலைபேசி கட்டணம் கணக்கு தலைப்பு எண்.334ன் கீழ் மூலம் முன்பணம் பெற ஆணையாளரின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

வணக்கத்திற்குரிய மேயர், வார்டு உறுப்பினர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கான உச்சவரம்பு தொகை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | அலுவலர்களின் பதவி | அனுமதிக்கப்பட்ட உச்சவரம்பு தொகை | துறை |
|---|---|---|---|
| 01. | வணக்கத்திற்குரிய மேயர் | உச்சவரம்பு இல்லை | மன்றத்துறை |
| 02. | துணை மேயர் | உச்சவரம்பு இல்லை | மன்றத்துறை |
| 03. | ஆணையாளர் | உச்சவரம்பு இல்லை | பொதுத்துறை |
| 04. | இணை ஆணையர் (சுகாதாரம்) | உச்சவரம்பு இல்லை | சுகாதாரத்துறை |
| 05. | இணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) | உச்சவரம்பு இல்லை | வருவாய்த்துறை |
| 06. | இணை ஆணையர் (கல்வி ) | உச்சவரம்பு இல்லை | கல்வித்துறை |
| 07. | துணை ஆணையர் ( பணிகள் ) | உச்சவரம்பு இல்லை | பணிகள் துறை |
| 08. | வார்டு உறுப்பினர்கள், (மொத்தம் 153 நபர்கள்) | மாதம் ரூ.500/ | மன்றத் துறை |

மேற்கண்டுள்ளவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ள உச்சவரம்பின்படி முன் பணம் பெற்று ஒவ்வொரு மாதமும் தொலைபேசி துறைக்கு வழங்குவதற்கும் பின்னர் பெறப்பட்ட முன் பணம் சரி செய்வதற்கும் ஏற்படும் நடைமுறை நிர்வாக சிரமங்கள் காரணமாக முன்பணம் பெறப்படாமல் அதிகாரிகள் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தாங்களாகவே டாப் அப் செய்து வருகிறார்கள்.

எனவே மேற்படி சிரமங்கள் தவிர்ப்பதற்கு மாமன்ற உறப்பினர்களுக்கு மேற்குறிப்பிட்டுள்ளவாறு கணக்கிடப்பட்ட தொகையினை ஒவ்வொரு மாதமும் மொத்தமாக பொதுத்துறை மூலமாக செலுத்தலாம்.

மேலும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள மாதங்களுக்கு மன்ற உறுப்பினர்கள் தங்கள் செல் தொலைபேசியில் தாங்களாகவே தங்கள் செலவில் டாப் அப் செய்துள்ளப்படியால் ஒவ்வொரு மாதமும் அனுமதிக்கப்பட்ட தொகையினை மன்ற உறுப்பினர்களுக்கு திரும்ப வழங்க வேண்டியுள்ளது.

எனவே, கீழ்கண்ட இனங்களுக்கும், இதனால் ஏற்படும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>மி.து.ந.க.எண்.உ.பொ./பி1/1795/07</u>

அ) சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களுக்கு C.U.G திட்டமுறையில் இதுவரை அனுமதிக்கப்பட்ட 770 செல் தொலைபேசிகளுக்கு மாதந்தோறும் வாடகை ரூ.1,14,730/– + வரி (770 x 149 = 1,14,730 + வரி 12.36% ) செலுத்தவும்,

ஆ) அட்டவணையில் 8வது வரிசை எண்ணில் குறிப்பிட்டுள்ளவாறு மாமன்ற உறுப்பினர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ. 76,500/- + வரி (500 x 153 = 76,500/- + வரி) ஐ மாதந்தோறும் செலுத்தவும்,

இ) அட்டவணையில் உள்ள உச்ச வரம்பு தொகையில்லாத வணக்கத்திற்குரிய மேயர், துணை மேயர் மற்றும் உயர் அதிகாரிகள் (வரிசை எண். 1 முதல் 7 வரை) ஆகியோர் பயன்படுத்தும் செல் தொலைப்பேசிக்குரிய கட்டணத்தை மாதந்தோறும் செலுத்தவும்,

ஈ) சென்னை மாநகராட்சியில் குறிப்பிட்டுள்ள அலுவலர்களுக்கு வழங்கப்படும் செல் தொலைபேசி வசதி, மேற்படி காலி பணியிடங்கள் நிரப்பப்படும் போது அவர்களுக்கு செல் தொலைபேசி வழங்கிடவும்,

உ) மன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே டாப் அப் செய்த தொகையை (அனுமதிக்கப்பட்டுள்ள உச்ச வரம்பு தொகைக்குள்) அவர்களுக்கு திரும்பத் தரவும்,

ஊ) வரும் காலங்களில் மாநகராட்சியால் வழங்கப்படும் செல் தொலைப்பேசிக்கான கட்டணத்தை அனுமதிக்கவும்,

எ) 'அ' முதல் 'ஊ' வரை அனுமதிப்பதால் மாதந்தோறும் ஏற்படும் மொத்த செலவுத் தொகையையும் வரி செலுத்தவும் மற்றும் மேற்படி செலவுத் தொகையினை தொலைபேசி கட்டணம் கணக்கு தலைப்பு எண்.334 கீழ் அனுமதிக்கவும் இத்தொகையினை பொது துறை மூலம் செலுத்தவும்,

மேற்கண்ட ' அ' முதல் 'எ' வரையிலான இனங்களுக்கு இதனால் ஏற்படும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு ( பணிகள்), மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.277/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.225/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மி.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

சு.து.ந.க.எண்.பி1/5606/2007

ஆணையாளரின் 20.11.2007 நாளிட்ட குறிப்பு.

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.654/2007 பொருள் எண்.31

**சுகாதாரத்துறை – பகுப்பாய்வு கூடங்களுக்கு/ஆய்வகத்திற்கு – சில்லரை செலவினங்களுக்காக அலுவலக முன் பணம் ரூ.5000/–ம் (Contingency)வழங்குவது சம்மந்தமாக**

சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை, நோயால் பாதிக்கப்பட்ட நோயாளியின், நோயிற்கான காரண கிருமியை கண்டறிவதும், நோயின் சீறிய விளைவுகளை கண்டறிவதும், நோயிலிருந்து முழுமையாக குணமடைந்ததை ஊர்ஜிதப்படுத்துவதும் மிக முக்கியமாக கடமைகளில் ஒன்றாகும். இச்சேவை நடுத்தர மக்களுக்கு வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கும் குறைந்த கட்டணத்தில் அளிப்பது பயனுள்ளதாக இருக்கும். இவ்வாறு வசூலிக்கும் குறைந்த கட்டணம் மற்றும் உணவு கையாளும் பணியாளர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்ய வசூலிக்கும் கட்டணங்களிலிருந்து லாபம் இல்லாமல் பகுப்பாய்வு கூடங்களை நடத்துவது சிறந்த சேவையாக இருக்கும்.

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையின் கீழ் இயங்கிவரும் பகுப்பாய்வு கூடங்கள்/ஆய்வகம் விவரம் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1. | பெரம்பூர் பகுப்பாய்வு கூடம் | – | மண்டலம்–3 |
| 2. | ஈ.வெ.ரா. சாலை பகுப்பாய்வு கூடம் | – | மண்டலம்–5 |
| 3. | வள்ளுவர் கோட்டம் பகுப்பாய்வு கூடம் | – | மண்டலம்–7 |
| 4. | செல்லப்பன் முதலி தெரு ஆய்வகம் | – | மண்டலம்–7 |
| 5. | சைதாப்பேட்டை பகுப்பாய்வு கூடம் | – | மண்டலம்–9 |
| 6. | திருவான்மியூர் பகுப்பாய்வு கூடம் | – | மண்டலம்–10 |

மேற்கண்ட பகுப்பாய்வுக் கூடங்களை சீரான முறையில் நடத்திடவும் அவசர செலவுக்காகவும், அவசியம்/அவசரத்தில் தேவைப்படும் பல்வகைப்பொருட்கள் (இரசாயனப்பொருட்கள் & உபகரணங்கள் ect.,) போன்றவை வாங்குவதற்காகவும், அலுவல் முன் பணத்தொகை ரூ.5000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) (Contingency Amount) மேற்கண்ட ஒவ்வொரு பகுப்பாய்வுக்கூடம் மருத்துவ அலுவலர் மற்றும் பகுப்பாய்வு கூடம் பொறுப்பாளர் அவர்களிடம் அந்தந்த மண்டலங்கள் மூலம் வழங்குவதற்கும், மேலும் பெறப்பட்ட முன் தொகைக்கு கடன் பட்டியல் சமர்பித்து மீண்டும் பெறுவதற்கு அனுமதிக்கும் கீழ்கண்ட இனங்களுக்கு ஆணை வேண்டப்படுகிறது.

1. சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையின் கீழ் இயங்கி வரும் பெரம்பூர் பகுப்பாய்வுக்கூடம், மண்டலம்–3 ஈ.வெ.ரா. சாலை பகுப்பாய்வுக்கூடம், மண்டலம்–5, வள்ளுவர் கோட்டம் பகுப்பாய்வுக்கூடம், மண்டலம்–7, சைதாப்பேட்டை பகுப்பாய்வுக்கூடம், மண்டலம்–9, திருவான்மியூர் பகுப்பாய்வுக்கூடம், மண்டலம்–10 மற்றும் செல்லப்பன் முதலி தெரு ஆய்வகம், மண்டலம்–7 ஆகியவைகள் சீரான முறையில் செயல்படுத்திட அவசர/அவசிய செலவீனத்தை மேற்கொள்ள, சில்லரை செலவீனமாக ஆலுவலக முன்பணம் ரூ.5000/–ம் (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) (Contingency amount) ஒவ்வொரு பகுப்பாய்வு கூடத்திலும் உள்ள மருத்துவ அலுவலர்/பொறுப்பாளர் அவர்களிடம் அந்தந்த மண்டலங்கள் மூலம் வழங்குவதற்கு அனுமதியும்

2. ஒவ்வொரு முறையும் செலவிடப்பட்ட அவசர/அவசிய செலவீனத் தொகையினை (Contingency amount) அந்த பகுப்பாய்வுக்கூடத்திற்கு உட்பட்ட மண்டல அலுவலர் மூலமாக பெறப்பட்ட தொகையை நேர்செய்யவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**சு.து.ந.க.எண்.பி1/5606/2007**

மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி நிலைக்குழுக்கள்(பொது சுகாதாரம்) மற்றும் (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"6.12.07 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.52, நாள்: 6.12.07–ன்படி இச்சில்லரை செலவீனம் ரூபாய் 5000/– மூன்று மாத காலத்திற்கு வழங்கப்படவும், பின் இக்காலத்தில் செய்யப்படும் செலவு கணக்குகள் சரிவர கணக்கு பராமரிப்பின் எதிர்காலத்தில் தொடரவும் ஆய்வின் போது அவ்வாறு இல்லை எனில் மூன்று மாத காலத்துடன் நிறுத்தவும் நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.203/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ப.து.ந.க.எண்/4152/ (1) / 2000**
**ஆணையர் அவர்களின் 17.12.2007 நாளிட்ட குறிப்பு**

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.655/2007 பொருள் எண்.32

**தொழில் நுட்ப அனுமதி வழங்குவதற்கான,தொழில் நுட்ப அலுவலர்களின் நிதி வரம்பு உயர்த்துதல்**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.1) துறை, அரசானை (நிலை) எண்.138 நாள் 07.06.1999,அரசானையில் சென்னை மாநகராட்சி பொறியார்களுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கத் தேவையான அதிகார வரம்புகளை கீழ்கண்டவாறு நிர்னையித்து வெளியிடப்பட்டுள்ளது.

| அதிகார வரம்புகள் | தொழில் நுட்ப அனுமதி வழங்க அதிகார வரம்பு |
|---|---|
| தலைமை பொறியாளர் | ரூ.25.00 லட்சம் மற்றும் அதற்கு மேல் |
| காண்காணிப்பு பொறியாளர் | ரூ.25.00 லட்சம் வரை |
| செயற்பொறியாளர் | ரூ.5.00 லட்சம் வரை |
| உதவி செயர் பொறியாளர் | ரூ.2.00 லட்சம் வரை |

இப்பொருள் குறித்து கீழ்கண்ட விவரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அரசு துறை பணிகளில் தாமதம் தவிர்க்கவும், தேவையில்லாத கோப்பு போக்குவரத்தினை தவிர்க்கவும், துறைகளின் திறன் மேம்படுத்துவதற்காகவும் ஒவ்வொரு காலக்கட்டங்களிலும், பொதுப் பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளில் தொழில்நுட்ப அனுமதி வழங்கும் அதிகார வரம்பினை உயர்த்தி அரசு ஆணை வழங்கி வருகிறது. அவ்வாறாக, தற்போது பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை துறைகளில் பொறியாளர்களுக்கான, தொழில்நுட்ப அனுமதிக்கான அதிகார வரம்பு கீழ்கண்டவாறு பொது பணித் துறை (அரசு ஆணை எண் எம்.எஸ்.140 தேதி 23.3.2000), மற்றும் நெடுஞ்சாலை துறை ( அரசு ஆணை எண் எம்.எஸ்.80 தேதி 28.03.2007) முறையே அரசு ஆணைகளில் வெளியிடப்பட்டு நடைமுறையில் உள்ளது.

| வரிசை எண். | அதிகார வரம்புகள் | பொது பணித் துறை (அரச ஆணை எண் எம்.எஸ்.140 தேதி 23.3.2000) | | நெடுஞ்சாலை துறை ( அரசு ஆணை எண் எம்.எஸ்.80 தேதி 28.03.2007) | |
|---|---|---|---|---|---|
| | | தொழில் நுட்ப அனுமதி | ஒப்ப அனுமதி | தொழில் நுட்ப அனுமதி | ஒப்ப அனுமதி |
| 1 | செயற்பொறியாளர்/ கோட்டப் பொறியாளர் | ரூ.30.00 லட்சம் | ரூ.10.00 லட்சம் | ரூ.50.00 லட்சம் | ரூ.15.00 லட்சம் வரை (அதிக பட்சம் 3 % கூடுதல்) |
| 2 | கண்காணிப்புப் பொறியாளர் | ரூ. 1 கோடி | ரூ.30.00 லட்சம் | ரூ. 2.00 கோடி | ரூ.15.00 லட்சம் வரை (அதிக பட்சம் 6 % கூடுதல்)<br>ரூ.1.00 கோடி வரை (அதிக பட்சம் 3 % கூடுதல்) |
| 3 | தலைமைப் பொறியாளர் | முழு அதிகாரம் | ரூ.1.00 கோடி | முழு அதிகாரம் | ரூ.1.00 கோடி வரை (அதிக பட்சம் 6 % கூடுதல்)<br>ரூ.2.00 கோடி வரை (அதிக பட்சம் 3 % கூடுதல்) |
| 4 | பொறியாளர்கள் குழு | | | | ரூ.50.00 லட்சம் வரை (6 சதவீகத்திற்கு மேல்) |
| 5 | ஒப்பக்குழு ஆணையம் | | | | 3 % மேல் கூடுதல் அல்லது 6 % மேல் கூடுதல் இனம் 3 மற்றும் 4 கில் குறிப்பிடப்படாதது<br>ரூ.2.00 கோடிக்கும் மேல் (எல்லையற்ற ஒப்ப கூடுதல் ) |

தற்போது சென்னை மாநகராட்சியில் பெரும் எண்ணிக்கையில் திட்ட மதிப்பீடுகள் மற்றும் பெரிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாலும், துறைகளின் திறன் மேம்படுத்தவதற்காகவும், தேவையில்லாமல் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கவும், சென்னை மாநகராட்சி பொறியாளர்களுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்குவதற்கான அதிகார வரம்பினை உயர்த்தி அமைக்கலாம் என்று கருதப்படுகிறது.

<u>ப.து.ந.க.எண்/4152/ (1) / 2000</u>

இப்பொருள் குறித்து 11.12.2007 அன்று நடைபெற்ற ஒப்ப பரீசீலனை குழுவில் பரீசீலிக்கப்பட்டது. இந்த குழு சென்னை மாநகராட்சி பொறியாளர்களுக்கு, தொழில் நுட்ப அனுமதி வழங்குவதற்கான அதிகார வரம்பினை உயர்த்தி வழங்க முடிவு செய்து, பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை துறைகளில் உள்ளது போல் கீழ்கண்டவாறு மாற்றியமைக்கலாம் என பரிந்துறை செய்துள்ளது.

| வரிசை எண். | அதிகார வரம்புகள் | தொழில் நுட்ப அனுமதி அதிகார வரம்பு | |
|---|---|---|---|
| | | அரச ஆணை எண்.138 தேதி.7.6.1999 யின் படி தற்போது நடைமுறையில் உள்ளது | உத்தேசிக்கப்பட்டுள்ளது |
| 1 | செயற்பொறியாளர் (மண்டலம்/துறை) கோட்ட மின் பொறியாளர் | ரூ.5.00 லட்சம் வரை | ரூ.30.00 லட்சம் வரை |
| 3 | கண்காணிப்பு பொறியாளர் / நகர பொறியாளர் | ரூ.25.00 லட்சம் வரை | 1 கோடி வரை |
| 3 | தலைமை பொறியாளர் (பொது) தலைமை பொறியாளர் (கட்டம் மற்றும் பாளங்கள்) | ரூ.25.00 லட்சம் மேல் | முழு அதிகாரம் |

எனவே மேற்கண்ட அட்டவனையில் குறிப்பட்டபடி சென்னை மாநகராட்சி பொறியாளர்களுக்கு தொழில்நுட்ப அனுமதி அதிகார வரம்புகள் வழங்குவதற்கு அரசிற்கு கடிதம் எழுதுவதற்காக நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.306/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ப.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**இ.பொ.து.ந.க.எண்.ம.லாரி நி / 030 / 2003–06**
**ஆணையாளரின் 21–11–2007 நாளிட்ட குறிப்பு**

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.656/2007 பொருள் எண்.33

**பயனற்ற வாகனங்கள் – கழிவு செய்தல்**

சென்னை மாநகராட்சி, இயந்திரப் பொறியியல் துறையில் 1995ம் ஆண்டு ஆட்டோ ட்ரெக்ஸ் ட்ரெய்லருடன் ஒன்று ரூ.99,715/– வீதம் கொள்முதல் செய்து பயன்படுத்தப்பட்ட 47 எண்ணிக்கை (ஒரு ட்ரெய்லர் நீங்கலாக) பயனற்றது என கழிவு செய்து இரும்பு எடை கணக்கில் மதிப்பீடு செய்து ஒரே தொகுப்பாக விற்பனை செய்யும் பொருட்டு மதிப்பு நிர்ணயம் செய்ய தலைமை பொறியாளர் (பொது) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தொழில்நுட்பக்குழு 27–9–2006 அன்று நேரடி ஆய்வு செய்து மொத்த மதிப்பாக ரூ.1,76,250/– நிர்ணயித்து கழிவு செய்து உள்ளது உள்ளபடி நிலையில் ஒரே தொகுப்பாக விற்பனை செய்ய பரிந்துரை செய்துள்ளது.

எனவே,

1. மத்திய லாரி நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ள டி என் 04 சி 9737, 9686, 6704, 6371, 6425, 9857, 6373, 9858, 9851, 9859, 6703, 9855, 9683, 6429, 9863, 9871, 6375, 9849, 9848, 9706, 6438, 9685, 6423, 6450, 6445, 9806, 6387, 9715, 6672, 9679, டி என் 04 டி 1510, 1336, 1507, 1466, 1502, (ட்ரெய்லர் இல்லை),1338, 1482, 1489, 1387, 1318, 1327, 1493, 1496, 1317, 1313, 1503, 1498 பெட்ரோலினால் இயக்கக்கூடிய ஒற்றை சிலிண்டருடைய 47 ஆட்டோ ட்ரெக்ஸ் ட்ரெய்லர்கள் (ஒரு ட்ரெய்லர் நீங்கலாக) அடிக்கடி பழுது அடைவதாலும் பழுதுபார்ப்பதற்கான உதிரிபாகங்கள் வழக்கற்று கிடைக்கப்பெறாமலும் எரிபொருள் மற்றும் ஆட்கள் செலவுக்கு அதிகப்படியான நிதி இழப்பு ஏற்படுவதாலும் சீர்செய்து பராமரிக்க பொருளாதார ரீதியில் உகந்தவை அல்ல என்பதாலும் பயனற்றவை என கழிவு செய்யவும்,

2. 47 ஆட்டோ ட்ரெக்ஸ் ட்ரெய்லர்கள் உபயோகமற்றது என கழிவு செய்து விற்பனை செய்யும் பொருட்டு மதிப்பு நிர்ணயம் செய்ய தலைமை பொறியாளர் (பொது) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தொழில்நுட்பக்குழு 27–9–2006 அன்று நேரடி ஆய்வு செய்து ஒரு வாகனத்திற்கு எடை 250 கிலோ (தோராய எடையாக) கணக்கில் கொண்டு ஒரு கிலோ இரும்பு எடை ரூ.15.00 (தோராய மதிப்பு) வீதம் 47 எண்ணிக்கைக்கு (ஒரு ட்ரெய்லர் நீங்கலாக) நிர்ணயித்த மொத்த மதிப்பு ரூ.1,76,250/–க்கு ஏற்ப அனைத்தையும் ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி நிலையில் ஒப்பம் – ஏலம் முறையில் விற்பனை செய்யவும்,

3. மேற்கூறிய 47 ஆட்டோ ட்ரெக்ஸ் ட்ரெய்லர்கள் (ஒரு ட்ரெய்லர் நீங்கலாக) புதுப்பித்து மீண்டும் சாலையில் ஓட்டும் அளவிற்கு தகுதியற்ற நிலையில் தகடுகளான இதன் பாகங்கள் அனைத்தும் துருப்பிடித்து பழுதடைந்து தன்மை இழந்து காணப்படுவதால் வாகனமாக மதிப்பாய்வு செய்து தீர்வு செய்ய இயலாத நிலையில் உள்ளதால் ஒவ்வொரு வாகனத்தையும் இரும்பு எடை கணக்கில் மதிப்பீடு செய்யப்பட்டதின்படி பதிவு சான்றிதழ் புத்தகம் இல்லாமல் அனைத்து வாகனங்களையும் ஒரு தொகுப்பாக விற்பனை தீர்வு செய்யப்பட்டவுடன் அரசின் பின்னேற்பு ஆணை பெறவும்,

மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.263/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**இ.பொ.து.ந.க.எண்.ம.லாரி நி / 042 / 2007**
**ஆணையாளரின் 20–11–2007 நாளிட்ட குறிப்பு**

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.657/2007 பொருள் எண்.34

**பயனற்ற கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் – கழிவு செய்தல்**

சென்னை மாநகராட்சியில் துப்புரவு மற்றும் ஆய்வு பணிகளுக்காக பயன்படுத்தப்பட்ட 10 கனரக மற்றும் 8 இலகுரக வாகனங்கள் பயனற்றது என கழிவு செய்து விற்பனை செய்யும் பொருட்டு மதிப்பு நிர்ணயம் செய்ய துணை ஆணையாளர் (பணிகள்) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தொழில்நுட்பக்குழு 28–8–2007 அன்று நேரடி ஆய்வு செய்து ஒவ்வொரு வாகனத்திற்கும் கீழ்கண்டவாறு மதிப்பு நிர்ணயித்து கழிவு செய்து விற்பனை செய்ய பரிந்துரை செய்துள்ளது.

| வ.எண். | வாகன பதிவு எண். | | வகை | தொழில்நுட்பக் குழு நிர்ணயித்த மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|
| 1. | 2. | | 3. | 4. |
| | கனரக வாகனங்கள் | | | |
| 1. | டி.எஸ்.சி. | 255 | லேலண்ட் | 71,800/– |
| 2. | டி.எஸ்.சி. | 256 | லேலண்ட் | 56,300/– |
| 3. | டி.எஸ்.சி. | 267 | லேலண்ட் | 56,300/– |
| 4. | டி.எஸ்.சி. | 290 | லேலண்ட் | 66,300/– |
| 5. | டி.எஸ்.சி. | 291 | லேலண்ட் | 67,700/– |
| 6. | டி.எஸ்.சி. | 292 | லேலண்ட் | 71,800/– |
| 7. | டி.எஸ்.சி. | 293 | லேலண்ட் | 72,300/– |
| 8. | டி.எஸ்.சி. | 294 | லேலண்ட் | 67,800/– |
| 9. | டி.எஸ்.சி. | 312 | லேலண்ட் | 43,800/– |
| 10. | டி. என். 04 | 9827 | லேலண்ட் | 65,800/– |
| | இலகுரக வாகனங்கள் | | | |
| 11. | டி. என். 04 | 9008 | மாருதி வேன் | 16,600/– |
| 12. | டி. என். 04 | 9023 | மாருதி வேன் | 17,400/– |
| 13. | டி. என். 04 | 9024 | மாருதி வேன் | 20,400/– |
| 14. | டி. என். 04 | 9192 | மாருதி வேன் | 24,000/– |
| 15. | டி. என். 04 எ | 9492 | மாருதி வேன் | 25,500/– |
| 16. | டி. என். 04 எ | 9494 | மாருதி வேன் | 17,300/– |
| 17. | டி. என். 04 எ | 9519 | மாருதி வேன் | 17,400/– |
| 18. | டி. என். 04 சி | 4693 | மகேந்திரா ஜீப் | 31,900/– |

எனவே,

1. டி. எஸ். சி. 255, 256, 267, 290, 291, 292, 293, 294, 312 டி. என். 04 9827 (லேலண்ட்) போன்ற 10 கனரக வாகனங்கள் மற்றும் டி. என். 04 9008, 9023, 9024, 9192, டி. என். 04 எ 9492, 9494, 9519 (மாருதி வேன்) டி. என். 04 சி 4693 (மகேந்திரா ஜீப்) போன்ற 8 இலகுரக வாகனங்கள் அனைத்தும் 10 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு சுமார் 2.5 இலட்சம் கிலோ மீட்டர் தூரம் ஓடியவையும் மேலும் சீர்செய்து பராமரிக்க பொருளாதார ரீதியில் உகந்தவையல்ல என்பதாலும் பயனற்றவை என கழிவு செய்யவும்.
2. மேற்கண்ட 18 எண்ணிக்கை கனரக மற்றும் இலகுரக வாகனங்களுக்கு தொழில்நுட்பக்குழு நிர்ணயித்த மொத்த மதிப்பு ரூ. 8,10,400/–க்கு குறையாமல் உள்ளது உள்ளபடி நிலையில் மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஏலம் கோரியும் விற்பனை தீர்வு செய்வதற்கு முன் நிதிஆதாரங்கள் அளிக்கப்பட்டுள்ள அமைப்பின் (appropriate authority) அனுமதி பெற்றபின் நடவடிக்கை எடுக்கவும்

**இ.பொ.து.ந.க.எண்.ம.லாரி நி / 042 / 2007**

மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.264/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.658/2007 பொருள் எண்.35

**பயனற்ற வாகனங்கள் — கழிவு செய்தல்**

சென்னை மாநகராட்சி, இயந்திரப் பொறியியல் துறையில் 1995ம் ஆண்டு ஆட்டோ ட்ரெக்ஸ் ட்ரெய்லருடன் ஒன்று ரூ.99,715/— வீதம் கொள்முதல் செய்து பயன்படுத்தப்பட்ட 78 எண்ணிக்கை பயனற்றது என கழிவு செய்து இரும்பு எடை கணக்கில் மதிப்பீடு செய்து ஒரே தொகுப்பாக விற்பனை செய்யும் பொருட்டு மதிப்பு நிர்ணயம் செய்ய தலைமை பொறியாளர் (பொது) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தொழில்நுட்பக்குழு 7—12—2007 அன்று நேரடி ஆய்வு செய்து மொத்த மதிப்பாக ரூ.2,34,000/— நிர்ணயித்து கழிவு செய்து உள்ளது உள்ளபடி நிலையில் ஒரே தொகுப்பாக விற்பனை செய்ய பரிந்துரை செய்துள்ளது.

எனவே,

1. மத்திய லாரி நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ள டிஎன்04 சி 6384, 9847, 9728, 9742, 6378, 9697, 9864, 9868, 9852, 9866, 9845, 6382, 6385, 9846, 6706, 6709, 6707, 9861, 6374, 9850, 6376, 9856, 6702, 6380, 6342, 6439, 6383, 9860, 6432, 9690, 9865, 9867, 6424, 9713, 9712, 6436, 9714, 6431, 9681, 9705, 9870, 9704, 6430, 6427, 6442, 9692, 6447, 6434, 9751, 9854, டிஎன்04 டீ 1324, 1488, 1501, 1506, 1326, 1504, 1491, 1505, 1468, 1494, 1469, 1483, 1497, 1480, 1485, 1320, 1325, 1340, 1385, 1341, 1331, 1328, 1330, 1311, 1316, 1387, 1339, 1335 பெட்ரோலினால் இயக்கக்கூடிய ஒற்றை சிலிண்டருடைய 78 ஆட்டோ ட்ரெக்ஸ் ட்ரெய்லர்கள் அடிக்கடி பழுது அடைவதாலும் பழுதுபார்ப்பதற்கான உதிரிபாகங்கள் வழக்கற்று கிடைக்கப் பெறாமலும் எரிபொருள் மற்றும் ஆட்கள் செலவுக்கு அதிகப்படியான நிதி இழப்பு ஏற்படுவதாலும் சீர்செய்து மறு பயன்பாட்டுக்கு கொண்டுவர முடியாத நிலையில் இருப்பதாலும் பயனற்றவை என கழிவு செய்யவும்,

2. 78 ஆட்டோ ட்ரெக்ஸ் ட்ரெய்லர்கள் உபயோகமற்றது என கழிவு செய்து விற்பனை செய்யும் பொருட்டு மதிப்பு நிர்ணயம் செய்ய தலைமை பொறியாளர் (பொது) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தொழில்நுட்பக்குழு 7—12—2007 அன்று நேரடி ஆய்வு செய்து ஒரு வாகனத்திற்கு அதிகபட்ச எடை 200 கிலோ கணக்கில் கொண்டு ஒரு கிலோ இரும்பு எடை ரூ.15.00 (தோராய மதிப்பு) வீதம் 78 எண்ணிக்கைக்கு நிர்ணயித்த மொத்த மதிப்பு ரூ.2,34,000/—க்கு குறையாமல் ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி நிலையில் ஒப்பம் — ஏலம் கோரியும் விற்பனை தீர்வு செய்வதற்கு முன் நிதி ஆதாரங்கள் அளிக்கப்பட்டுள்ள அமைப்பின் (appropriate authority) அனுமதி பெற்றபின் நடவடிக்கை எடுக்கவும்,

மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.292/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/5442/2007**
**ஆணையர் அவர்களின்   26.11.2007 நாளிட்ட குறிப்பு**

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**
தீர்மான எண்.659/2007 பொருள் எண்.36

**புதியதாக 22 எண்ணிக்கையில் 20 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட பெரிய டிப்பர் வகை சார்ந்த கனரக வாகனங்கள் வாங்குதல் , மற்றும் புதியதாக 4 எண்ணிக்கையில் ஹைட்ராலிக் எக்ஸ்கேவேட்டர் எக்யூப்மெண்ட் வாகனங்கள் வாங்குதல், அரசின் நிர்வாக அனுமதி வேண்டுவது.**

சென்னை மாநகராட்சி, இயந்திரப் பொறியியல் துறையின் கீழ் இயங்கும் குப்பை சேகரிக்கும் நிலையங்களில் இருந்து குப்பை கொட்டும் வளாகங்களுக்கு குப்பைகளை எடுத்துச் செல்லும் கனரக டிப்பர் வாகனங்கள் 10 வருடங்களுக்கு மேலாகவும் மற்றும் 2,50,000 கிலோ மீட்டர் தூரம் ஓடியும் பழுதடைந்த 22 கனரக வாகனங்களை புதிய வாகனங்கள் கொள்முதல் செய்வதற்கு ஏற்ப படிப்படியாக பழைய வாகனங்களை கழிவு செய்யவும், அதன்படி, ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் புதியதாக 20 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட பெரிய டிப்பர் வகை சார்ந்த கனரக வாகனங்கள் (Haulage Trucks) 22 எண்ணிக்கைகளில் கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், குப்பை சேகரிக்கும் நிலையங்களில் குப்பைகளை அள்ளி தற்போது உபயோகப்படுத்தப்பட்டு வரும் Front End Loader வாகனங்கள் மிக பழமையானதால், புதியதாக 4 எண்ணிக்கையில் Hydraulic excavator equipment fitted with grappler attachment வாகனங்கள் கொள்முதல் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. குப்பை சேகரிக்கும் நிலையங்களிலிருந்து குப்பை எடுத்து செல்லும் கனரக வாகனங்கள் 10 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு மிகவும் பழுதடைந்த கழிவு செய்ய நிலையில் உள்ள 22 கனரக வாகனங்களை படிப்படியாக கழிவு செய்து மாற்றாக, ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ், 20 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட 22 எண்ணிக்கைகள் புதியதாக Haulage Trucks கனரக வாகனங்கள்ரூ.374.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யவும்,
2. குப்பை சேகரிக்கும் நிலையங்களில், குப்பைகளை Truck வாகனங்களில் கொட்டுவதற்கு 4 எண்ணிக்கையில் புதியதாக ரூ.220.00 இலட்சம் செலவில் Hydraulic excavator equipment fitted with grappler attachment வாகனங்கள் கொள்முதல் செய்யவும்,
3. மேற்படி கொள்முதல் செய்யப்படவுள்ளதற்கான மொத்த செலவினத் தொகையான ரூ.594.00 இலட்சத்தை சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் ஒதுக்கப்பட்ட ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்ட (JNNURM) நிதியில் இருந்து வழங்கவும்,
4. இது குறித்து அரசு நிர்வாக அனுமதி வேண்டி மற்றும் ஒப்பம் கோரி கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டி அரசுக்கு கடிதம் அனுப்பவும்,

மேற்கண்ட 1 முதல் 4 இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.265/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.220/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**இ.பொ.து.தெ.செ.ப.ம.ந.க.எண்.டி3/2714/2007.**
**ஆணையர் அவர்களது 18.12.2007 நாளிட்ட குறிப்பு.**

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.660/2007 பொருள் எண்.37

**தெரு விளக்குகள் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிக்கு நான்கு புதிய உறட்ராலிக் லேடர் வாகனங்கள் வாங்குதல்**

சென்னை மாநகராட்சி, மின் துறை மூலமாக தெரு விளக்குகள் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பணியில் 24 எண்ணிக்கையிலான கனரக மற்றும் இலகுரக உறட்ராலிக் லேடர் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாகனங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு, வரும் வாகனங்களில் தற்போது 10 லேடர் வாகனங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே, இவ்வாகனங்களை அரசு ஆணை. எம்.எஸ்.எண்.960 உள்துறை நாள் – 12.4.1979ன்படி ஒரு வாகனம் 10 ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்பட்டு வந்தாலும் அல்லது 2.5 இலட்சம் கிலோ மீட்டர் தூரம் உபயோகப்படுத்தப்பட்டாலும் அவ்வாகனங்கள் கழிவு செய்யலாம் என ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, இவ்வாகனங்களை கழிவு செய்து 2007–2008ம் நிதியாண்டில் மின்துறைக்கு ஒதுக்கப்பட்ட மூலதன திட்டப் பணியில் 10 புதிய எலக்ட்ரிக்கல் லேடர் வாகனங்கள் வாங்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி முதற்கட்டமாக கழிவு செய்யும் நிலையில்லுள்ள லேடர் வாகன எண்கள் TMT 8631. TMH 7924. TN-04 D – 7923. TN-04 C 1081 கழிவு செய்து, நான்கு புதிய உறட்ராலிக் லேடர் வாகனங்கள் வாங்க முடிவு செய்யப்பட்டு அதன்படி, 9.8 மீட்டர் உயர் தூக்கும் தளவாடங்கள் பொருத்தப்பட்ட லேடர் உபகரணங்கள் (பூம்டைப்) பொருத்தமான இலகுரக வாகன சேசீசில் பொருத்தி வழங்க ஒப்பங்கள் கோரப்பட்டு, ஒப்ப அறிவிப்புகள் தினகரன் தமிழ் நாளிதழில் – மற்றும் டெக்கான் கிரானிக்ல் ஆங்கில நாளிதழில் முறையாக 11.10.2007 , 26.10.2007 மற்றும் 2.10.2007 அன்று வெளியிடப்பட்டு 14.12.2007 அன்று திறக்கப்பட்டது.

இதில் இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டது. இவ்வொப்பந்தத்தில் திருவாளர். ராகுல் அன்டு கம்பெனி நிறுவனம் சிறு தொழில் நிறுவன சான்றிதழ் அளித்து ஒப்பத் தொகை விலக்களிக்க கேட்டுக் கொண்டு, நான்கு வாகனங்களுக்கு மொத்த தொகையாக ரூ.49,99,889/– என ஒப்ப விலைப்புள்ளி அளித்துள்ளார்கள். மற்றொரு நிறுவனமான திருவாளர்கள். வைஷ்ணவி மோட்டர்ஸ் நிறுவனம் ஒப்ப வைப்பு தொகையாக வங்கி உத்தரவாதம் அளித்து, நான்கு வாகனங்களுக்கு மொத்த தொகையாக ரூ.43,76,788/– என ஒப்ப விலைப்புள்ளி அளித்து கலந்து கொண்டனர். அவற்றின் விவரங்கள் கீழ்கண்டவாறு அளிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | விவரம் | ராகுல் அன்டு கம்பெனி | | வைஷ்ணவி மோட்டார்ஸ் நிறுவனம் | |
|---|---|---|---|---|---|
| | | ஒரு எண்ணிக்கை | நான்கு எண்ணிக்கை | ஒரு எண்ணிக்கை | நான்கு எண்ணிக்கை |
| 1 | கேபின் கட்டுமானத்துடன் கூடிய சேசிஸ்(DGS & D) விலையில் வரிகள் உட்பட மற்றும் தற்காலிக வாகன பதிவு காப்பீடு போக்குவரத்து செலவு உட்பட.) | 6,39,000/– | 25,56,600/– | 6,79,197/– | 27,16,788/– |
| 2. | உயர் தூக்கும் தளவாடங்கள் பொருத்தப்பட்ட லேடர் உபகரணங்கள் (பூம்டைப்) | 5,29,805/– | 21,19,920/– | 3,80,000/– | 15,20,000/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | நிரந்தர வாகன பதிவு மற்றும் காப்பீடு மற்றும் தகுதி சான்று உட்பட விற்பனை வரி(VAT) | 60,000/– | 2,40,000/–<br><br>84,769/– | 35,000/– | 1,40,000/–<br><br>(வரிகள் உட்பட) |
| | மொத்தம் | | 49,99,989/– | 10,94,197/– | 43,76,788/– |

திருவாளர்.வைஷ்ணவி மோட்டார் நிறுவனம் ஒப்பந்தத்தில் குறைந்த விலைப்புள்ளி அளித்ததை ஏற்று விலைக் குறைப்பு செய்யும்பொருட்டு இத்துறையின் கடிதம் மூலமாக 14.12.2007 அன்று அளிக்கப்பட்டது. அந்நிறுவனம் தனது 17.12.2007 நாளிட்ட கடிதத்தில் விலைக்குறைப்பு குறித்து கடிதம் அளித்துள்ளது. அதில் வாகனத்தின் எய்ச்சர் சேசிஸ் அரசு DGS & D விலையினை அளித்துள்ளபடியாலும், மேலும் லேடர் உறட்ராலிக் உபகரணங்களின் விலை மிகவும் குறைவாகத்தான் ஒப்பத்தில் கோரியுள்ளோம் என்றும், குறைந்த விலைப்புள்ளி உள்ள நிலையில் மேலும் விலைக்குறைக்க இயலாத நிலையில் உள்ளோம் என தெரிவித்துக் கொண்டுள்ளார்கள். இதுக்குறித்து தெரிவிப்பது யாதெனில், இதற்கு முன்னர் 2005–2006ம் ஆண்டு மாநகராட்சி கொள்முதல் செய்து வழங்கிய டாடா சேசிஸ்ஸில் ஒரு உறட்ராலிக் லேடர் எக்யூமெண்ட் (பூம்டைப்) பொருத்தி வழங்குவதற்கு திருவாளர்.ராகுல் அன்டு கம்பெனிக்கு வழங்கிய தொகை (வாகன பதிவு, காப்பீட்டு செலவு, வரிகள் உட்பட) ரூ.3,92,304/– ஆகும்.

தற்போது, வைஷ்ணவி மோட்டார்ஸ் நிறுவனம் ஹைறட்ராலிக் லேடர் எக்யுமென்ட் எய்ச்சர் சேசிஸ்ஸில் பொருத்தி வழங்குதற்கு (வாகன பதிவு, காப்பீட்டு செலவு, வரிகள் உட்பட) கோரியுள்ள தொகை ரூ.4,15,000/– இத்தொகை நியமானததால் ஏற்றுக் கொள்ள கூடியதாக இருப்பதால், திருவாளர் வைஸ்ணவி மோட்டார்ஸ் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று 4 எலக்ட்ரிகல் லேடர் வாங்கும் மொத்த தொகையான ரூ.43,76,788/–க்கு கொள்முதல் செய்ய பரிந்துரை செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது. மேலும்,திருவாளர் வைஸ்ணவி மோட்டார்ஸ் நிறுவனம் சேசஸ் விலை அரசு டி.ஜி.எஸ்.அன்டு டி விலையாக குறிப்பிட்டு மேலும் அதற்கு விற்பனைவரி, தற்காலிக வாகன பதிவு, தற்காலிக காப்பீட்டு செலவு மற்றும் போக்குவரத்து செலவு சேர்த்து முன்பணமாக ஒரு வாகனத்திற்கு ரூ.6,79,197/– வீதம் 4 வாகனங்களுக்கு மொத்த தொகையாக ரூ.27,16,788/–ஐ வழங்க கேட்டுக் கொண்டுள்ளது. இதனை ஏற்று அரசு டி.ஜி.எஸ்.அன்ட்.டி விலையில் ஆணையர் அவர்களின் பதவி பெயரில் கொள்முதல் செய்ய பரிந்துரை செய்யப்படுகிறது.

இம்மொத்த செலவீனமான ரூ. 43,76,788/–/–ஐ மின்துறையின் 2007–08ம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட மூலதன நிதியிலிருந்து செலவு செய்யவும்,

எனவே,

1. சென்னை மாநகராட்சி, மின் துறை மூலமாக தெரு விளக்குகள் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிக்காக புதியதாக நான்கு எண்ணிக்கையில் 9.8 மீட்டர் உயர் தூக்கும் தளவாடங்கள் பொருத்தப்பட்ட லேடர் உபகரணங்கள் (பூம்டைப்) பொருத்தமானஒப்பத்தில் குறிப்பிட்டுள்ள எய்ச்சர் சேசிசிஸ் பிஎஸ் –III 3760 எம்.எம்.(Wheel Base) பொருத்தி வழங்க குறைந்த விலைப்புள்ளியாக ரூ.43,76,788/–ஐ அளித்த நிறுவனமான திருவாளர்கள். வைஷ்ணவி மோட்டார்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்பளித்து கொள்முதல் ஆணை வழங்கவும்,

2. முதல் இனம் ஏற்கப்படின், திருவாளர்கள். வைஷ்ணவி மோட்டர்ஸ் நிறுவனத்திடமிருந்து ஒப்ப மொத்த தொகையில் 2 சதவீதம் பாதுகாப்பு தொகையாக வங்கி உத்திரவாதம் மாநகராட்சிக்கு அளிக்கக் கேட்டுக்கொள்ளவும்,

3. திருவாளர் வைஷ்ணவி மோட்டார்ஸ் நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளபடி எய்ச்சர் சேசிசிஸ் பிஎஸ் III 3760 எம்.எம்.(Wheel Base) அரசு DGS & T விலையிலும் மற்றும் தற்காலிக வாகன பதிவு, தற்காலிக காப்பீட்டு செலவு, போக்குவரத்து செலவு உட்படஒரு வாகன சேசிசிஸ் விலை 6,79,197–வீதம் நான்கு சேசிசிஸின் மொத்த விலையாக ரூ.27,16,788/–க்கான பொருள் விவரபட்டி பெற்று முன் பணமாக வழங்கவும்,

4. பணி முடிக்கப் பெற்று உபகரணங்கள் சென்னை மாநகராட்சியில் பெறப்பட்டு தக்க சான்றிதழ்கள் பெறப்பட்டவுடன் உபகரணங்கள் நன்றாக வேலை செய்வதை பொறுத்து 30 நாட்களுக்குப்பின் மீதி தொகையினை ரூ.16,60,000/–ஐ வழங்கவும்,

5. இம் மொத்த செலவினத்தை 2007–2008ம் ஆண்டிற்காக மின்துறைக்கு ஒதுக்கப்பட்ட மூலதன நிதியிலிருந்து வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 5 இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.309/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.223/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: இ.பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பே.சா.து.ந.க.எண்.பி1/1102/2007
ஆணையர் அவர்களின் 18 –12–07 நாளிட்ட குறிப்பு

29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.661/2007 பொருள் எண்.38

நகரும் மின் ஏணியுடன் கூடிய நடைபாதை மேம்பாலங்கள் ஒப்ப ஏற்பு

சென்னை நகரில், பாதசாரிகள் பாதுகாப்பாக சாலையைக் கடப்பதற்கும், பாதசாரிகளின் குறுக்கீடு இல்லாமல் வாகனங்கள் செல்வதற்கும் உகந்த வகையில், சோதனை முறையில், கீழ்காணும் நான்கு முக்கிய இடங்களில் வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல், பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் நகரும் மின் ஏணியுடன் கூடிய நடைபாதை மேம்பாலங்கள் அமைக்க, அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரப்பட்டன.

1) அண்ணா சாலையில் பனகல் மாளிகை அருகில்
2) அண்ணா சாலையில், சைதாப்பேட்டை தாடண்டர் நகர் அருகில்
3) அண்ணா சாலையில் எஸ்.ஐ.இ.டி. (S.I.E.T.) கல்லூரி அருகில்
4) தாலூாக்கா அலுவலகம் சாலையில், சின்னமலை

ஒப்ப இறுதி நாளான 24.08.07 அன்று மேற்கூறிய வரிசை எண்.1–லிருந்து 3 வரையுள்ள இடங்களுக்கு கீழ்காணும் மூன்று ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பங்கள் பெறப்பட்டன.

1) திருவாளர்கள். லக்ஷியா மீடியா பிரைவேட் லிமிடெட்
2) திருவாளர்கள். வாண்டேஜ் அட்வர்டைசிங் பிரைவேட் லிமிடெட்
3) திருவாளர்கள். செல்வெல் பப்ளிசிட்டி (ம) கன்சல்டண்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட்,

வரிசை எண்–4ல் குறிப்பிடப்பட்டுள்ள இடத்திற்கு கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பங்கள் பெறப்பட்டன.

1) திருவாளர்கள். லக்ஷியா மீடியா பிரைவேட் லிமிடெட்
2) திருவாளர்கள். செல்வெல் பப்ளிசிட்டி (ம) கன்சல்டண்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட்,

ஒப்ப மேலாண்மை செய்ய நியமிக்கப்பட கலந்தறிபவர்களான திருவாளர்கள். கம்யூனிடி கன்சல்டிங் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் மேற்குரிய ஒப்பந்ததாரர்களின் முன்தகுதி ஒப்பங்கள் ஆய்வு மேற்கொண்டு மதிப்பாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தக்குழு பரிசீலனை செய்து, இவர்களின் தொழில்நுட்ப மற்றும் Financial ஒப்பங்களை திறக்க பரிந்துரை செய்தது.

அதன்படி மூன்று ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஒப்பங்கள் முதலில் திறக்கப்பட்டு, மதிப்பாய்வு செய்ததில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தாரர்கள் மட்டுமே தொழில்நுட்ப ஒப்பந்தத்தில் தேர்வு பெற்றனர்.

1) திருவாளர்கள் லக்ஷியா மீடியா பிரைவேட் லிமிடெட்
2) திருவாளர்கள் வாண்டேஜ் அட்வர்டைசிங் பிரைவேட் லிமிடெட்

எனவே இந்த இரு ஒப்பந்ததாரர்களின் நிதி ஒப்பம் (Financial Bid) மட்டுமே திறக்கப்பட்டு பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| | | சலுகை காலம் (மாதங்களில்) | |
|---|---|---|---|
| வ.எண். | பணியிடம் | திருவாளர்கள் வாண்டேஜ் அட்வர்டைசிங் பிரைவேட் லிமிடெட் | திருவாளர்கள் லக்ஷியா மீடியா பிரைவேட் லிமிடெட் |

| | | | |
|---|---|---|---|
| 1 | அண்ணாசாலையில் பனகல் மாளிகை அருகில் | 175 | 118 |
| 2 | அண்ணாசாலையில் சைதாப்பேட்டை தாடண்டர் நகர் அருகில் | 186 | 118 |
| 3 | அண்ணாசாலையில் எஸ்.ஐ. இ.டி. கல்லூரி அருகில் (S.I.E.T.) | 184 | 94 |
| 4 | தாலுக்கா ஆபிஸ் சாலையில் சின்னமலை | – | 118 |

எனவே, ஒப்ப விதிகளின்படி மேற்கண்ட பணிகள் வடிவமைத்து, கட்டி, இயக்கி, பின் குறைந்த சலுகை காலத்தில் (Concession period) ஒப்படைப்பதாக திருவாளர்கள் லக்ஷயா மீடியா பிரைவேட் லிமிடெட் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த ஒப்பப்புள்ளி அளித்தவர் ஆகிறார்.

எனவே,

1) குறைந்த மாதங்களை சலுகை காலமாக அளித்த திருவாளர்கள். லக்ஷயா மீடியா பிரைவேட் லிமிடெட் என்ற ஒப்பந்ததாரருக்கு மேற்கூறிய நான்கு இடங்களிலும் நகரும் மின் ஏணியுடன் கூடிய நடைபாதை மேம்பாலம் வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் அமைக்க ஒப்புதலும்
2) இப்பணியினை சென்னை மாநகராட்சி வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் மேற்கொள்ள அரசின் அனுமதி கோரவும் ,

நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதியின்) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.310/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.219/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பே.சா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பே.சா.து.ந.க.எண்.பி3/3638/2007**
**ஆணையரின் 17.12.2007 நாளிட்ட குறிப்பு**

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.662/2007 பொருள் எண்.39

**சாலை விரிவாக்கப் பணிக்கு தனியார் நிலங்களை கையகப்படுத்துதல்**

வார்டு எண்.72, மண்டலம் –5இல் அமைந்துள்ள டாக்டர் குருசாமி பாலம், மற்றும் ஈ.வெ.ரா. சாலை சந்திக்கும் இடத்தில் சாலை குறுகலாக இருப்பதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வாகனங்கள் பெருமளவில் பாலம் முழுவதும் வரிசையில் நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

இந்நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, டாக்டர் குருசாமி பாலமும் ஈ.வெ.ரா. சாலையும் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ள தனியாருக்கு சொந்தமான நிலத்தை கையகப்படுத்தி சாலை விரிவாக்கப் பணிக்கு உபயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்விரிவாக்க பணி டாக்டர் குருசாமி பாலத்தின் வழியாக வரும் வாகனங்கள் அண்ணாநகர் நோக்கி செல்வதற்கு இடதுபுறம் திரும்ப ஏதுவாக அமைவதின் மூலம், பாலத்தின் மீது வாகன நெரிசல் வெகுவாக குறையும்.

இத்திட்டத்தின் மூலம் சுமார் 42.50 மீ. நீளமும், 2.50 மீ. அகலமும் சுமார் 106.25 ச.மீ. விஸ்தீரணமுள்ள நிலம் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டு அந்நிலத்தினை மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் விலை மற்றும் ஈட்டுத்தொகையினை செலுத்தி தனியாரிடமிருந்து நிலமெடுப்பு செய்திடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.294/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.213/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பே.சா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பே.சா.து.ந.க.எண்.பி3/3612/2007
ஆணையரின் 17.12.2007 நாளிட்ட குறிப்பு

29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.663/2007 பொருள் எண்.40

சாலை விரிவாக்கப்பணிக்கு தனியார் நிலங்களை கையகப்படுத்துதல்

வார்டு எண்.78, மண்டலம்–5இல் அமைந்துள்ள ஸ்டெர்லிங் சாலை, நெல்சன் மாணிக்கம் சாலையும், கல்லூரி சாலையையும் இணைக்கும் முக்கியமான இணைப்பு சாலையாகும். அரும்பாக்கம் அண்ணாநகர் ஆகிய இடங்களில் இருந்து வாகனங்கள் மகாத்மா காந்தி சாலையை அடைவதற்கு இந்த சாலையை தான் பெருமளவில் உபயோகிக்கின்றன. இச்சாலை குறுகலாக இருப்பதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வாகனங்கள் பெருமளவில் வரிசையில் நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

இந்நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, ஸ்டெர்லிங் சாலையை, ஸ்டெர்லிங் 1–வது சந்து முதல் ஸ்டெர்லிங் அவென்யு வரை தனியாருக்கு சொந்தமான நிலத்தை கையகப்படுத்தி சாலை விரிவாக்கப் பணிக்கு உபயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்விரிவாக்க பணி ஸ்டெர்லிங் சாலை வழியாக வரும் வாகனங்கள் நெரிசல் இன்றி செல்ல ஏதுவாக அமையும்.

இத்திட்டத்தின் மூலம் தெற்குபக்கம் சுமார் 220 மீ நீளமும், 2.00 மீ அகலமும் வடக்கு பக்கம் சுமார் 90 மீ நீளமும் 2.0மீ அகலமும் ஆகமொத்தம் சுமார் 620 ச.மீ. விஸ்தீரணமுள்ள நிலம் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டு அந்நிலத்தினை மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் விலை மற்றும் ஈட்டுத்தொகையினை செலுத்தி தனியாரிடமிருந்து நிலமெடுப்பு செய்திடுவதற்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.295/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.214/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பே.சா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.664/2007 பொருள் எண்.41

**சாலை விரிவாக்கப்பணிக்கு தனியார் நிலங்களை கையகப்படுத்துதல்**

வார்டு எண்.108, மண்டலம்–7இல் அமைந்துள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். சாலை, வள்ளுவர்கோட்டம் சந்திப்பையும், மகாத்மா காந்தி சாலையையும் இணைக்கும் முக்கியமான இணைப்பு சாலையாகும். கோடம்பாக்கம் பகுதியிலிருந்து வரும் வாகனங்கள் மகாத்மா காந்தி சாலையை அடைவதற்கு இந்த சாலையை தான் பெருமளவில் உபயோகிக்கின்றன. இச்சாலை குறுகலாக இருப்பதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வாகனங்கள் பெருமளவில் வரிசையில் நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

இந்நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, வித்யோதயா பிரதான சாலையிலிருந்து சுமார் 140மீ நீளம் வரை தனியாருக்கு சொந்தமான நிலத்தை கையகப்படுத்தி சாலை விரிவாக்கப் பணிக்கு உபயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்து. இவ்விரிவாக்க பணி டாக்டர் எம்.ஜி.ஆர். சாலை வழியாக வரும் வாகனங்கள் நெரிசல் இன்றி செல்ல ஏதுவாக அமையும்.

இத்திட்டத்தின் மூலம் சுமார் 140 மீ நீளமும், 2.50 மீ அகலமும் ஆகமொத்தம் சுமார் 763 ச.மீ. விஸ்தீரணமுள்ள நிலம் சாலையின் இரு பக்கத்திலும் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டு அந்நிலத்தினை மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் விலை மற்றும் ஈட்டுத்தொகையினை செலுத்தி தனியாரிடமிருந்து நிலமெடுப்பு செய்திடுவதற்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.299/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’

‘‘20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.218/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பே.சா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.665/2007 பொருள் எண்.42

**நிலம் கையகப்படுத்துதல்**

சென்னை மாநகராட்சி மண்டலம்–9 , வார்டு எண்.134, சைதாப்பேட்டை ஜோன்ஸ் ரோடு, சென்னை மாநகராட்சி பள்ளியின் விரிவாக்க வசதிக்காகவும், விளையாட்டுத் திடல் வசதிக்காகவும் தேவைப்படும் தனியார் நிலங்களை(கோடம்பாக்கம் கிராமம், நகர நில அளவை எண்.62/8, பிளாக் 93, 32 மனை) கையகப்படுத்தித்தர சென்னை மாவட்ட ஆட்சியரைக் கோரிட, சென்னை மாநகராட்சி மன்ற தீர்மானம் எண்.1424/75, நாள்.29.12.1975ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மானத்தைத் தொடாந்து, சென்னை மாநகராட்சி பள்ளியின் விரிவாக்க வசதிக்காகவும், விளையாட்டுத் திடல் வசதிக்காகவும் தேவைப்படும் 32 மனை பரப்பளவு கொண்ட தனியாருக்கு சொந்தமான நிலங்களை (கோடம்பாக்கம் கிராமம், நகர நில அளவை எண்.62/8, பிளாக் 93) தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டம் 1894ன் கீழ் கையகப்படுத்தித் தர சென்னை மாவட்ட ஆட்சியரைக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியின் கோரிக்கையின் மீது உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு சென்னை மாவட்ட ஆட்சியரால் தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டம் 1894ன் கீழ் 4(1) மேற்படி 32 மனை பரப்பளவு கொண்ட தனியார் நிலத்தினை கையகப்படுத்தப்படவுள்ள அறிவிப்பு அரசாணை எண்.809, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத் துறை, நாள்.17.05.1979ன்படி வெளியிடப்பட்டது.

பிறகு, கையகப்படுத்தப்படவேண்டிய மொத்த நிலமான 32 மனை பரப்பளவு நிலத்தில்,16 மனை 1555 ச.அ. பரப்பளவு நிலத்தினை தமிழ்நாடு நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கலாம் என அரசால் முடிவெடுக்கப்பட்டதைத் தொடாந்து, தமிழ்நாடு நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் 16 மனை 1555 ச.அ. பரப்பளவு நிலத்தினை தமிழ்நாடு நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் கையகப்படுத்த சென்னை மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மீதமுள்ள 15 மனை 1674 ச.அ. பரப்பளவு நிலத்தினை தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழ் கையகப்படுத்திட, நில ஈட்டுத் தொகையாக மனை ஒன்றுக்கு ரூ.5000/– வீதம் செலுத்திட சென்னை மாவட்ட ஆட்சியரால் கோரப்பட்டதைத் தொடர்ந்து, கீழ்க்கண்டவாறு நில ஈட்டுத் தொகை நில எடுப்பு அலுவலருக்கு செலுத்தப்பட்டுள்ளது.

| வரிசை எண். | நாள். | தொகை |
|---|---|---|
| 1 | 03.11.1982 | ரூ.75,000.00 பை |
| 2 | 22.04.1983 | ரூ.15,260.65 பை |
| 3 | 18.5.1989 | ரூ.40,028.60 பை |
| | மொத்தம் | ரூ.1,30,289.25 பை |

நில எடுப்பிற்கு எதிராக நில உரிமையாளர்களால் தொடரப்பட்ட வழக்கினை எதிர்கொண்டுவரும் நிலையில், தமிழ்நாடு நில உச்சவரம்பு சட்டம் அரசால் திரும்பப் பெறப்பட்டுகொண்டுவிட்டதால், இச்சட்டத்தின் கீழ் கையகப்படுத்த திட்டமிடப்பட்டிருந்த 16 மனை மற்றும் 1555 ச.அ. பரப்பளவு கொண்ட நிலம் கையகப்படுத்தப்படவில்லை.

நில எடுப்பிற்கு எதிராக நில உரிமையாளர்களால் பல்வேறு நீதிமன்றங்களில் பல்வேறு நிலைகளில் வழக்கு தொடரப்பட்டிருந்த காரணத்தினால், தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழ் கையகப்படுத்த திட்டமிடப்பட்டிருந்த 15 மனை 1674 ச.அ. பரப்பளவு கொண்ட நிலமும் இதுகாறும் கையகப்படுத்தப்படவில்லை. இந்நிகழ்வில் உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பினை மறு ஆய்வு செய்யக் கோரி, மாவட்ட ஆட்சியரால் தொடரப்பட்ட மறு ஆய்வு மனு உச்சநீதி மன்றத்தால் 3.10.07 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. .தற்போது புதிதாக நில ஆர்ஜிதம் செய்ய, நடவடிக்கை எடுக்க, மாமன்றத்தின் அனுமதி பெற, 9ம் மண்டல வார்டு குழுவின் பரிந்துரை தீர்மான எண்.216 மூலம் பெறப்பட்டது.

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/12138/76**

சென்னை மாநராட்சி, மண்டலம்-9, வார்டு எண்.134, சைதாப்பேட்டை, ஜோன்ஸ் ரோடு, சென்னை மாநகராட்சி பள்ளியின் விரிவாக்க வசதிக்ககாகவும், விளையாட்டுத் திடல் வசதிக்காகவும் மேற்குறிப்பிட்ட 32 மனை பரப்பளவு கொண்ட தனியார் நிலங்கள் (கோடம்பாக்கம் கிராமம், நகர நில அளவை எண்.62 பாகம், பிளாக் 93, ) அவசியம் தேவைப்படுவதால், மேற்படி திட்டத்திற்கு தேவைப்படும் தனியார்நிலங்களை, தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டம் 1894ன் கீழ் புதியதாக நடவடிக்கை எடுத்து விரைவில் கையகப்படுத்தித்தர சென்னை மாவட்ட ஆட்சியரைக் கோரிடவும் மன்றத்தின்அனுமதி வேண்டி நிலைக்குழுக்கள் (கல்வி) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"07.12.07 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.107, நாள்:07.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.197/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ-18. மன்றச் செயலாளர்

நி.ம.உ.து.ந.க.எண்.எஸ்சி2/2364/07

ஆணையரின் 24.11. 2007 நாளிட்ட குறிப்பு

29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.666/2007 பொருள் எண்.43

நிலமாற்றம்

10.06.07 நாளிட்ட மன்ற உறுப்பினர் வார்டு எண்.69 அவர்களின் கடிதத்தில் தாண்டவராய சத்திரம் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத் திட்டப்பகுதியிலுள்ள சமூக நலக்கூடம் மற்றும் பழுதடைந்த அங்காடி போன்றவைகளை சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க உதவுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

26.6.07 நாளிட்ட தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் கடிதத்தில் மேற்கண்ட சமூக நலக்கூடம் மற்றும் அங்காடி போன்றவைகளை அபிவிருத்தி செய்ய இந்நிலங்கள் வாரியத்தின் பெயருக்கு நிலஉரிமம் மாற்றம் செய்யப்படாத காரணத்தினால், இவைகளை அபிவிருத்தி செய்ய இயலவில்லை என்பதால் இவைகளை மன்ற உறுப்பினர் கோருவது போல் சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க பரிசீலனை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சமூக நலக்கூடம் மற்றும் அங்காடி போன்றவைகளை சென்னை மாநகராட்சி பராமரிப்புக்கு எடுத்துக் கொள்வது குறித்தும், இந்நிலங்களை சென்னை மாநகராட்சியின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்திடுமாறு மாவட்ட ஆட்சியரிடம் கேட்டுக் கொள்வது குறித்தும் மன்றத்தின் அனுமதியினை பெறுவதற்காக நிலம் மற்றும் உடைமைத்துறை மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு 5வது மண்டல வார்டு குழு தனது தீர்மானம் எண்.15 நாள்: 15.10.2007ல் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, தாண்டவராய சத்திரம் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திட்டப்பகுதியிலுள்ள சமூக நலக்கூடம் மற்றும் பழதடைந்த அங்காடி போன்றவைகளை சென்னை மாநகராட்சிக்கு இலவசமாக ஒப்படைக்குமாறு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தினை கேட்டுக் கொள்வது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வவிமநி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

''20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.198/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>நி.ம.உ.து.ந.க.எண்.எஸ்சி2/ 1995/2007</u>
<u>ஆணையரின் 13.11.2007 நாளிட்ட குறிப்பு</u>

<u>29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண்.667/2007 பொருள் எண்.44

<u>நிலமாற்றம்</u>

மண்டலம்–1, வார்டு எண்.3ல் கருணாநிதி நகர் 3வது தெருவில் கதவு எண்.60 மற்றும் 61ல் காலியாக உள்ள நிலத்தில் பொது மக்கள் நலன் கருதி அந்த இடத்தினை கையகப்படுத்தி அங்கு சமூகநலக்கூடம் கட்டித் தருமாறு திருமதி.ப.ஜெயந்தி, மன்ற உறுப்பினர் வார்டு எண்.3 அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்ற உறுப்பினர் வார்டு எண்.3 அவர்கள் தெரிவித்துள்ள தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு சொந்தமான நிலத்தினை சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்வதற்காக மன்றத்தின் அனுமதியினை பெறுவதற்கு 1வது மண்டல வார்டு குழு தனது தீர்மானம் எண்.113/2007, நாள்.19.07.2007ல் பரிந்துரை செய்துள்ளது.

மேற்கண்ட இடம் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு சொந்தமானது எனவும், இவ்விடத்தில் சமுகநலக்கூடம் கட்ட வேண்டுமெனில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடமிருந்து முன்நுழைவு அனுமதியும் மற்றும் அவ்விடத்தினை சென்னை மாநகராட்சிக்கு மாற்றியமைக்கப்பட்ட பின்னரே உரிய நடவடிக்கை எடுக்க இயலுமென மண்டல அலுவலர்–1, அவர்களின் 06.08.2007 நாளிட்ட குறிப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–1, வார்டு எண்.3ல் கருணாநிதி நகர் 3வது தெருவில் கதவு எண்.60 மற்றும் 61ல் உள்ள நிலத்தினை சமூக நலக்கூடம் கட்டுவதற்காக சென்னை மாநகராட்சிக்கு இலவசமாக ஒப்படைப்பு செய்யுமாறும், அவசர அவசியம் கருதி சென்னை மாநகராட்சி இந்நிலத்தில் முன்நுழைவு செய்திட அனுமதி வழங்குமாறும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடம் கேட்டுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(வவிமநி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.199/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## 29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.668/2007 பொருள் எண்.45

**சமுதாய நலக்கூடம் பொது நிகழ்ச்சிகளுக்கு வாடகைக்கு விட வாடகை நிர்ணயம் செய்வது**

மண்டலம்–7, வார்டு–100, அஷ்டபுஜம் சாலை, சூளை, சென்னை–112ல் உள்ள புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடம் வரி மதிப்பீட்டாளரால் அளிக்கப்பட்ட அளவின் அடிப்படையில் கீழ் குறிப்பிட்டுள்ள செயல்முறை கோட்பாட்டின் (Formula) மூலம் வாடகை நிர்ணயிக்கப்படுகிறது.

மன்றத் தீர்மானம் எண்.1553/2000, நாள்.24.08.2000ன்படி ஓர் ஆண்டுக்கான சராசரி விழாக்கள் 40 என்று கணக்கீடு செய்து வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்பதால் கீழே குறிப்பிட்டுள்ளபடி வாடகை நிர்ணயம் செய்ய பரிந்துரைக்கப்படுகிறது.

$$\text{வாடகை} = \frac{\text{பரப்பளவு} \times \text{வீதம்} \times 12\ \text{மாதம்}}{\text{வருட விழாவின் சராசரி எண்ணிக்கை}}$$

சமுதாய நலக்கூடத்தின் பரப்பளவு

முதல் தளம் 700 சதுர அடி

மொத்தம் 700 சதுர அடி

வீதம் = ரூ.3.00

வருட விழாக்களின் சராசரி எண்ணிக்கை = 40

$$\text{ஒரு நாள் வாடகை} = \frac{700 \times 3.00 \times 12}{40} = 630/–$$

முழு கட்டணமாக நேர் செய்யப்பட்டது = ரூ.630/–

| | | |
|---|---|---|
| 1. | 24 மணி நேரத்திற்கு பல்நோக்கு கட்டிடத்தின் வாடகை கட்டணம் | ரூ.630/– |
| 2. | சேவை வரி (Service Tax) (12.24 சதவீதம்) | ரூ.77/– |
| 3. | 8 மணி நேரத்திற்கு பல்நோக்கு கட்டிடத்தின் வாடகை கட்டணம் | ரூ.315/– |
| 4. | சேவை வரி (Service Tax) (12.24 சதவீதம்) | ரூ.39/– |

பொது மக்களின் நலன்கருதி, கோட்டம்–100ல் உள்ள சமுதாய நலக்கூடம் வாடகைக்கு விடப்பட நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.200/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு மண்டலம்–7ன் வார்டுகுழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதனை நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.7

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

நி.ம.உ.து.ந.க.எண்.எஸ்சி1/5349/2000
ஆணையாளரின் 07.12.2007 நாளிட்ட குறிப்பு

29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.669/2007 பொருள் எண்.46

கோடம்பாக்கம் மேம்பாலம் கீழ் உள்ள Bay குத்தகை சீரமைப்பு

12.3.2007 நாளிட்ட உயர்நீதி மன்றத் தீர்ப்பில் (W.P.No. 8753 to 8761/2006 & W.M.P.No.11905 to 11913/2002) கோடம்பாக்கம் பாலம் கீழ் மேற்கு பகுதியில் உள்ள Bay ஒதுக்கீடுதாரர்களுக்கு உயர்த்தப்பட்ட வாடகை தொடர்பாக மனுக்கள் பெற்று ஒரு வாய்ப்பினை அளித்து எட்டு வாரங்களுக்குள் முடிவெடுக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் மனுக்கள் பெறப்பட்டதை தொடர்ந்து 18.6.2007 அன்று மேற்குறிப்பிட்ட Bay ஒதுக்கீடுதாரர்களை நேர்முக விசாரணைக்கு வருமாறு தெரிவிக்கப்பட்டது. விளக்கம் தர ஆவணங்கள் கொண்டு வராததால் 25.6.2007 அன்று மீண்டும் விசாரணைக்கு ஆஜராக ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டது. 25.6.2007 அன்று 5 குத்தகைதாரர்கள் மட்டுமே ஆஜராகி உத்தரவு வழங்கும் நாளிலிருந்து உயர்த்தப்பட்ட வாடகை ரூ.2640/– செலுத்துவதாக தெரிவித்தனர். 25.6.2007 அன்று விசாரணைக்கு வராதவர்களையும் சேர்த்து, வழக்கு தொடர்ந்த அனைத்து குத்தகைதாரர்களும் 22.8.2007 அன்று விசாரணைக்கு வரக்கோரி பதிவு தபால் மூலம் கடிதம் அனுப்பப்பட்டது. 23.8.2007 நாளிட்ட கடிதத்தில் திரு. டி. புருஷோத்தமன், திரு. ஆர்.. வாசுதேவன் ஆகியோர் மேற்படி கடிதம் வந்து சேரவில்லை என்று தெரிவித்து, எந்த தேதியில் வர அழைத்தாலும் விசாரணைக்கு ஆஜராக தயாராக உள்ளதாக தெரிவித்தனர் (22.8.2007 அன்றைய விசாரணைக்கு கடிதம் பதிவு தபால் மூலம் அனுப்பியிருந்ததில், திருமதி டி. லலிதா மற்றும் திரு எ. சீனிவாசன், ஆகியோருக்கான கடிதங்கள் "No such Person" என்று திரும்பி வந்துள்ளது. பின்னர் மீதி 7 பேருக்கான கடிதங்களும் சார்வு செய்யப்படாமல், தபால் துறையால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.)

அதன் பின்னர் 22.10.2007 அன்று காலை 11.00 மணிக்கு மேற்படி 9 ஒதுக்கீடுதாரர்களை ஆணையரின் முன்பாக நேர்முக விசாரணைக்கு ஆஜராக கோரி கடிதம் அனுப்பியதில் கீழ்கண்ட நபர்கள் கலந்துக்கொண்டனர்

| வ.எண். | ஒதுக்கீடுதாரர்களின் பெயர் | பே.நெ |
|---|---|---|
| 1 | திரு. எ. அமானுல்லா | பே.நெ.1 இவருக்கு பதிலாக திரு அம்ஜித் இப்ராஹும் என்பவர் கலந்துக் கொண்டார் |
| 2 | திரு. ஆர் வாசுதேவன் | பே.நெ.2 |
| 3 | திரு டி. புருஷோத்தமன் | பே.நெ.3 |
| 4 | திரு. எ. சீனிவாசன் | பே.நெ.7 |
| 5 | திரு ஆர். கோவிந்தன் | பே.நெ.10 |
| 6 | திரு. வி. நடராஜன் | பே.நெ.12 |
| 7 | திரு கே. அழகிரிசாமி | பே.நெ.13 |
| 8 | திருமதி டி. லலிதா | பே.நெ.5 வரவில்லை |
| 9 | திரு. பி. சிகாமணி | பே.நெ.8 வரவில்லை |

விசாரணையின் போது மேற்குறிப்பிட்ட 7 நபர்கள் ஒரே மாதிரியாக அளித்த வாக்கு மூலம் பின்வருமாறு:

" கோடம்பாக்கம் மேம்பாலம் (மேற்கு பகுதி) அடியில் பாலத்தின் இரண்டு தூண்களுக்கு இடையில் காலி இடத்தை மண் தரையோடு கடை 1968ல் பொது ஏலத்தில் எடுத்து வியாபாரம் செய்து வருகிறேன். இன்றைய தேதி வரையில் வாடகை நிலுவை இல்லாமல் செலுத்தி வருகிறேன். சென்னை உயர்நீதிமன்ற ஆணையின்படி தங்களிடம் முறையிட்டதின் பேரில் தாங்கள் 18.6.2007 அன்று அழைத்தீர்கள். அன்று நான் வந்திருந்தேன். என்னிடம் உள்ள மூல ஆதாரங்களோடு வரக்கேட்டுக்கொண்டீர்கள். மீண்டும் அழைக்கும் கடிதம் எனக்கு கிடைக்கவில்லை. எப்பொழுதும் போல நான் இந்த விவரம் குறித்து விசாரிக்க 23.8.2007 அன்று வரும்போது தான் 22.8.2007ல் தேதியிட்ட தங்களின் அழைப்பு கடிதம் பற்றி தெரிவித்தீர்கள். இது குறித்து கடிதம் கொடுத்து செல்லுமாறு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தெரிவித்ததின் பேரில் கடிதம் கொடுத்தேன். மீண்டும் 22.10.2007 அன்று அழைத்தீர்கள் நான் ஆஜராகிறேன். என்னுடைய கோரிக்கையை கடிதம் எழுதி தர தாங்கள் கேட்டுக்கொண்டதால் கீழ் கண்ட என் கோரிக்கையை தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது ரூ.2640/–யை மாத வாடகையை தாங்கள் முடிவு செய்து உத்தரவு வழங்கப்படுகின்ற நாளிலிருந்து வழங்க ஒப்புக்கொள்கிறேன்."

மேற்குறிப்பிட்ட 7 நபர்களில் எவரும் அவர்களுடைய வாக்குமூலத்தில் ஏற்கனவே உள்ள நிலுவைத் தொகை குறித்து ஏதும் தெரிவிக்கவில்லை. **மனுதாரர்கள் சமர்ப்பித்த வாக்கு மூலத்தில் வாடகையாக ஏற்றுக் கொள்ளும் தொகை ரூ.2640/– என்பது மன்றத் தீர்மான எண்.432/2000 நாள் 30.7.2000ன்படி 1.4.2000 முதல் 31.3.2003 வரையிலான காலத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட**

**தொகை ஆகும்.** அதன் பின்னர் 23.12.2004 நாளிட்ட 500/2004 எண்ணிட்ட மன்றத் தீர்மானத்தில் 1.4.2003 முதல் 31.3.2006 வரை ரூ.3036/– எனவும், 31.8.2006 நாளிட்ட 312/2006 எண்ணிட்ட மன்றத் தீர்மானத்தில் 1.4.2006 முதல் 3 ஆண்டு காலத்திற்கு ரூ.3492/– (15% உயர்வு) எனவும் குத்தகை வாடகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டால், மாநகராட்சிக்கு பெரும் நிதி இழப்பு ஏற்படும். மேலும் தணிக்கைத் தடைகள் எழும் வாய்ப்புகள் உள்ளது.

விசாரணை நாளான 22.10.2007 அன்று கடிதம் மூலம் அழைக்கப்பட்டவர்களை தவிர திரு ஆர். குமார் பே.நெ.10ல் 1வது கடை, திரு பி. வீரன் குமார் பே.நெ.10ல் 6வது கடை மற்றும் திரு ஆர். கண்ணபிரான் பே.நெ.10ல் 7வது கடை ஆகிய மூவரும் தன்னிச்சையாக வந்திருந்தனர். இவர்கள் தனியாக விசாரிக்கப்பட்டனர். இம்மூவரும் அளித்த மனுவில்

மேற்படி விலாசத்தில் 35 ஆண்டுகளுக்கு மேலாக பே.நெ.10ல் பத்து கடைகள் உள்ளன என்றும், இந்த கடைக்கான வாடகையை குத்தகைத்தாரர் திரு கோவிந்தனிடம் செலுத்தி வந்ததாகவும், திரு. கோவிந்தன் என்பவர் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பே.நெ.10யை திரு கே. கே. ஸ்ரீதர் என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்து விட்டார் என்றும் இது சம்பந்தமாக பல முறை புகார் செய்துள்ளதாகவும், இவ்விரு நபர்கள் மீதும் கிரிமினல் வழக்கு தொடருமாறும், இங்குள்ள பத்துக்கடைகளுக்கான வாடகையை நேரடியாக செலுத்த தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

12.3.2007 நாளிட்ட உயர்நீதி மன்ற தீர்ப்பில் W.P.NO. 8753 to 8761/2006 & W.M.P.No.11905 to 11913/2002 வழக்கு தொடர்ந்த 9 மனுதாரர்களுக்கு கோடம்பாக்கம் பாலம் கீழ் உள்ள Bay ஒதுக்கீடுதாரர்களுக்கு உயர்த்தப்பட்ட வாடகை தொடர்பாக மனுக்கள் பெற்று ஒரு வாய்ப்பினை அளித்து எட்டு வாரங்களுக்குள் முடிவெடுக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இது குறித்து கீழ்குறிப்பிட்டுள்ள இனங்கள் குறித்து நிலைக்குழு வரிவிதிப்பு மற்றும் நிதி மற்றும் மன்றம் விவாதித்து, உரிய முடிவுகள் எடுக்குமாறு வேண்டப்படுகிறது.

(அ) 22.10.2007 அன்று விசாரணையின் போது மனுதாரர்கள் அளித்த வாக்குமூலத்தில் தற்போது மாத வாடகையை ரூ.2640/– ஆக முடிவு செய்து உத்தரவு வழங்கப்படுகின்ற நாளிலிருந்து ரூ.2640/– மாத வாடகை செலுத்துவதற்கு உத்தரவு கோரியுள்ளது குறித்தும், ஆனால் 1.4.2003 முதல் 31.3.2006 வரை ரூ.3036/– எனவும், 1.4.2006 முடிய ரூ.3492/– எனவும் மாமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 1968ம் ஆண்டில் குத்தகைக்கு விடப்பட்ட கோடம்பாக்கம் மேம்பாலம் (கிழக்குப்பகுதி–8) (மேற்கு பகுதி–13) கீழ் உள்ள Bay க்கள் மீதான குத்தகை மன்றத் தீர்மானம் எண்.2891/30.6.93ன் படி ரத்து செய்யப்பட்டு, உரிய செயல்முறை ஆணை வழங்கப்பட்டது. ஆனால் எவரும் நிலத்தை திரும்ப ஒப்படைக்காததால், தற்போது மேற்படி Bay க்களில் உள்ள அனைவரும் ஆக்கிரமிப்பு செய்தவர்களாக கருதப்பட்டு, மன்றத் தீர்மானங்களின்படி நிர்ணயிக்கப்பட்ட குத்தகைத் தொகையை மேற்படி நிலத்தை முறையான அனுமதியின்றி பயன்படுத்தி கொண்டதற்காக இழப்பீட்டுத்தொகை (Damages fees for Use and Occupation) பெறுதல் மற்றும் நிலத்தை மீள சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்வதற்கு தக்க நடவடிக்கை எடுத்திடலாமா என்பது குறித்தும்,

(இ) கோடம்பாக்கம் மேம்பாலம் கீழ் பகுதியில் குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தை குத்தகைதாரர்களும், ஆக்கிரமிப்பு செய்தவர்களும், தற்போது தனித்தனி சிறு கடைகளாக மேல் வாடகைக்கு விட்டு வருவாய் ஈட்டி வருவதை தடுத்து சென்னை மாநகராட்சிக்கு வரவேண்டிய வருவாயை முழுமையாக பெறுவதற்கு அனைத்து பகுதியினையும் சென்னை மாநகராட்சியே எடுத்துக்கொண்டு வணிக வளாக கடைகளாக மாற்றி சந்தைவிலை அடிப்படையில் மாதாந்திர வாடகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுத்திடலாமா என்பது குறித்தும் மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.201/2007 நாள்.20.12.2007ன்படி மாநகராட்சிக்கு வருவாய் இழப்பின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>நிமஉது நக எண்.எல்இ6/2641/2007</u>
<u>ஆணையரின் 18.12.2007 நாளிட்ட குறிப்பு</u>

<u>29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண்.670/2007 பொருள் எண்.47

<u>தபால் துறைக்கு வணிக வளாகம் ஒதுக்கீடு செய்வது</u>

சென்னை மாநகராட்சி வணிகவளாகம், மண்டலம்–3, கோட்டம்–45, டிமல்லஸ் ரோடு வணிகவளாகத்தில் கடை எண்.5, முதல் மாடி, 836 சதுர அடி காலியாக உள்ளது.

இக்கடையினை தபால் அலுவலகத்திற்கு மாத வாடகைக்கு ஒதுக்கீடு அளிக்குமாறு தபால் துறை கேட்டுக்கொண்டுள்ளது.

இது குறித்து சமர்ப்பிப்பது யாதெனில், இதற்கு முன்னால் மண்டலம்–5ல், 71, ஈ.வெ.ரா.பெரியார் சாலையில் உள்ள வணிகவளாகத்தில் 1875 சதுரஅடி உள்ள கடையை தபால் துறைக்கு 1 சதுர அடிக்கு ரூ.10/– வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு 20.10.2003 அன்று நடந்த மாமன்றக் கூட்டத்தில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.அதன் அடிப்படையில் தற்போது சென்னை மாநகரத்தில் சந்தை விலை கூடுதலாக இருப்பதால், அனைத்து மண்டல அலுவலர்களையும், தற்கால சந்தை விலை நிர்ணயம் செய்யக் கேட்டுக்கொள்ளப்பட்டது. மண்டல அலுவலர்–3, வருவாய்த்துறை தன்னுடைய கடை எண்.8132/2007, நாள்.24.10..2007–ல் டிமெல்லஸ் ரோட்டில் உள்ள வணிக வளாகத்திற்கு ஒரு சதுர அடிக்கு ரூ.7/– நிர்ணயம் செய்யலாம் என அறிக்கை அனுப்பியுள்ளார்.

எனினும், ஏற்கனவே தபால் துறைக்கு ஈ.வெ.ரா.பெரியார் சாலையில் உள்ள கடைக்கு சதுர அடிக்கு ரூ.10/– என 2003–ல் மாமன்றம் நிர்ணயம் செய்துள்ளதால், தற்போது டிமெல்லஸ் சாலையில் உள்ள வணிக வளாகத்திற்கும் ஒரு சதுர அடிக்கு ரூ.12/– என நிர்ணயம் செய்யவும், 836 சதுர அடி உள்ள இக்கடையை தபால் துறைக்கு வாடகைக்கு ஒதுக்கீடு செய்யவும் , நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி மூலமாக) மன்றத்தின் அனுமதிவேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.241, நாள்: 20.12.2007–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.671/2007 பொருள் எண்.48

**மண்டலம் 2ல் நவீன குப்பை மாற்று நிலையம் கட்டும் பணி**

கோட்டம்–31ல் பேசின் பால சாலையில் உள்ள மண்டலம் 2ல் அலுவலக கட்டடங்கள், மின்வேலைகள், பக்கவாட்டு வடிகால்கள், தரைகள், குடிநீர் வசதி மற்றும் கழிவு நீர் வடிகால் வசதிகள், ஆகியவைகளை உள்ளடக்கிய நவீன குப்பை மாற்று நிலையம் கட்டும் பணிக்காக ரூ.1,72,75,000/–க்கு 2007–2008 ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தீர்மானம் எண்.378/2007, நாள் 30.07.2007ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

இப்பணிக்காக பணி மதிப்பீட்டுத்தொகையான ரூ.1,46,63,400/–ல் எடை மேடை தொகை ரூ.31,17,600/– போக மீதி உள்ள தொகை ரூ.1,15,45,800/–க்கு 3 முறை ஒப்பந்தப்புள்ளிகள் அழைக்கப்பட்டன. நான்காவது முறையாக இப்பணிக்காக 07.12.2007 என்று நாள் குறித்து ஒப்பந்தப்புள்ளிகள் அழைக்கப்பட்டன. குறித்த நாளான 7.12.2007 அன்று ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டது. அதன் விவரங்கள் கீழ்வருமாறு:–

| வ.எ | ஒப்பந்தத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு ரூபாய் (எடை மேடை நீங்கலாக) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை ரூபாய் | 2007–2008ம் ஆண்டு விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு. எம். ஆர். உதயா | 1,15,45,800 | 1,67,41,410 | (+) 45% |

திரு எம். ஆர். உதயா அவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தியதில் அவர் தனது 13.12.2007 நாளிட்ட கடிதத்தில் அவர் கோரியுள்ள விலைவிகிதத்தை (+) 40% என்று குறைத்து கொள்ள சம்மதித்துள்ளார். அதன்படி அவர் கோரியுள்ள ஒப்பந்த தொகை ரூ.ரூ.1,61,64,120/– ஆகும்.

ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட பிறகு நாளிதழ்களில் வெளியான சந்தை விலைவிகிதங்களின் படி இந்தப்பணிக்கான பொருட்கள் மற்றும் பணியாளர்களின் கூலி ஆகியவைகள் கணிக்கப்பட்டதில் இப்பணியின் மதிப்பு ரூ.1,46,57,980/– ஆகிறது. இத்தொகை அலுவலக மதிப்பீட்டை விட 27.07 % கூடுதலாகும். மற்றும் அலுவலக மதிப்பீட்டினைவிட ரூ.31,12,180/– அதிகம் ஆகும். சந்தை மதிப்பீட்டைவிட (+)12.93% அதிகம் ஆகும்.

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எம். ஆர். உதயா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை பரிசீலனை செய்ய தொழில்நுட்பக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

தொழில்நுட்பக்குழு, 13.12.2007 அன்று தங்களது பரிந்துரையில் இந்த திட்டம் ஜவஹர்லால் நேரு தேசீய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் வருவதாலும், இப்பணி தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளதாலும் மற்றும் தற்போதைய சந்தை விலையை கருத்தில் கொண்டும் (+) 40% க்கு இந்த ஒப்பந்தப்புள்ளியினை பரிந்துரைத்துள்ளனர்.

மேற்சொன்ன தொழில் நுட்பக்குழுவின் பரிந்துரையுடன், ஒப்பந்தப்புள்ளி குழுவின் முன் இந்த பொருட்பாடு சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளிக்குழுவும் தங்களது, 14.12.2007 அன்று இந்த ஒப்பந்தப்புள்ளிக்கு பரிந்துரை வழங்கியது.

<u>தி.க.மே.து.ந.க.எண்.எ7/1941/2007</u>

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு. எம். ஆர். உதயா அவர்களுடன் நடத்திய இறுதி பேச்சு வார்த்தைக்குப் பிறகு அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு (+) 40%க்கு இவ்வலுவலக 2007–2008–ம் ஆண்டு திட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமாக இவ்வொப்பந்தத்தை திரு. எம். ஆர். உதயா அவர்களுக்கு ரூ.1,61,64,120/–க்கு (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தியொறு இலட்சத்து அறுபத்தி நான்காயிரத்து நூற்று இருபது மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.284/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.230/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**திக.மே.து.ந.க.எண்.எ7/2005/2007**
**ஆணையரின் 14.12.2007 நாளிட்ட குறிப்பு**

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.672/2007 பொருள் எண்.49

**மண்டலம் 3ன் குப்பை மாற்று நிலைய வளாகத்தில் மண்டலம் 5க்கு நவீன குப்பை மாற்று நிலையம் கட்டும் பணி**

கோட்டம்–45ல் பேசின் யானைக்கவுனி சாலையில் உள்ள மண்டலம் 3ன் குப்பை மாற்று வளாகத்தில் அலுவலக கட்டடங்கள், மின்வேலைகள், பக்கவாட்டு வடிகால்கள், தரைகள், குடிநீர் வசதி மற்றும் கழிவு நீர் வடிகால் வசதிகள், ஆகியவைகளை உள்ளடக்கிய நவீன குப்பை மாற்று நிலையத்தை மண்டலம் 5க்காக கட்டும் பணிக்காக மன்றத்தீர்மானம் எண்.380/2007, நாள் 30.07.2007ல் 2007–2008ஆண்டு அலுவலக விலை விகிதத்தை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட ரூ.2,84,50,000/–க்கான மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இப்பணிக்காக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.2,41,80,400/–ல் எடை மேடையின் மதிப்பீடு ரூ.31,17,600/– போக ரூ.2,10,63,000/–க்கு மூன்று முறை ஒப்பந்தப்புள்ளிகள் அழைக்கப்பட்ட போது, ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்பட வில்லை. பின்னர், 07.12.2007அன்று நாள் குறித்து ஒப்பந்தப்புள்ளிகள் அழைக்கப்பட்டன.

குறித்த நாளான 07.12.2007 அன்று மொத்தம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வ.எ | ஒப்பந்தத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு ரூபாய் (எடை மேடை நீங்கலாக) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை ரூபாய் | 2007–2008ம் ஆண்டு விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு. ஆர். ராமாராவ் | 2,10,63,000 | 3,37,00,800 | (+) 60% |
| 2 | திருவாளர்கள் ஜி. கே. எண்டர் பிரைஸஸ் | 2,10,63,000 | 3,15,94,500 | (+)50% |

திருவாளர்கள் ஜி. கே. எண்டர்பிரைஸஸ்13.12.2007 அன்று பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது இறுதி பேச்சு வார்த்தைக்கு பிறகு அவர்கள் (+)40% இப்பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார்கள். இதன் படி அவர்கள் கோரியுள்ள தொகை ரூ.2,94,88,200/– ஆகும்.

இந்த திட்டத்திற்கு மத்திய அரசினால் ஜவஹர்லால் நேரு தேசீய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மைக்கு மத்திய அரசு அளித்துள்ள மானியம் மற்றும் வட்டியில்லா கடனிலிருந்து செலவிடப்படும்.

ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட பிறகு நாளிதழ்களில் வெளியான சந்தை விலைவிகிதங்களின் படி இந்தப்பணிக்கான பொருட்கள் மற்றும் பணியாளர்களின் கூலி ஆகியவைகள் கணிக்கப்பட்டதில் இப்பணியின் மதிப்பு ரூ.2,94,81,881/–ஆகிறது. இத்தொகை அலுவலக மதிப்பீட்டை விட 39.97 ரூ கூடுதலாகும். மற்றும் அலுவலக மதிப்பீட்டினை விட ரூ.84,18,881 அதிகமாகும். சந்தை மதிப்பை விட (+) 0.03% அதிகம் கோரியுள்ளனர்.

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள் ஜி. கே. எண்டர்பிரைஸஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை தகுதி வாய்ந்த அலுவலருக்கு பரிந்துரைக்க பரிசீலனை செய்ய தொழில்நுட்பக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

தொழில்நுட்பக்குழு, 13.12.2007 அன்று தங்களது பரிந்துரையில் இந்த திட்டம் ஜவஹர்லால் நேரு தேசீய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் வருவதாலும், இப்பணி தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளதாலும் மற்றும் தற்போதைய சந்தை விலையை கருத்தில் கொண்டும் (+) 40% க்கு இந்த ஒப்பந்தப்புள்ளியினை பரிந்துரைத்துள்ளனர்.

மேற்சொன்ன தொழில் நுட்பக்குழுவின் பரிந்துரையுடன், ஒப்பந்தப்புள்ளி குழுவின் முன் இந்த பொருட்பாடு சமர்ப்பிக்கப்பட்டது.

**தி.க.மே.து.ந.க.எண்.எ7/2005/2007**

ஒப்பந்தப்புள்ளிக்குழுவும் தங்களது, 14.12.2007 அன்று இந்த ஒப்பந்தப்புள்ளிக்கு பரிந்துரை வழங்கியது.

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திருவாளர்கள் ஜி. கே. எண்டர்பிரைஸஸ்அவர்களுடன் நடத்திய இறுதி பேச்சு வார்த்தைக்குப் பிறகு அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு (+) 40%க்கு இவ்வலுவலக 2007–2008–ம் ஆண்டு திட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமாக இவ்வொப்பந்தத்தை திருவாளர்கள் ஜி. கே. எண்டர்பிரைஸஸ் அவர்களுக்கு ரூ.2,94,88,200/–க்கு (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்று நான்கு இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து இருநூறு மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.283/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.229/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**தி.க.மே.து.ந.க.எண்.எ7/2035/2007**
**ஆணையரின் 15.12.2007 நாளிட்ட குறிப்பு**

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.673/2007 பொருள் எண்.50

**மண்டலம் 7ல் நவீன குப்பை மாற்று நிலையம் கட்டும் பணி**

கோட்டம்–106–ல் ஐயாசாமி தெருவில் அலுவலக கட்டடங்கள், மின்வேலைகள், பக்கவாட்டு வடிகால்கள், தரைகள், குடிநீர் வசதி மற்றும் கழிவு நீர் வடிகால் வசதிகள், ஆகியவைகளை உள்ளடக்கிய நவீன குப்பை மாற்று நிலையத்தை மண்டலம் 7–க்காக கட்டும் பணிக்காக மன்றத்தீர்மானம் எண்.340/2007, நாள் 30.07.2007ல் ரூ.1,32,69,000/–க்கு 2007–2008ஆண்டு விலைப்பட்டியலை அடிப்படையாக கொண்ட திட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, மேற்சொன்ன பணிக்கு, எடைமேடையின் மதிப்பீடான ரூ.18,57,600/– நீங்கலாக, 24.08.2007 என்று நாள் குறித்து ஒப்பந்தப்புள்ளிகள் அழைக்கப்பட்டது. அன்று ஒப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை. பின்னர், 28.9.2007 நாள் குறித்து மறு ஒப்பந்தப்புள்ளிகள் அழைக்கப்பட்டன.

குறித்த நாளான 28.09.2007 அன்று கீழ்வரும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவைகளின் விவரம் கீழ்வருமாறு

| வ.எ | ஒப்பந்தத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு ரூபாய் | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை ரூபாய் | 2007–2008ம் ஆண்டு விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு. ஆர். ராமாராவ் | 94,09,600 | 1,31,73,440 | (+) 40% |
| 2 | திருவாளர்கள் வி.எஸ். கன்ஸ்ட்ர்க்ஷன்ஸ் | 94,09,600 | 1,36,43,920 | (+)45% |

குறைந்த விலைப்புள்ளி அளித்த திரு. ஆர். ராமாராவ் அவர்களுக்கு விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்காக 19.10.2007 நாளிட்ட கடிதத்தில் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆயினும் இந்த பேச்சு வார்த்தைக்கு பிறகு தனது விலைவிலைவிகிதத்தை குறைக்க இயலாது என்று 14.12.2007 அன்று திரு. ஆர். ராமாராவ் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட பிறகு நாளிதழ்களில் வெளியான சந்தை விலைவிகிதங்களின் படி இந்தப்பணிக்கான பொருட்கள் மற்றும் பணியாளர்களின் கூலி ஆகியவைகள் கணிக்கப்பட்டதில் இப்பணியின் மதிப்பு ரூ.1,19,54,247/- ஆகிறது. இத்தொகை அலுவலக மதிப்பீட்டை விட 27.04% கூடுதலாகும். மற்றும் அலுவலக மதிப்பீட்டினை விட ரூ.25,44,673/– அதிகமும் சந்தை விலையைவிட (+) 12.96 அதிகமும் ஆகும்

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. ஆர். ராமாராவ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை தகுதி வாய்ந்த அலுவலருக்கு பரிந்துரைக்க பரிசீலனை செய்ய தொழில்நுட்பக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

தொழில்நுட்பக்குழு, 15.12.2007 அன்று தங்களது பரிந்துரையில் இந்த திட்டம் ஜவஹர்லால் நேரு தேசீய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் வருவதாலும், இப்பணி தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளதாலும் மற்றும் தற்போதைய சந்தை விலையை கருத்தில் கொண்டும் (+) 40% க்கு இந்த ஒப்பந்தப்புள்ளியினை பரிந்துரைத்துள்ளனர்.

மேற்சொன்ன தொழில் நுட்பக்குழுவின் பரிந்துரையுடன், ஒப்பந்தப்புள்ளி குழுவின் முன் இந்த பொருட்பாடு சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளிக்குழுவும் தங்களது, 15.12.2007 அன்று இந்த ஒப்பந்தப்புள்ளிக்கு பரிந்துரை வழங்கியது.

இந்த திட்டத்திற்கு மத்திய அரசினால் ஜவஹர்லால் நேரு தேசீய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மைக்கு மத்திய அரசு அளித்துள்ள மானியம் மற்றும் வட்டியில்லா கடனிலிருந்து செலவிடப்படும்.

<u>தி.க.மே.து.ந.க.எண்.எ7/2035/2007</u>

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு ஆர். ராமாராவ் அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு (+) 40%க்கு இவ்வலுவலக 2007-2008-ம் ஆண்டு திட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமாக இவ்வொப்பந்தத்தை திரு ஆர். ராமாராவ் அவர்களுக்கு ரூ.1,31,73,440/-க்கு (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தியொரு இலட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து நாநூற்று நாற்பது மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.282/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.228/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"ஐயா சாமி தெரு என்பதற்கு பதிலாக ஐயாசாமி சாலை என்ற திருத்தத்துடன் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ-18.

மன்றச் செயலாளர்

தி.க.மே.து.ந.க.எண்.எ7/4272 /2007
ஆணையரின் 15.12.2007 நாளிட்ட குறிப்பு

## 29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.674/2007 பொருள் எண்.51

### மண்டலம் 9க்கு நவீன குப்பை மாற்று நிலையம் கட்டுதல்

சென்னை மாநகராட்சியில் மண்டலம் 2, 4, 5, 7 மற்றும் 9ல் நவீன குப்பை மாற்று நிலையம் கட்டும் பணி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசினால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இவற்றில் மண்டலம்—9ஐ தவிர மற்ற குப்பை மாற்று நிலையங்களுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் அழைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த குப்பை மாற்று நிலையங்கள் தரையில் பெரிய பள்ளமான ஒரு சுகாதார குழி அமைக்கப்பட்டு அதில் மண்டலப்பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகள் போடப்படும். பின்னர் அவைகள் இயந்திரங்கள் மூலம் அள்ளப்பட்டு பெரிய வாகனங்களின் மூலம் குப்பை கொட்டும் வளாகங்களுக்கு கொண்டு சென்று கொட்டப்படும். இந்த வடிவமைப்பு Pit டைப்பாகும்.

ஆனால் மண்டலம்—9ல் மாதிரி பள்ளங்கள் (Test pits) எடுத்ததில், அங்கு நிலத்திற்கு அடியில் பெரிய பாறைகள் உள்ளது தெரிய வருகிறது. எனவே, இங்கு மேற்சொன்ன வடிவமைப்புடன் குப்பை மாற்று நிலையம் கட்டுவது தொழில்நுட்ப ரீதியில் இயலாது. எனவே, இங்கு குப்பை மாற்று நிலையம் ஒன்றினை மேலும் நவீன முறையில் கட்டுவதற்கு மாற்று வடிவமைப்பு செய்வது அவசியமாகிறது.

தரையில் பள்ளம் அமைத்து அதில் குப்பை சேகரித்து வைப்பதற்கு பதிலாக சற்று உயரமான நிலையில்(in a higher position) ஒரு சாய்வு சாலை அமைத்து (Ramp) அதன் வழியாக காம்பாக்டர் வாகனங்கள் அல்லது டிப்பர் வசதி கொண்ட வாகனங்களின் மூலம் தெருக்களிலிருந்து சேகரிக்கப்படும் குப்பைகள், எடை போட்டப்பிறகு, மேற்புறம் அகலமாகவும் கீழ்புறம் குறுகியும் உள்ள புனல் போன்ற வடிவமைப்பு கொண்ட (Funnel shaped) கட்டுமானத்தில் (Huge Hopper) கொட்டப்பட வேண்டும். அவ்வாறு அந்த கட்டுமானத்தில் கொட்டப்பட்ட குப்பைகள் கீழே தரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஹைட்ரோகான் கொள்கலம் போன்ற முற்றிலும் மூடப்பட்ட ஒரு தொட்டியில்(Closed Container) நேரடியாக வந்து விழும். அந்த தொட்டியில் விழுந்த குப்பை நிலையாக நிறுவப்பட்ட அழுத்தும் இயந்திரம் மூலம் நன்கு அழுத்தப்படும். இவ்வாறு ஒரு தொட்டியில் சுமார் 15 முதல் 20 டன் வரை சேர்த்து பின்னர் அதனை அப்படியே கொக்கி வசதி கொண்ட பெரிய வாகனங்களின் மூலம் இழுத்து குப்பை மாற்று நிலையத்திலேயே அடுக்கி வைத்து வாகனத்தில் ஏற்றி எடை போடப்பட்டு குப்பை கொட்டும் வளாகங்களுக்கு எடுத்துச் சென்று கொட்டப்படும்.

இந்த வடிவமைப்பு முறையில் குப்பை முழுவதும் இயந்திரங்களினாலேயே கையாளப்படும். குப்பை தரையில் இருக்காது. இது சுற்றுச்சூழல் கண்ணோட்டத்தில் மிகவும் சிறந்ததும் தற்போது மாறிவரும் மற்றும் வளர்ந்து வரும் அறிவியல் நிலைமைக்கு ஏற்றதாகவும் இருக்கும்.

இவ்வாறு குப்பையை முழுவதுமாக மூடிய கொள்கலங்களின் மூலம் வாகனங்களில் ஏற்றிச்செல்வதால் சாலைகளில் குப்பை சிதறுதல் போன்ற சுகாதாரத் தொல்லைகள் தவிர்க்கப்படுவதுடன், துர்நாற்றம் மற்றும் ஈக்கள் மற்றும் பூச்சிகளின் தொல்லையும் பெருமளவிற்கு குறையும்.

இந்த திட்டத்தினை வடிவமைத்தல், கட்டுதல், உரிமை பெற்றிருத்தல், இயக்குதல் மற்றும் உரிமை மாற்றல் செய்தல்[(Design, Build, Own, Operate and Transfer(DBOOT)] என்ற அடிப்படையில் செயலாக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

இந்த அடிப்படையில் தொழில் முனைவோர், அவர்களே குப்பை மாற்று நிலையத்தை வடிவமைத்து, கட்டி, உரிமை பெற்றிருந்து, இயக்கி பின்னர் உரிமக்காலம் முடிவடைந்தவுடன் சென்னை மாநகராட்சிக்கு எந்த விலையும் இல்லாமல் ஒப்படைக்க வேண்டும். அவர்களின் உரிமப்பணியின் வரம்பில் (Scope of the Concession) குப்பை மாற்று நிலையத்திற்கு சென்னை மாநகராட்சி கொண்டு வரும் குப்பையினை உரிமதாரர் சென்னை மாநகராட்சியின் குப்பை கொட்டும் வளாகத்திற்கு கொண்டு செ சன்று கொட்ட வேண்டும்

என்பதும் அடங்கும். இதற்காக அவர்களுக்கு நீண்ட காலத்திற்கு, அதாவது 10 முதல் 15 ஆண்டுகளுக்கு உரிமம் (Concession) வழங்கலாம். உரிமதாரருக்கு சென்னை மாநகராட்சி ஒரு டன் குப்பையை குப்பை கொட்டும் வளாகத்திற்கு கொண்டு சென்று கொட்ட ஒரு தொகையினை வழங்கலாம்.

இதற்கென ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கலாம். மேலும், தேவைப்படின் தொழில் முனைவோரை இனங்காண ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளை மேற்கொள்ள (To exercise the tender process for identification of project developer) ஒரு ஆலோசனை அமைப்பையும்(Consultants) நியமித்துக்கொள்ளலாம்.

எனவே,

(அ) ஆலந்தூர் சாலையில் மண்டலம்–9க்கு ஒரு நவீன குப்பை மாற்று நிலையத்தை கட்டும் பணியினை வடிவமைத்தல், கட்டுதல், உரிமை பெற்றிருத்தல், இயக்குதல் மற்றும் உரிமை மாற்றல் செய்தல்[(Design, Build, Own, Operate and Transfer(DBOOT)] என்ற அடிப்படையில் 10 முதல் 15 ஆண்டு உரிம காலத்திற்கு செயலாக்கவும்,

(ஆ) அதற்கென தேவைப்படின் ஆலோசனை அமைப்பினை நியமித்துக்கொள்ளவும் மற்றும் அவர்களுக்கு உரிய ஆலோசனை கட்டணத்தை அதற்கென நிதி அதிகார தகுதி வாய்ந்த அலுவலரின் ஒப்புதல் பெற்று வழங்கவும்,

மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.286/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.231/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**திக.மே.து.ந.க.எண்.எ7/663/2007**
**ஆணையரின் 05.12.2007 நாளிட்ட குறிப்பு**

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.675/2007 பொருள் எண்.52

**வளசரவாக்கம் மூன்றாம் நிலை நகராட்சிக்கு பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் அந்நகராட்சியில் உருவாகும் குப்பையினை கொட்ட அனுமதி அளித்தது குறித்து**

வளசரவாக்கம் நகராட்சி அமைப்பிற்கு அந்நகராட்சியில் உருவாகும் குப்பையை சென்னை மாநகராட்சியின் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டுவதற்கு, மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி 31.5.2007 நாளிட்ட கடிதத்தில் 60 நாட்களுக்கு ஒரு நாளைக்கு 12 டன் வீதம் 720 டன் குப்பையை பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் ஒரு டன்னிற்கு களைதல் கட்டணமாக ரூ.237/– வீதம் மொத்தம் 1,70,640/–ஐ சென்னை மாநகராட்சிக்கு செலுத்தி களைவதற்கு மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி மன்றத் தீர்மானம் எண்.341/2007, நாள் 30.07.2007ல் பெறப்பட்டுள்ளது.

5.11.2007 நாளிட்ட வளசரவாக்கம் நகராட்சியின் கடிதத்தில் 14.06.2007 முதல் 20.08.2007 வரையிலான காலக்கட்டத்தில் 440.030 டன் குப்பையை மட்டுமே பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்பட்டுள்ளது என்றும் மீதி அளவான 279.970 டன் குப்பையை கொட்ட அனுமதி கோரப்பட்டுள்ளது.

தற்போதைய களைதல் கட்டணமான ரூ.237/– ஒரு டன்னுக்கு என்பது வரும் 31.12.2007 வரைதான். பின்னர் அடுத்த நாள்காட்டி ஆண்டிற்கு அதனில் 10 சதவிகிதம் அதிகரிப்பு செய்து வசூலிக்கப்பட வேண்டும்.

எனவே, வளசரவாக்கம் நகராட்சி மீதமுள்ள அளவான 279.970 டன் குப்பையை பழைய களைதல் கட்டணத்தின் அடிப்படையில் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டுவதற்கான அனுமதி 31.12.2007 வரை என்றும், அதற்குள் அந்நகராட்சி செலுத்தியுள்ள களைதல் கட்டணத்திற்குண்டான எடையினை எட்டவில்லை என்றால், அவர்களால் 01.01.2008 முதல் களையப்படும் குப்பைக்கு ஒரு டன்னிற்கு ரூ.261.00 என்ற விலைவிகிதத்தில் அந்நகராட்சியால் முன்பணமாக செலுத்தப்பட்டுள்ள களைதல் கட்டணத்தில் சரிசெய்யப்படும் என்ற நிபந்தனையுடனும் மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

> "19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.271/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

> "20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.226/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**இ.பொ.து.தெ.செ.நி.ந.க.எண்.டி3/1280/2007.**
**ஆணையாளர் அவர்களின் 18 .12.2007 நாளிட்ட குறிப்பு.**

**29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.676/2007 பொருள் எண்.53

**புதியதாக 40 எண்ணிக்கையில் குப்பை நெருக்கும் உபகரணங்கள் பொருத்திய கனரக வாகனங்கள்(Compactors) வாங்குதல்**

சென்னை நகரில் தற்சமயம் குப்பை மற்றும் கட்டிட இடிபாடுகள் அகற்றும் பணி, திறந்த டிப்பர் லாரிகள் ( Open Tipper Lorries) மற்றும் இலகுரக வாகனங்கள்(LMV's) மூலம் நடை பெற்று வருகிறது. குப்பைகள் திறந்த நிலை வாகனங்கள் மூலம் அகற்றப்படும் போது, நைலான் வலையினால் மூடப்பட்டாலும் கூட, பலத்த காற்று காரணமாக குப்பைகள், வாகனங்கள் செல்லும் சாலைகளில் சிந்தி சிதறி தாங்க முடியாத துர்நாற்றம் ஏற்படுவதால், பொது மக்களின் அதிருப்திக்கு ஆளாக வேண்டியுள்ளது. மேலும், வழி அனைத்திலும் சாலைகளில் குப்பைகள் சிந்துவதால் சாலைகள் அசுத்தமாகின்றன. இதனால், சுகாதார சீர்கேடு உண்டாகிறது.

மேற்கூறப்பட்ட சமூக பிரச்சனைகளைக் களைய வேண்டியும், குப்பைகளை திறந்த லாரிகளில் அனுப்பக் கூடாது என்பதாலும், அமிலத்தன்மை மற்றும் அழுகும் தன்மையுடைய குப்பைகளை ஏற்றிச் செல்வதால் வாகனங்களில் துரு ஏறியும் மற்றும் குப்பை கொட்டுமிடத்தின் சமச்சீராய் அமையாத தரைத்தளம் ஆகியவற்றால், விரைவாக பழுதுபட்டு ,மிகவும் உருக்குலைந்த நிலையில் உள்ள சென்னை மாநகராட்சியில் 10 வருடங்களுக்கும் மேலாக ஓடிக்கொண்டிருக்கும் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ள 150 எண்ணிக்கைகள் கொண்ட இத்திறந்த நிலை டிப்பர் லாரிகளுக்கு பதிலாக 80 எண்ணிக்கைகளில் காம்பேக்டர்கள் (Compactors) சென்னை மாநகராட்சி வாங்க தீர்மானித்திருப்பதாக, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தமிழக சட்டமன்றத்தில் பட்ஜெட் கூட்டத்தில் அறிவித்திருந்தார்கள்.

இத்திட்டத்தின்படி, 1 : 2 விகிதத்தில் குப்பைகள் அழுத்தப்படுவதால் ஒரு காம்பேக்டர் வண்டி மூலம் இரு மடங்கு குப்பையை எடுத்து செல்ல முடியும். அகற்றப்படும் குப்பையானது , திறந்த நிலை குப்பை லாரிகளின் மூலம் அகற்றப்படும் குப்பையைவிட இருமடங்காகும். இதனால் திறந்த நிலை டிப்பர் லாரிகளின் எண்ணிக்கையைவிட, காம்பேக்டாகளின் எண்ணிக்கை பாதியாக இருக்கும். இதன் மூலம் குறைவான எண்ணிக்கை கொண்ட காம்பெக்டர்களின் பராமரிப்பு சுலபமாகிறது.

இதன்படி, சோதனை அடிப்படையில் (Trial Basis) 14 கனமீட்டர் கொள்ளளவு திறன் கொண்ட ஒரு காம்பெக்டர் வாகனம் வாங்கப்பட்டது. அதன் வேலை செய்யும் விதம் திருப்தியாக இருந்ததால் , முதற்கட்டமாக 40 எண்ணிக்கைகளும் பிறகு 39 எண்ணிக்கை காம்பெக்டர் வாகனங்கள் வாங்க தீர்மானிக்கப்பட்டது.

எனவே, 40 எண்ணிக்கைகள் கொண்ட குப்பை நெருக்கும் உபகரணங்கள் பொருத்திய கனரக வாகனங்கள் வாங்க, நாளிதழ்களில் மற்றும் சென்னை மாநகராட்சியின் அதிகார பூர்வ அறிக்கையிலும் மாவட்ட செய்தி மலரிலும் ஒளிவு மறைவில்லா திறந்த நிலை ஒப்பங்கள் கோரப்பட்டன.

அரசு அறிவித்த அரசாணைகளின்படி, ஒப்ப அறிவிப்புடன் கூடிய ஒப்ப பத்திரங்கள், கணினியின் மூலம் இறக்கம் செய்து பயன்படுத்திக் கொள்ளும் வகையில் கணினியில் ஏற்றம் செய்யப்பட்டன ( e - tender)

முதலில் 27.7.2007 அன்று ஒப்பங்கள் திறக்கப்படவிருந்தன. பிறகு, ஒப்பதாரர்களின் வேண்டுகோளுக்கிணங்க 6.8.2007 அன்று ஒப்பம் கோரும் முன் முன் ஒப்பக் கூட்டம் (Pre-bid) ஒப்பந்ததாரரின் முன்னிலையில் கூட்டப்பட்டது. கூட்டத்திற்குப்பின், (Pre-Bid Meeting) ஒப்பதாரர்களின் தொழில் மற்றும் வர்த்தக ரீதியான கேள்விகளுக்கான பதில்கள் ''சேர்த்தல் மற்றும் திருத்துதல்''(Addendum & Corrigendum) மூலம் கணினியில் ஏற்றம் செய்யப்பட்டன. 31.8.2007 அன்று ஒப்பங்கள் திறக்கப்பட திருத்தியமைக்கப்பட்டது. எதிர்பாரா சந்தர்ப்பங்களினால் ஒப்ப திறப்பு மேலும் 3 நாட்கள் ஒத்தி வைக்கப்பட்டு, 3.9.2007 அன்று தொழில் முறை ஒப்பப்படிவம் (Technical bid) ஒப்பங்கள் திறக்கப்பட்டன. இதில் திருவாளர்கள் காம் அவிடா என்விரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் (Kam Avida) திருவாளர்கள்.டி.பி.எஸ், திருவாளர்கள்.ஐ.பி.டபுள்யூடி மற்றும் திருவாளர்கள்.அந்தோணி மோட்டார்ஸ் ஆகிய 4 நிறுவனங்களிடமிருந்து ஒப்பங்கள் பெறப்பட்டன. தொழில் முறை ஒப்பப் படிவம் தகுதிக்கேற்ப நன்றாக பரீசிலிக்கப்பட்டன. பரீசீலனையின் போது திருவாளர்கள் ஐ பி.டபுள்யூடி ஒப்பப் படிவத்தில் கேட்டு கொண்டுள்ள சட்டவிதிகள் I,II,&III-ன்படியும் மற்றும் கீழே விளக்கப்பட்ட காரணங்களுக்காக தகுதியில்லாததாகத் தெரிய வந்தது.

தகுதிக்கான விதிகள், 1 , 2 மற்றும் 3ன்படி ஒரே சமயத்தில் 40 எண்ணிக்கை காம்பேக்டர்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கு, ஒப்பதாரர்கள் கடந்த 5 வருடங்களில் 20 எண்ணிக்கைக்குக் குறையாமல் உற்பத்தி செய்து விற்பனை செய்திருக்க வேண்டும். அவ்வாறு திருவாளர்கள் ஐ.பி.டபுள்யூ.டி நிறுவனம் ஒரே ஆண்டில் 20 எண்ணிக்கையுள்ள காம்பேக்டர்கள்

உற்பத்தி செய்யும் திறன் மற்றும் கடந்த 5 ஆண்டுகளில் 20 உற்பத்தி செய்து விற்பனை செய்துள்ளதா என்பது பற்றி அறிய, தகுந்த ஆவணங்களை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதற்கு அந்நிறுவனம், தனது 6.9.2007 தேதியிட்ட கடிதத்தில், தனது கூட்டு நிறுவனமான திருவாளர்கள்.குக்ஜியா மோட்டார்ஸ், கொரியா, 500 எண்ணிக்கைக்கு மேலாக குப்பை நெருக்கும் உபகரணங்கள் பொருத்திய கனரக வாகனங்கள் விற்பனை செய்துள்ளதாகக் குறிப்பிட்டிருந்தது. ஆனால், அதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் திருவாளர்கள்.குக்ஜியா மோட்டார்ஸ் கொரியா நிறுவனம், திருவாளர்கள்ஐ.பி.டபுள்யூ.டி நிறுவனத்தை பங்கீடுதாரராக (Distributer) மட்டுமே அறிவித்திருந்ததற்கான ஆதார ஆவணங்களை அளித்திருந்தது. மேற்கூறப்பட்ட காரணங்களின் மேல் திருவாளர்கள் ஐ.பி.டபுள்யூ.டி. நிறுவனம் ஒப்பந்தத்தில் பங்கு பெற தகுதியற்றதாகி விட்டதாக முடிவெடுக்கப்பட்டது.

விலை விவர உறைகள் திறக்கப்படவிருக்கும் முன், திருவாளர்கள் காம் அவிடா நிறுவனம் தனது 3/9/07 தேதியிட்ட கடிதத்தில், அவர்கள் சமர்ப்பித்த ஒப்பத்தில் மொத்த கூட்டுத்தொகையில் தவறான தெகையை குறிப்பிட்டுவிட்டதாகவும் அத்தவறில் திருத்தத்தை அனுமதிக்கும்படியும் கேட்டிருந்தது. இந்த நிகழ்வு பற்றி விலை விவர உறைகள் திறக்கப்படும்போது 7/9/07 அன்று ஒப்பத்தில் கலந்து கொண்ட ஒப்பதாரர்கள் முன்னிலையிலும் மற்றும் ஒப்ப பரிசோதனை குழுவின் (Tender Scrutiny Committee) உறுப்பினர்கள் முன்னிலையிலும் தெரிவிக்கப்பட்டது.

பிறகு, 7.9.07 அன்று பகல் 11.00 மணி அளவில் மற்ற மூன்று தகுதியுள்ள நிறுவனங்களின்விலை விவர உறைகள் திறக்கப்பட்டன. அவையாவன (1). திருவாளர்கள் காம் அவிடா என்விரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், ( kam Avida )(2) திருவாளர்கள் டி.பி.எஸ். மற்றும் 3. திருவாளர்கள் அந்தோணி மோட்டர்ஸ்.

பட்டியலிடப்பட்ட தொகைகளிருந்து குறைந்த விலை ஒப்பந்தாரரான திருவாளர்கள் காம் அவிடா என்விரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள், 40 எண்ணிக்கை Chassis கனரக வாகனம் மற்றும் குப்பை நெருக்கும் உபகரணங்கள் மற்றும் 4 வருடங்களுக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்புத் தொகையையும் (O&M) சேர்த்து ரூ.18,74,90,400/–க்கு பதிலாக ரூ.16,44,90,400/–என்று திருவாளர்கள் காம் அவிடா என்விரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் ( Kam Avida) நிறுவனம் தவறாக குறிப்பிட்டிருந்தது.

திருவாளர்கள் காம் அவிடா என்விரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் விலைக் குறைப்புக்காக பேச்சு வார்த்தைக்கு 13.9.2007 தேதியிட்ட கடிதம் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டது. திருவாளர்கள் காம் அவிடா என்விரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் தனது 18.9.2007 தேதியிட்ட கடிதத்தில், ஏற்கனவே அளித்துள்ள விலையே மிகவும் குறைவு என்றும் தன்னால் மேற்கொண்டு விலை குறைப்பு ஏதும் அளிக்க இயலாது எனகுறிப்பிட்டுள்ளார்கள்.

இதனிடையே ஒரு ஷிப்ட் முறையில் மட்டும் காம்பேக்டர்களை செயல்படுத்தினால் போதுமானது என்று மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே.துறை) அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. இக்குறிப்பு ஒப்பக்குழுவின் முன் சமர்ப்பிக்கப்பட்டு 25/09/07 அன்று நடந்த கூட்டத்தில் ஒப்பக்குழுவால் எற்கப்பட்டு பரிந்துரைக்கப்பட்டது. மேலும், குறைந்த விலைப்புள்ளிஅளித்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள் காம் அவிடா என்விரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் , ஒப்பத்தில் தவறுதலாகக் குறிப்பிட்டிருந்த மொத்த தொகையின் சரியான திருத்தத்தை , தமிழ்நாடு ஒளிவு மறைவில்லா ஒப்பவிதி 29(2)ன்படி அனுமதிக்கலாம் என ஒப்பக்குழுவால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

இதன் பரிந்துரையின்பேரில் குறைந்த நிலை ஒப்பதாரரிடமிருந்து ஒரு ஷிப்ட்முறையில் மட்டும் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணி மேற்கொள்ள ஒப்புதல் கடிதம் பெறப்பட்டுள்ளது.

ஒரு ஷிப்ட் முறையில் காம்பேக்டர்கள் அமர்த்தப்படவேண்டும் எனத்தீர்மானிக்கப்பட்டபிறகு ஓப்பதாரர் இனவாரியாகக் குறிப்பிட்ட விலைகள் மட்டும் கணக்கில் கொள்ளப்பட்டு, ஒப்பமுடிவுத் தொகை நிர்ணயம் செய்யப்படும் நிலையில், ஒப்பதாரர் ஒப்பம் சமர்ப்பிக்கப்படும்போது, இரண்டு ஷிப்ட் முறையில் காம்பேக்டர்களை அமர்த்துவதற்கு இன வாரியாகக் குறிப்பிட்ட சரியான விலைகளின் பிழையான கூட்டுத்தொகையை கணக்கில் எடுத்துக் கொள்ள அவசியமற்றதாகி விடுகிறது.

ஆகவே, குறைந்த நிலை ஒப்பதாரர் திருவாளர்கள் காம்அவிடா என்விரோ என்ஜீனியர்ஸ் பிரைவேட் லிமிடட் நிறுவனம் அவர்களின் பிழையான மொத்த கூட்டுத் தொகை, இவ்வொப்பத்தில் எந்த வித பாதிப்பையும் எற்படுத்திவிடவில்லை என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து தெரிவிப்பது யாதெனில், ஏற்கெனவே வாங்கப்பட்ட ஒரு காம்பெக்டர் விலையினை கருத்தில் கொண்டு தற்போது அளித்துள்ள ஒப்பவிலை மிகவும் நியாயமானதாகவும் குறைவானதாகவும் கருதப்படுகிறது.

மேலும், அந்நிறுவனம் அசோக்லேலண்டு மற்றும் ஐச்சர் சேசிஸ் ஆகிய இரண்டில் ஒன்று தருவதாகவும் தனது கடிதத்தில் அறிவித்திருந்தது. இதன் பராமரிப்பு செலவு மற்றும் பராமரிப்பு சுலபம் என்பதாலும் மாநகராட்சியில் தற்போது ஓடிக் கொண்ருக்கும் 95% க்கும் மேலான

கனரக வாகனங்களில் அசோக் லேலண்டு சேசிஸ் பொருத்தப்பட்டிருப்பதாலும், ஐச்சர் மற்றும் அசோக் லேலண்டு சேசிஸின் விலைகளில் எவ்வித மாற்றமும் இல்லாததாலும் அசோக் லேலண்டு சேசிஸையே ஏற்கப் பரிந்துரைக்கலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

இயக்குதல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் ஒப்பதாரரே மேற்கொள்ள வேண்டும். இருப்பினும், வாகனத்திற்கு டீசல் மட்டும் சென்னை மாநகராட்சியால் அளிக்கப்படும். பராமரிப்பில் ஏற்படும் குறைபாடுகளை ஈடுகட்டும் வகையில் 95% வாகனங்கள் ஓடும் நிலையிலும், 5% தயார் நிலையிலும் (அதாவது 40 எண்ணிக்கையில் இரண்டு எண்ணிக்கைகள் கொண்ட குப்பை நெருக்கும் உபகரணங்கள் பொருத்திய கனரக வாகனங்கள் (Spare) நிலையிலும் வைக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது, ஒப்பத்தில் வாகனங்கள் சரியாக பராமரிக்கப்படாமலிருப்பதற்கு கொடுக்கப்பட்டுள்ள அபராத தொகையும் கடுமையானதாக உள்ளது. காம்பேக்டர் உபகரணங்கள் முதல் முறையாக இயக்கப்படுவதால் அவற்றைப் பற்றிய தொழில் நுட்பம் அறிந்த தகுதிவாய்ந்த மெக்கானிக்குகள், மேற்பார்வையாளர்கள் மற்றும் இயக்குநர்கள் ( Drivers) சென்னை மாநகராட்சியில் இல்லை. எனவே, இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்காக திருவாளர்கள் காம் அவிடா என்விரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் (Kam Avida) நிறுவனத்தினர் அளித்துள்ள தொகை நியாயமானதாக உள்ளது. இதனை கருத்தில் கொண்டு பரிந்துரை செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

ஒப்பக்குழு (Tender Committee)-வின் முன் இக்கோப்பு வைக்கப்பட்டது. இதன் பரிந்துரையின்பேரில் குறைந்த நிலை ஒப்பதாரரிடமிருந்து ஒரு ஷிப்ட் முறையில் மட்டும் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணி மேற்கொள்ள ஒப்புதல் கடிதம் பெறப்பட்டுள்ளது.

இதனிடையே , அடுத்த கட்டமாக 39 காம்பேக்டர்கள் கொள்முதல் செய்வதற்கான ஒப்பம் கோரப்பட்டு திறக்கப்பட்டு, கோப்பு ஒப்பக்குழுவின் முன் 4.12.07 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. அக்கோப்பின் பரிசீலனையின் போது, முன்னதாகக் கோரப்பட்ட ஒப்பமான 40 காம்பேக்டர்கள் கொள்முதல் செய்வதற்கான இக்கோப்பும் பரிசீலனையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்படி, இவ்வொப்பத்தின (40 காம்பேக்டர்கள்) குறைந்த விலை ஒப்பதாரரிடம் பேச்சுவார்த்தை நடத்தி, இரண்டாம் கட்டமாகக் கோரப்பட்ட ஒப்பத்தின் (39 காம்பேக்டர்) குறைந்த விலை ஒப்பதாரரின் முடிவுத் தொகைக்கு இணையாக, தொகை அளிக்கக் கேட்டுக் கொள்ளும் படி, ஒப்பப் குழுவால் அறிவுறுத்தப்பட்டது.

பின்னர், திருவாளர்கள் காம் அவிடா என்விரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் 11.12.07 தேதியிட்ட கடிதம் மூலம் பேச்சுவார்தைக்கு அழைக்கப்பட்டது. நீண்ட பேச்சுவார்த்தைக்குப்பின் திருவாளர் காம் அவிடா நிறுவனம் , காம்பேக்டர் உபகரணங்கள் மற்றும் நான்கு வருட இயக்குதல் மற்றும் பராமரிப்பு தொகையையும் சேர்த்து தனது இறுதித் தொகையாக ரூ.12,89,59,000/– அளிக்க சம்மதிப்பதாக தனது 13.12.07 அன்று தேதியிட்ட கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது. மொத்தத்தில் திருவாளர்கள்.காம் அவிடா நிறுவனம் அவர்கள் பேச்சு வார்த்தைக்குப்பின், ஒப்பத்தில் குறிப்பிட்ட தொகையைவிட ரூ.34,16,400/–ஐ குறைத்து அளித்துள்ளார்கள்.

இதன்படி விலைக் குறைப்பிற்குப்பின் திருவாளர்கள் காம் அவிடா என்விரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் திருத்தப்பட்ட விலை விவரப் பட்டியல் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

| Sl. No. | Basic cost of | M/s.Kam Avida Enviro Engineers (P) Ltd., | | | |
|---|---|---|---|---|---|
| | | **Before Negotiation** | | **After Negotiation** | |
| | | **Rate Rs.** | **Amount for 40 Nos Compactors Rs.** | **Rate Rs.** | **Amount for 40 Nos Compactors Rs.** |
| **1.** | **Chassis** | 9,24,635.00 | 3,69,85,400.00 | 9,24,635.00 | 3,69,85,400.00 |
| **2.** | **Cabin** | 50,625.00 | 20,25,000.00 | 50,625.00 | 20,25,000.00 |
| **3.** | **Compactor Equipment** | 9,56,250.00 | 3,82,50,000.00 | 9,56,250.00 | 3,82,50,000.00 |
| | **Total** | **19,31,510.00** | **7,72,60,400.00** | **19,31,510.00** | **7,72,60,400.00** |
| **5.** | **O&M Per shift per day for 4 Years** | **13,77,875.00** | **5,51,15,000.00** | **12,92,465.00** | **5,16,98,600.00** |
| | **Grand Total** | **33,09,385.00** | **13,23,75,400.00** | **32,23,975.00** | **12,89,59,000.00** |

இவ்வாகனங்களுக்கான நிரந்தர வாகன பதிவு , காப்பீடு மற்றும் தகுதி சான்றிதழ் பெறவதற்கான செலவினை தக்க செலவு சீட்டுகள் ஒப்பதாரர் அளிப்பின் அதனை ஏற்று அச்செலவிற்கான தொகையினை காசோலையாக அளிப்பதாக ஒப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இரண்டாவது ஷீப்ட் முறையில் காம்பேக்டர்களை பயன்படுத்த தேவைப்படின், திருவாளர்கள் காம் அவிடா என்விரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் அளித்த கீழ்கண்ட விலையினை இயக்குதலுக்கு மட்டும் அளிக்க சம்மதித்துள்ளது.

| Operation cost for 2nd shift for 40 Compactors / per day | Ist Year Rs. | II nd Year Rs. | III rd Year Rs. | IVth Year Rs. |
|---|---|---|---|---|
| | 25, 640.00 | 14,358.00 | 15,384.00 | 15,384.00 |

இந்த விலை விவரமானது, இரண்டாவது கட்டமாக கோரப்பட்டு திறக்கப்பட்ட ஒப்பத்தின் குறைந்த விலை ஒப்பதாரர் திருவாளர்கள் அந்தோணி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடேட் நிறுவனம் வழங்கிய விலைப்புள்ளிக்கு இணையானதாகும்.

குறிப்பில் கூறப்பட்டுள்ள விவரங்களின்படி குறைந்தவிலைப்புள்ளிகள் ( L1 ) அளித்த திருவாளர்கள். காம் அவிடா பிரைவேட் லிமிடெட் 40 எண்ணிக்கை காம்பேக்டர்கள் மற்றும் 4 வருடங்களுக்கு ஆகும் ஒரு ஷீப்ட் முறைக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு தொகை நியாயமானதாக கருதப்படுவதால் பரிந்துரைக்கப்படுகிறது.

இக்கொள்முதலுக்கான மொத்த செலவு ரூ.12,89,59,000/–ஐ திடக்கழிவு மேலாண்மைத் துறையின் மூலமாக JNNURM மூலதனத் தொகையிலிருந்து வழங்க பரிந்துரைக்கப்படுகிறது.

மேலும், முதற்கட்டமாக 20 எண்ணிக்கைகள் கொண்ட காம்பெக்டர்கள் கொள்முதல் செய்து, அவற்றின் செயல்பாட்டின் திருப்திகரத்தைப் பொறுத்து, மீதமுள்ள 20 காம்பெக்டர்களை கொள்முதல் செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

எனவே ,

1. அசோக் லேலண்டு சேசிஸின் மேல் பொருத்தப்பட்ட 40 எண்ணிக்கை காம்பெக்டர்கள் மற்றும் 4 வருடங்களுக்கு ஆகும் ஒரு ஷிப்ட் முறைக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு தொகையையும் சேர்த்து மொத்த தொகை ரூ.**12,89,59,000/-**க்கான திருவாளர்கள் காம் அவிடா என்விரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும்,

2. முதல் இனம் ஏற்கப்படின், 40 எண்ணிக்கை காம்பெக்டர்கள் பல்வேறு கட்டங்களில் தேவைகேற்ப காம்பெக்டர்களை குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள் காம் அவிடா என்விரோ என்ஜீனியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய ஆணை வழங்கவும், (to issue orders in a phased manner)

3. திருவாளர்கள் காம் அவிடா என்விரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து மொத்த ஒப்பத் தொகையில் 2 சதவிகிதம் பாதுகாப்புத் தொகைக்கான வங்கி உத்தரவாதம் பெற்று உடன்படிக்கை செய்து கொள்ளவும்,

4. இப்பணிக்காக ஆகும் செலவினை, திடக்கழிவு மேலாண்மைத் துறையின் மூலமாக JNNURM மூலதனத் தொகையிலிருந்து ஏற்கவும்,

5. சேஸிஸ் தொகையின் 70 சதவிகிதத்தை ஒப்பதாரர் திருவாளர்கள் காம் அவிடா என்விரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து பொருள் விவர விலைப்பட்டியல்(Invoice) பெறப்பட்டவுடன் ஒப்ப விதிகளின்படி முன்பணமாக வழங்கவும்,

6. மீதமுள்ள 30 சதவிகித சேஸிஸ் தொகை மற்றும் காம்பெக்டர்களுக்கான முழுத் தொகை ஆகிய கூட்டுத் தொகையில் 90 சதவிகிதம், வாகனம் கொள்முதல் செய்து ஆணையர் அவர்களின் பேரில் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் வழங்கவும்,

7. காம்பெக்டர்களின் திருப்திகரமான செயல்பாட்டைப் பொறுத்து, மீதமுள்ள காம்பெக்டர்களுக்கான முழுத்தொகை ஆகிய கூட்டுத் தொகையில் 10 சதவிகிதம், வாகனம் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் வழங்கவும்,

8. இவ்வாகனங்களுக்கான நிரந்தர வாகன பதிவு , காப்பீடு மற்றும் தகுதி சான்றிதழ் பெறுவதற்கான செலவினை தக்க செலவு சீட்டுகள் ஒப்பதாரர் திருவாளர்கள் காம் அவிடா என்விரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் அளிப்பின் . அதனை ஏற்று அச்செலவிற்கான தொகையினை காசோலையாக அளிக்கவும் ( Actuals on production of necessary challans )

9. இரண்டாவது ஷிப்ட் முறையில் காம்பேக்ட்டர்கள் பயன்படுத்த தேவைப்படின் , திருவாளர்கள் காம் அவிடா என்விரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறவனம் 40 காம்பேக்டர்களுக்கு இரண்டாவது ஷிப்ட் இயக்குதலுக்கு மட்டும் அளித்த தொகைகளான , முதல் வருடம் ரூ25,640/– , இரண்டாவது வருடம் ரூ.14,358/– மூன்றாவது வருடம் ரூ.15,384/– மற்றும் நான்காவது வருடத்திற்கு ரூ.15,384/–ஐ அங்கீகரித்து, அதன்படி வழங்கவும்

10. புதியதாக 40 எண்ணிக்கையில் குப்பை நெருக்கும் உபகரணங்கள் பொருந்திய வாகனங்களில் கொள்முதல் செய்யவும், இதற்கு அரசின் பின்னேற்பு அனுமதி பெறவும், அல்லது அரசின் அனுமதி பெற்று கொள்முதல் செய்யவும், நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

மேற்கண்ட 1 முதல் 10 இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.307/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.221/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

இ.பொ.து.வ.செ..வா.ப.ந.க.எண்.பி3/1039/2007.
ஆணையர் அவர்களின் 18.12.2007 நாளிட்ட குறிப்பு

## 29.12.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.677/2007 பொருள் எண்.54

### புதியதாக 39 எண்ணிக்கையில் குப்பை நெருக்கும் உபகரணங்கள் பொருந்திய கனரக வாகனங்கள் (Compactors) வாங்குதல்

சென்னை நகரில் தற்சமயம் குப்பை மற்றும் கட்டிட இடிபாடுகள் அகற்றும் பணி, திறந்த டிப்பர் லாரிகள் ( Open Tipper Lorries) மற்றும் இலகுரக வாகனங்கள்(LMV's) மூலம் நடை பெற்று வருகிறது. குப்பைகள் திறந்த நிலை வாகனங்கள் முலம் அகற்றப்படும் போது, நைலான் வலையினால் மூடப்பட்டாலும் கூட, பலத்த காற்று காரணமாக குப்பைகள், வாகனங்கள் செல்லும் சாலைகளில் சிந்தி சிதறி தாங்க முடியாத துர்நாற்றம் ஏற்படுவதால், பொது மக்களின் அதிருப்திக்கு ஆளாக வேண்டியுள்ளது. மேலும், வழி அனைத்திலும் சாலைகளில் குப்பைகள் சிந்துவதால் சாலைகள் அசுத்தமாகின்றன. இதனால், சுகாதார சீர்கேடு உண்டாகிறது.

மேற்கூறப்பட்ட சமூக பிரச்சனைகளைக் களைய வேண்டியும், குப்பைகளை திறந்த லாரிகளில் அனுப்பக் கூடாது என்பதாலும், அமிலத்தன்மை மற்றும் அழுகும் தன்மையுடைய குப்பைகளை ஏற்றிச் செல்வதால் வாகனங்களில் துரு ஏறியும் மற்றும் குப்பை கொட்டுமிடத்தின் சமச்சீராய் அமையாத தரைத்தளம் ஆகியவற்றால், விரைவாக பழுதுபட்டு ,மிகவும் உருக்குலைந்த நிலையில் உள்ள சென்னை மாநகராட்சியில் 10 வருடங்களுக்கும் மேலாக ஓடிக்கொண்டிருக்கும் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ள 150 எண்ணிக்கைகள் கொண்ட இத்திறந்த நிலை டிப்பர் லாரிகளுக்கு பதிலாக 80 எண்ணிக்கைகளில் காம்பேக்டர்கள் (Compactors) சென்னை மாநகராட்சி வாங்க தீர்மானித்திருப்பதாக, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தமிழக சட்டமன்றத்தில் பட்ஜெட் கூட்டத்தில் அறிவித்திருந்தார்கள்.

இத்திட்டத்தின்படி, 1 : 2 விகிதத்தில் காம்பேக்டர் மூலம் அகற்றப்படும் குப்பையானது, திறந்த நிலை குப்பை லாரிகளின் மூலம் அகற்றப்படும் குப்பையைவிட இருமடங்காகும். இதனால் திறந்த நிலை டிப்பர் லாரிகளின் எண்ணிக்கையைவிட, காம்பேக்டாகளின் எண்ணிக்கை பாதியாக இருக்கும். இதன் மூலம் குறைவான எண்ணிக்கை கொண்ட காம்பெக்டர்களின் பராமரிப்பு சுலபமாகிறது.

இதன்படி, சோதனை அடிப்படையில் (Trial Basis) 14 கனமீட்டர் கொள்ளளவு திறன் கொண்ட ஒரு காம்பெக்டர் வாகனம் வாங்கப்பட்டது. அதன் வேலை செய்யும் விதம் திருப்தியாக இருந்ததால் , முதற்கட்டமாக 40 எண்ணிக்கைகளும் பிறகு 39 எண்ணிக்கை காம்பெக்டர் வாகனங்கள் வாங்க தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, முதற் கட்டமாக 40 எண்ணிக்கைகள் கொண்ட காம்பெக்டர்கள் வாங்க ஒப்பம் கோரப்பட்டு, திறக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

எனவே, அடுத்த கட்டமாக 39 எண்ணிக்கைகள் கொண்ட காம்பெக்டர்கள் வாங்க, நாளிதழ்களில் மற்றும் சென்னை மாநகராட்சியின் அதிகார பூர்வ அறிக்கையிலும் மாவட்ட செய்தி மலரிலும் ஒளிவு மறைவில்லா திறந்த நிலை ஒப்பங்கள் கோரப்பட்டன. அரசு அறிவித்த அரசாணைகளின்படி, ஒப்ப அறிவிப்புடன் கூடிய ஒப்ப பத்திரங்கள், கணினியின் மூலம் இறக்கம் செய்து பயன்படுத்திக் கொள்ளும் வகையில் கணினியில் ஏற்றம் செய்யப்பட்டன. (Down Loaded from the Net).

ஒப்பதாரர்களின் வேண்டுகோளுக்கிணங்க 20.11.2007 அன்று ஒப்பம் கோரும் முன் ஒப்பந்ததாரர்களின் முன் ஒப்பக் கூட்டம் (Pre-Bid Meeting) கூட்டப்பட்டது. கூட்டத்திற்குப்பின், 30.11.2007 அன்று தொழில் முறை ஒப்பப்படிவங்கள் (Technical bid) திறக்கப்பட்டன. இதில் திருவாளர்கள் காம் அவிட்டா (Kam Avida) திருவாளர்கள்.டி.பி.எஸ் மற்றும் திருவாளர்கள்.அந்தோணி மோட்டார்ஸ் ஆகிய 3 நிறுவனங்களிடமிருந்து ஒப்பங்கள் பெறப்பட்டன. தொழில் முறை ஒப்பப்படிவங்கள், தொழில்முறை குழுவால் (Technical Committee) தகுதிக்கேற்ப நன்றாக பரிசிலிக்கப்பட்டு, பங்கேற்ற மூன்று நிறுவனங்களும், தகுதியுள்ளதாக அறிவிக்கப்பட்டன.

அதன்படி, 3.12.07 அன்று தகுதியுடைய அனைத்து நிறுவனங்களின் விலை விவர உறைகள் திறக்கப்பட்டன. விலை விவரங்களின் பட்டியல் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

| Sl. No. | Basic Cost of | M/s.Kam Avida | | M/s.TPS | | M/s.Antony Motors | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Rate For 1 No Rs. | Amount for 39 Compactors Rs. | Rate For 1 No Rs. | Amount for 39 Compactors Rs. | Rate For 1 No Rs. | Amount for 39 Compactors Rs. |
| 1. | Chassis | 9,29,844 | 3,62,63,916 | 8,98,844 | 3,50,54,916 | 8,88,844 | 3,46,64,916 |
| 2. | Cabin | 50,625 | 19,74,375 | included in item 3 | | 84,375 | 32,90,625 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | Compactor Equipment | 9,56,250 3,72,93,750 | 11,71,400 4,56,84,600 | 10,23,750 3,99,26,250 |
| | Total | 19,36,719 7,55,32,041 | 20,70,244 8,07,39,516 | 19,96,969 7,78,81,791 |
| | O&M Per shift per day for 4 Years | 5,33,81,250 | 6,51,25,225 | 5,09,17,500 |
| | **Grand Total** | **12,89,13,291** | **14,58,64,741** | **12,87,99,291** |

மேலே பட்டியலிடப்பட்ட தொகைகளிருந்து குறைந்த விலை ஒப்பந்தாரரான திருவாளர்கள். அந்தோணி மோட்டார்ஸ் அவர்கள், 39 எண்ணிக்கை Chassis கனரக வாகனம் மற்றும் குப்பை நெருக்கும் உபகரணங்கள் மற்றும் 4 வருடங்களுக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்புத் தொகையையும் (O&M) சேர்த்து ரூ.12,87,99,291/–என்று திருவாளர்கள். அந்தோணி மோட்டார்ஸ் நிறுவனம் குறிப்பிட்டிருந்தது.

ஒப்பக் குழு (Tender Committee)–வின் முன் இக்கோப்பு 4.12.2007 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. இதன் பரிந்துரையின்பேரில் 4.12.2007 மற்றும் 11/12/07 தேதியிட்ட கடிதங்கள் மூலம் குறைந்த நிலை ஒப்பதாரரிடம் ஒப்ப விலையினை குறைத்து வழங்கும்படி கேட்டு கொள்ளப்பட்டது. அந்நிறுவனமும் தனது கடிதம் மூலமாக ஒரு காம்பெக்டர் எக்யூப்மேண்ட்ஸ் விலை ரூ. 32,23,975/– என ஏற்கெனவே குறிப்பிட்ட தொகையான ரூ.33,02,545.92–லிருந்து ரூ.78,570.92 குறைத்து, 39 காம்பெக்டர்கள் மற்றும் நான்கு வருட இயக்குதல் மற்றும் பராமரிப்பையும் சேர்த்து மொத்த தொகையில் ரூ.30,64,266/– குறைத்து கொள்ள சம்மதம் தெரிவித்துக் கொண்டுள்ளார்கள்.

இதன்படி விலைக்குறைப்பிற்கு பின் திருவாளர்கள் அந்தோணி மோட்டார்ஸ் நிறுவனத்தின் திருத்தப்பட்ட விலை விவரப் பட்டியல் கீழ்கண்டவாறு அளிக்கப்படுகிறது.

| Sl. No. | Basic cost of | **M/s.Antony Motors Private Limited.** | | | |
|---|---|---|---|---|---|
| | | **Before Negotiation** | | **After Negotiation** | |
| | | **Rate Rs.** | **Amount for 39 Nos Compactors Rs.** | **Rate Rs.** | **Amount for 39 Nos Compactors Rs.** |
| **1.** | **Chassis** | 8,88,844.00 | 3,46,64,916.00 | **8,88,844.00** | **3,46,64,916.00** |
| **2.** | **Cabin** | 84,375.00 | 32,90,625.00 | **84,375.00** | **32,90,625.00** |
| **3.** | **Compactor Equipment** | 10,23,750.00 | 3,99,26,250.00 | **9,58,291.00** | **3,73,73,349.00** |
| | **Total** | 19,96,969.00 | 7,78,81,791.00 | **19,31,510.00** | **7,53,28,890.00** |
| **5.** | **O&M Per shift per day for 4 Years** | 13,05,576.92 | 5,09,17,500.00 | **12,92,465.00** | **5,04,06,135.00** |
| | **Grand Total** | **33,02,545.92** | **12,87,99,291.00** | **32,23,975.00** | **12,57,35,025.00** |

மேலும், அந்நிறுவனம் அசோக்லேலண்டு ( 1616 Model) சேசிஸில் காம்பெக்டர்களை பொருத்தி தருவதாக ஒப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

இவ்வாகனங்களுக்கான நிரந்தர வாகன பதிவு , காப்பீடு மற்றும் தகுதி சான்றிதழ் பெறவதற்கான செலவினை தக்க செலவு சீட்டுகள் ஒப்பதாரர் அளிப்பின் அதனை ஏற்று அச்செலவிற்கான தொகையினை காசோலையாக அளிப்பதாக ஒப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பராமரிப்பில் ஏற்படும் குறைபாடுகளை ஈடுகட்டும் வகையில் 95% வாகனங்கள் ஓடும் நிலையிலும், 5% தயார் நிலையிலும் (அதாவது 39 எண்ணிக்கையில் இரண்டு எண்ணிக்கைகள் காம்பெக்டர் வைக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒப்பத்தில் வாகனங்கள் சரியாக பராமரிக்கப்படாமலிருப்பதற்கு கொடுக்கப்பட்டுள்ள அபராத தொகையும் கடுமையானதாக உள்ளது. காம்பெக்டர் வாகனங்கள் புதுமையானதாக உள்ளதால், அவற்றைப் பற்றிய தொழில் நுட்பம் அறிந்த அனுபவமுள்ள மெக்கானிக்குகள், மேற்பார்வையாளர்கள் மற்றும் இயக்குநர்கள் (Drivers) சென்னை மாநகராட்சியில் இல்லை. மேலே விளக்கப்பட்டிருக்கும் காரணங்களினால் இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்காக திருவாளர்கள். அந்தோணி மோட்டார்ஸ் நிறுவனத்தினர் கேட்டுக் கொண்டுள்ள தொகை நியாயமானதாக உள்ளது.

குறிப்பில் கூறப்பட்டுள்ள விவரங்களின்படி குறைந்தவிலைப்புள்ளிகள் ( L1 ) அளித்த திருவாளர்கள். அந்தோணி மோட்டார்ஸ் 39 எண்ணிக்கை காம்பேக்டர்கள் மற்றும் 4 வருடங்களுக்கு ஆகும் ஒரு ஷீப்ட் முறைக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு தொகை ரூ.12,57,35,025/– நியாயமானதாக கருதப்படுவதால் பரிந்துரைக்கப்படுகிறது.

**இ.பொ.து.வ.செ..வா.ப.ந.க.எண்.பி3/1039/2007.**

அதன்படி, 39 எண்ணிக்கைகளுக்கான காம்பெக்டர், கேபின், அசோக் லேலண்டு சேசிஸ் மற்றும் நான்கு வருடங்களுக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவையும் சேர்த்து (முதல் ஆண்டு பராமரிப்பு செலவைத் தவிர்த்து) கொள்முதல் செய்ய ஆகும் மொத்த செலவு ரூ.12,57,35,025/–ஐ திடக்கழிவு மேலாண்மைத் துறையின் மூலமாக JNNURM மூலதனத் தொகையிலிருந்து வழங்க பரிந்துரைக்கப்படுகிறது.

மேலும், 39 எண்ணிக்கைகள் காம்பெக்டர்களை பல்வேறு கட்டங்களில் (Phased Manner) கொள்முதல் செய்ய ஆணை வழங்கலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

எனவே,

1. அசோக் லேலண்டு சேசிஸின் மேல் பொருத்தப்பட்ட 39 எண்ணிக்கை குப்பை நெருக்கும் உபகரணங்கள் பொருத்திய கனரக வாகனங்கள் மற்றும் 4 வருடங்களுக்கு ஆகும் ஒரு ஷிப்ட் முறைக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு தொகையையும் சேர்த்து மொத்த தொகை ரூ.12,57,35,025/–க்கான திருவாளர்கள் அந்தோணி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும்,
2. முதல் இனம் ஏற்கபடின், பல்வேறு கட்டங்களில் காம்பெக்டர்களை திருவாளர்கள் அந்தோணி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய ஆணை வழங்கவும், (to issue orders in a phased manner)
3. திருவாளர்கள். அந்தோணி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து மொத்த ஒப்பத் தொகையில் 2 சதவிகிதம் பாதுகாப்புத் தொகைக்கான தேசிய வங்கி உத்தரவாதம் பெற்று உடன்படிக்கை செய்து கொள்ளவும்,
4. இப்பணிக்காக ஆகும் செலவினை, திடக்கழிவு மேலாண்மைத் துறையின் மூலமாக JNNURM மூலதனத் தொகையிலிருந்து ஏற்கவும்,
5. சேஸிஸ் தொகையின் 70 சதவிகிதத்தை ஒப்பதாரர் திருவாளர்கள் அந்தோணிமோட்டார்ஸ் நிறுவனத்திடமிருந்து பொருள் விவர விலைப்பட்டியல்(Invoice) பெறப்பட்டவுடன் ஒப்ப விதிகளின்படி முன்பணமாக வழங்கவும்,
6. மீதமுள்ள 30 சதவிகித சேஸிஸ் தொகை மற்றும் குப்பை நெருக்கும் உபகரணங்கள் பொருத்திய கனரக வாகனங்களுக்கான முழுத் தொகை ஆகிய கூட்டுத் தொகையில் 90 தவிகிதம், வாகனம் கொள்முதல் செய்து ஆணையர் அவர்களின் பேரில் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் வழங்கவும்,
7. குப்பை நெருக்கும் உபகரணங்கள் பொருத்திய வாகனங்களின் திருப்திகரமான செயல்பாட்டைப் பொறுத்து, மீதமுள்ள குப்பை நெருக்கும் உபகரணங்கள் பொருத்திய கனரக வாகனங்களுக்கான முழுத்தொகை ஆகிய கூட்டுத் தொகையில் 10 சதவிகிதம், வாகனம் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் வழங்கவும்,
8. இவ்வாகனங்களுக்கான நிரந்தர வாகன பதிவு , காப்பீடு மற்றும் தகுதி சான்றிதழ் பெறவதற்கான செலவினை தக்க செலவு சீட்டுகள் ஒப்பதாரர் திருவாளர்கள் அந்தோணி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் அளிப்பின் . அதனை ஏற்று அச்செலவிற்கான தொகையினை காசோலையாக அளிக்கவும் ( Actuals on production of necessary challans )
9. புதியதாக 39 எண்ணிக்கையில் காம்பெக்டர்களை கொள்முதல் செய்யவும், இதற்கு அரசின் பின்னேற்பு அனுமதி பெறவும்,

மேற்கண்ட 1 முதல் 9 இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.308/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.222/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: இ.பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்